# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)**

**பாடம் : தமிழ்**

**பகுதி : திருக்குறள்**

**©காப்புரிமை :**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)** க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

www.Padasalai.Net



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

# திருக்குறள்

- திருக்குறள் - திரு+குறள்
- இரண்டு அடிகளாலான குறள் வெண்பாக்களால் ஆனது.
- திருக்குறளை திருவள்ளுவர் எழுதினார்.
- திருக்குறள் முப்பால்களை கொண்டது.
- அவை

பிரிவுகள் :

1. அறத்துப்பால் - 38 அதிகாரங்கள் - 4 இயல்கள்
   - பாயிரவியல் - 4 அதிகாரங்கள்
   - இல்லறவியல் - 20 அதிகாரங்கள்
   - துறவறவியல் - 13 அதிகாரங்கள்
   - ஊழியல் - 1 அதிகாரம்
2. பொருட்பால் - 70 அதிகாரங்கள் - 3 இயல்கள்
   - அரசியல் - 25 அதிகாரங்கள்
   - அங்கவியல் - 32 அதிகாரங்கள்
   - ஒழிபியல் - 13 அதிகாரங்கள்
3. காமத்துப்பால் - 25 அதிகாரங்கள் - 2 இயல்கள்
   - களவியல் - 7 அதிகாரங்கள்
   - கற்பியல் - 18 அதிகாரங்கள்

- திருக்குறள் 133 அதிகாரங்களையும் 1330 குறள்களையும் கொண்டது.
- திருக்குறளில் பத்து அதிகாரப் பெயர்கள் உடைமை என்னும் சொல்லில் அமைத்துள்ளன.
- திருக்குறளுக்கும் ஏழு என்னும் எண்ணிற்கும் பெரிதும் தொடர்புள்ளது.
- உலக மொழியில் உள்ள அறநூல்களில் முதன்மையானது திருக்குறள்.
- இது பதினென்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.
- உலக மொழிகளில் பல மொழிகளில் மொழிப்பெயர்க்கப்பட்ட நூல் திருக்குறள். நூற்றெழு(107) மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net

- 'ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி ' இதில் நாலு என்பது நாலடியாரையும் , இரண்டு என்பது திருக்குறளின் அருமையையும் விளக்குகிறது.
- மலையச்துவசன் மகன் ஞானப்பிரகாசம் 1812-இல் திருக்குறளை முதன்முதலில் பதிப்பித்துத் தஞ்சையில் வெளியிட்டார்.

## சிறப்புப் பெயர்கள்:

1. உலகப் பொதுமறை
2. முப்பால்
3. வாயுறை வாழ்த்து
4. பொதுமறை
5. பொய்யாமொழி
6. தெய்வநூல்
7. தமிழ்மறை
8. முதுமொழி
9. உத்தரவேதம்
10. திருவள்ளுவம்

- திருவள்ளுவ மாலை என்பது திருக்குறளின் பெருமை குறித்துச் சான்றோர் பலர் பாடிய பாக்களின் தொகுப்பாகும்.
- திருக்குறளுக்கு சிறந்த உரை எழுதியவர் பரிமேலழகர் (மேலும் பலர் எழுதியுள்ளனர்)

அறத்துப்பால் - 38 அதிகாரங்கள்,

பொருட்பால் - 70 அதிகாரங்கள்,

இன்பத்துப்பால் - 25 அதிகாரங்கள் உள்ளன.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- விக்டோரியா மகாராணி, காலையில் கண்விழித்ததும் முதலில் படித்த நூல் திருக்குறள்.
- திருக்குறளுக்கு உரைசெய்த பதின்மர்:

1. தருமர்,
2. தாமத்தர்,
3. பரிதி,
4. திருமலையர்,
5. பரிப்பெருமாள்,
6. மணக்குதவர்,
7. நச்சர்,
8. பரிமேலழகர்,
9. மல்லர்,
10. காளிங்கர்.

சிறந்தது - பரிமேலழகர் உரை

தருமர் மணக்குடவர், தாமத்தர், நச்சர்,
பரிதி, பரிமே லழகர், - திருமலையர்,
மல்லர், பரிப்பெருமாள், கலிங்கர் வள்ளுவர்நூற்கு
எல்லையுரை செய்தார் இவர்

- திருக்குறளுக்கு உரை எழுதியவருள் காலத்தால் முந்தியவர் = தருமர்
- திருக்குறளுக்கு உரை எழுதியவருள் காலத்தால் பிந்தியவர் = பரிமேழலகர்
- மு.வ, நாமக்கல் கவிஞர், புலவர் குழந்தை ஆகியோரும் உரை எழுதியுள்ளனர்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

## திருவள்ளுவர்:



- திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர்.
- இவரது காலம் கி .மு.31 என்று கூறுவர் . இதை தொடக்கமாகக் கொண்டே திருவள்ளுவர் ஆண்டு கணக்கிடப்படுகிறது.
- இவரது ஊர் பெற்றோர் குறித்த முழுமையான செய்திகள் கிடைக்கவில்லை.
- இவர் சமண மதத்தைச் சார்ந்தவர் என்பது உறுதி.

**சிறப்புப்பெயர்கள்**

1. செஞ்ஞாப்போதார்,
2. தெய்வப் புலவர்,
3. நாயனார்,
4. முதற்பாவலர்,
5. நான்முகனார்,
6. மாதானுபாங்கி,
7. பெருநாவலர்,
8. பொய்யில் புலவர் என பல சிறப்புப் பெயர்களால் போற்றப்படுகிறார்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

திருவள்ளுவரின் காலம்:

- கி.மு.1 = வி.ஆர்.ஆர்.தீட்சிதர்
- கி.மு.31 = மறைமலை அடிகள்(இதனை நாம் பின்பற்றுகிறோம்)
- கி.மு.1-3 = இராசமாணிக்கனார்

திருக்குறள் மொழிப்பெயர்ப்பு;

- இலத்தின் = வீரமாமுனிவர்
- ஜெர்மன் = கிரால்
- ஆங்கிலம் = ஜி.யு.போப், வ.வே.சு.ஐயர், இராஜாஜி
- பிரெஞ்ச் = ஏரியல்
- வடமொழி =அப்பாதீட்சிதர்
- இந்தி = பி.டி.ஜெயின்
- தெலுங்கு = வைத்தியநாத பிள்ளை

சிறப்பு:

⇴ தமிழ் மனிதன் இனிய உயிர்நிலை என்று உலகோரால் பாராட்டப்படுகிறது

⇴ மனிதன் மனிதனாக வாழ மனிதன் மனிதனுக்குக் கூறிய அறவுரை திருக்குறள்.

⇴ அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த குறள் - அவ்வையார்

⇴ வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு - பாரதியார்

⇴ வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே - பாரதிதாசன்

⇴ இணையில்லை முப்பாலுக்கிந் நிலத்தே - பாரதிதாசன்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

⇝ உலகினில் நாகரிகம் முற்றிலும் அழிந்துவிட்டாலும் திருக்குறளும், கம்பன் காவியமும் இருந்தால் போதும் ; மீண்டும் அதனைப் புதுப்பித்துவிடலாம் - கால்டுவெல்

⇝ சோவியத்து அறிஞர் தால்சுதாய் வழிகாட்டுதலால், திருக்குறள் மூலத்தை நேரடியாகப் படிக்க விரும்பியே தமிழ் பயிலத் தொடங்கினேன் - காந்தியடிகள்

⇝ உருசிய நாட்டில் அணு துளைக்காத கிரெம்ளின் மாளிகையில் உள்ள சுரங்கப் பாதுகாப்புப் பெட்டகத்தில் திருக்குறளும் இடம் பெற்றுள்ளது.

⇝ இங்கிலாந்து நாட்டிலுள்ள அருங்காட்சியகத்தில் திருக்குறள் விவிலியத்துடன் வைக்கப்பட்டுள்ளது

⇝ இங்கிலாந்து நாட்டு மகாராணியார் விக்டோரியா , காலையில் கண் விழித்ததும் முதலில் படித்த நூல் திருக்குறள்

⇝ திருக்குறள் ஒரு வகுப்பார்க்கோ ஒரு மதத்தார்க்கோ ஒரு நிறத்தார்க்கோ ஒரு மொழியார்க்கோ ஒரு நாட்டார்க்கோ உரியதன்று . அது மன்பதைக்கு - உலகுக்குப் பொது -திரு.வி.க

⇝ திருவள்ளுவர் தோன்றியிராவிட்டால் , தமிழன் என்னும் ஓர் இனம் இருப்பதாக உலகத்தார்க்குத் தெரிந்திருக்காது. திருக்குறள் என்னும் ஒரு நூல் தோன்றியிராவிட்டால், ஒரு மொழி இருப்பதாக உலகத்தார்க்குத் தெரிந்திருக்காது - கி.ஆ.பெ.விசுவநாதம்.

1. "உடைமை" என்னும் பெயரில் 10 அதிகாரங்கள் உள்ளன.
2. 7 சீரால் அமைந்தது.
3. 7 என்னும் எண்ணுப்பெயர் 8 குறட்பாக்களில் உள்ளது.
4. அதிகாரங்கள் - 133 ⇒ 1+3+3 = 7
5. குறள்கள் - 1330 ⇒ 1+3+3+0 = 7



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

முக்கிய அடிகள்:

- அறத்தான் வருவதே இன்பம்
- மனத்துக்கண் மாசிலன் ஆகுதல் அறம்
- திருவேறு தெள்ளியராதலும் வேறு
- பெண்ணிற் பெருந்தக்க யாவுள்
- ஊழிற் பெருவழி யாவுள
- முயற்சி திருவினை யாக்கும்
- இடுக்கண் வருங்கால் நகுக
- கனியிருப்பக் காய் கவர்ந்தற்று
- அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்
- ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்

பதிப்பு:

- முதன்முதலில் பதிப்பித்து வெளியிட்டவர் - மலையத்துவசன் மகன் ஞானப்பிரகாசம்
- ஆண்டு - 1812
- இடம் - தஞ்சை

மொழிபெயர்ப்பு:

- 107 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.
- லத்தீன் - வீரமாமுனிவர்
- ஆங்கிலம் - ஜி.யு.போப்

பழமொழி:

- ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' இதில் நாலு என்பது நாலடியாரையும், இரண்டு என்பது திருக்குறளின் அருமையையும் விளக்குகிறது.
- பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

## திருவள்ளுவமாலை:

**நூல் குறிப்பு:-**

- திருக்குறளின் சிறப்பினை உணர்த்த திருவள்ளுவமாலை என்னும் நூல் எழுந்தது.
- இந்நூலில் ஐம்பத்தைந்து பாடல்கள் உள்ளன.
- ஐம்பத்து மூன்று புலவர்கள் பாடியுள்ளனர்.
- "திணையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்டபனையளவு காட்டும் படித்தால்; - மனையளகு வள்ளைக் (கு) உறங்கும் வளநாட ! வள்ளுவனார் வெள்ளைக் குறட்பா வரி" -- கபிலர்

### அன்புடைமை

**1.அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்**
**புன்கணீர் பூசல் தரும்.**
*விளக்கம்: அன்புக்குரியவர்களின் துன்பத்தை பார்த்து நம் கண்களில் கண்ணீராக வெளிபடுவது அன்பு.*

**2.அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு.**
*விளக்கம்: அன்பு இல்லாதவர் எல்லா பொருளும் தனக்குரியது என்று எண்ணுவர்.அன்புஉடையவர் பிறர் துன்பம் அடையும் போது தன் உயிரையும் கொடுத்து உதவுவார்.*

**3.அன்போடு இயைந்த வழக்குஎன்ப ஆருயிர்க்கு**
**என்போடு இயைந்த தொடர்பு.**
*விளக்கம்: உயிர் கொண்ட உடம்பின் பயன் பிறரிடம் அன்பு செலுத்தவே.அவ்வன்பை நம் வாழ்வில் வளர்ந்து கொள்ள வேண்டும்.*



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**4.அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்**
**நண்புஎன்னும் நாடாச் சிறப்பு.**
*விளக்கம்: அன்பு என்பது பிறரை நண்பராக்க உதவும்.அந்த அன்பானது இந்த உலகத்தையே தன்வயமாக்கும்.*

**5.அன்புற்று அமர்ந்த வழக்குஎன்ப வையகத்து**
**இன்புற்றார் எய்தும் சிறப்பு.**
*விளக்கம்: உலகத்தில் இன்பமும் சிறப்பும் பெற்று ஒருவன் வாழ்வது அன்பின் பயனே ஆகும்.*

**6.அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்**
**மறத்திற்கும் அஃதே துணை.**
*விளக்கம்: அன்பு என்பது பகையை வெல்வும்,நட்பை வளர்க்கவும் உதவுகிறது*

**7.என்பி லதனை வெயில்போலக் காயுமே**
**அன்பி லதனை அறம்.**
*விளக்கம்: எலும்பு இல்லாத புழுக்கள் வெயிலில் அழிவது போல அன்பில்லாதவர்களும் அழிவர்.*

**8.அன்பகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்**
**வற்றல் மரம்தளிர்த் தற்று.**
*விளக்கம்: பாலை நிலத்தில் வாடிபோன மரம் தளிர்க்காது.அதுபோல அன்பு இல்லாத மனிதர் வாழ்ந்தும் வாழாதவர்களாக கருதப்படுவர்.*

**9.புறத்துறப்பு எல்லாம் எவன்செய்யும் யாக்கை**
**அகத்துறுப்பு அன்பி லவர்க்கு.**
*விளக்கம்: அன்பு இல்லாதவர்களுக்கு மெய்,வாய்,கண்,மூக்கு,செவி ஆகியவை இருந்தும் பயன்இல்லை என்பதாம்.*

**10.அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு**
**என்புதோல் போர்த்த உடம்பு.**
*விளக்கம்: அன்பு உடையவரை உயிர் உள்ளவராக கருதுவர்.அன்பு இல்லாதவரை பிணமாக கருதுவர்.*



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

## பண்புடைமை

**1.எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்**
**பண்புடைமை என்னும் வழக்கு.**
*விளக்கம்: எல்லாரிடமும் எளிமையாகப் பழகினால் பண்புடைமை என்னும் நன்னெறியை அடைவது எளிது.*

**2.அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்**
**பண்புடைமை என்னும் வழக்கு.**
*விளக்கம்: அன்புடைமையும் நல்இலக்கணமும் உடைய குடியில் பிறந்தவர்கள் பண்புடையவர்களாவர்.*

**3.உறுப்பொத்தல் மக்களொப்பு அன்றால் வெறுத்தக்க**
**பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு.**
*விளக்கம்: உயிரோடு பொருந்திய பண்பினை கொண்டிருப்பது உண்மையான ஒப்பாகும்.*

**4.நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்**
**பண்புபா ராட்டும் உலகு.**
*விளக்கம்: நேர்மையையும் நன்மையையும் கொண்டு பிறர்க்கு உதவும் பண்பை உலகம் விரும்பி போற்றும்.*

**5.நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்**
**பண்புள பாடறிவார் மாட்டு.**
*விளக்கம்: விளையாட்டாக ஒருவரை இகழ்ந்து பேசுவது துன்பத்தை தரும்.பிறர் துன்பத்தை அறிந்து நடப்பவரிடத்தில் பகைமையிருப்பினும் நல்ல பண்புகள் இருக்கும்.*

**6.பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுவின்றேல்**
**மண்புக்கு மாய்வது மன்.**
*விளக்கம்: உலகம் பண்புடையவர்களாலே இயங்கி வருகிறது.அஃது இல்லையெனில் மண்ணோடு மண்ணாகி மறைந்து போகும்.*



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**7.அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்**
**மக்கட்பண்(பு) இல்லா தவர்.**
*விளக்கம்: அரம்போன்ற அறிவுடையாராயினும் மக்களுக்குரிய பண்பு இல்லாதவர் ஓரறிவு கொண்ட மரத்தை போன்றவர் ஆவர்.*

**8.நண்பாற்றா ராகி நயமில செய்வார்க்கும்**
**பண்பாற்றா ராதல் கடை.**
*விளக்கம்: தம்மோடு நட்புக் கொள்ளாது தீமை செய்பவரிடத்திலும் பண்புடையவராய் நடந்து கொள்ளாமை மிகவும் இழிவான செயலாகும்.*

**9.நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்**
**பகலும்பாற் பட்டன் றிருள்.**
*விளக்கம்: யாரிடமும் பழகிச் பேச இயலாதவருக்கு இவ்வுலகம் பட்டப் பகலிலும் இருள் நிறைந்திருப்பாதாகவே தோன்றும்.*

**10.பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்**
**கலந்தீமை யாலதிரிந் தற்று.**
*விளக்கம்: பண்பில்லாதவன் பெற்ற பெருஞ்செல்வம் யாருக்கும் பயன்படாது போனால்,நல்ல பால் கலத்தின் குற்றத்தால் திரிவது போன்றது.*

## கல்வி

**1.கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக.**
*விளக்கம்: நூல்களை குற்றமறப் படிக்க வேண்டும். படிப்புக்கு தக்கவாறு நன்னெறியில் நிற்க வேண்டும்.கற்கும் முறையில் நடக்க வேண்டும்.*

**2.எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்என்ப வாழும் உயிர்க்கு**
*விளக்கம்: எண் எனப்படும் கணக்கும்,சொல்லும் பொருளும் தரும் இலக்கியமும்,மனிதனுக்கு இரு கண் போன்றது.*



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**3.கண்உடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு**
**புண்உடையர் கல்லா தவர்.**
*விளக்கம்: படித்த அறிவாளிகளே கண்களை உடையவர்கள்,படிக்காத அறிவிலிகள் முகத்தில் இரு புண்ணுடையவர்கள்.*

**4.உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்**
**அனைத்தே புலவர் தொழில்.**
*விளக்கம்: புலவர்களுடன் பேசும் போது மகிழ்ச்சியாக இருப்பதும், அவரை விட்டு பிரியும் போது இவரை இனி எப்பொழுது காண்போம் என எண்ணுவதும், புலவர்களின் தொழிலாகும்.*

**5.உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்**
**கடையரே கல்லா தவர்.**
*விளக்கம்: செல்வர்கள் முன் ஏழைகள் பணிவாக நடந்து கொள்வது போல கற்றவர்கள் முன் மக்கள் பணிவாக நடந்து கொள்ள வேண்டும்.கல்லாதவர் செல்வம் இருந்தும் இல்லாதவராக கருதப்படுவர்.*

**6.தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத்து ஊறும் அறிவு.**
*விளக்கம்: மணல் நிறைந்த இடத்தில் தோண்ட நல்ல தண்ணீர் கிடைக்கும்.அதுபோல நூல்களைக் கற்கக் கற்க அறிவு வளரும்.*

**7.யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்**
**சாந்துணையும் கல்லாத வாறு.**
*விளக்கம்: கல்வி கற்றவனுக்கு எந்த நாடும் தன் நாடாம்,எந்த ஊரும் தன் ஊராம்.அப்பிடியிருக்க,சிலர் சாகும் வரை கல்வி கற்காமல் இருப்பது ஏன் என தெரியவில்லை.*

**8.ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப்பு உடைத்து.**
*விளக்கம்: ஒரு பிறப்பில் படிக்கும் படிப்பு,ஏழேழு பிறவிக்கும் உதவும் என்பதே.*



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**9.தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு**
**காமுறுவர் கற்றறிந் தார்.**
*விளக்கம்: கல்வியால் உலகம் இன்பம் அடையும்.அதைக் கண்டு கற்றவர்கள் மேலும் கல்வி கற்க விரும்புவர்.*

**10.கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்றை யவை.**
*விளக்கம்: ஒருவனுக்கு அழியாத செல்வம் கல்வி ஆகும்.மற்ற செல்வங்கள் எல்லாம் அழிந்து போகும்.கல்வியே சிறந்த செல்வம் ஆகும்.*

## கேள்வி

**(சான்றோர் உரைகளைக் கேட்டல்)**

**1. செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்**
**செல்வத்துள் எல்லாம் தலை.**
*விளக்கம்: செல்வங்களுள் சிறப்பான செல்வம் கேள்விச் செல்வமாகும்.அதுவே எல்லா செல்வத்தை விடவும் சிறந்த செல்வமாகும்.*

**2.செவிக்குணவு இல்லாத போழ்து சிறிது**
**வயிற்றுக்கும் ஈயப் படும்.**
*விளக்கம்: வயிற்று பசியை போக்க உணவு தேவை.அதுபோல அறிவு என்னும் பசியை போக்க கேள்வி என்னும் உணவு தேவை.*

**3.செவியுணவின் கேள்வி உடையார் அவியுணவின்**
**ஆன்றாரோ டொப்பர் நிலத்து.**
*விளக்கம்: செவி உணவாகிய கேள்வியினை உடையவர்கள் இந்த உலகத்தில் வாழ்ந்தால்,அவரை தேவர்களோடு ஒப்புவித்து மதிப்பர்.*

**4.கற்றிலன் ஆயினும் கேட்க அஃதொருவற்(கு)**
**ஒற்கத்தின் ஊற்றாந் துணை.**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

*விளக்கம்: நூல்களை கற்கவில்லை என்றாலும் கற்றவர்களிடம் கேட்டு அறிந்து கொள்ள வேண்டும்.அது நம் வாழ்வில் தளர்ச்சி வரும் போது சிறந்த துணையாக இருக்கும்.*

**5.இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே**
**ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்.**
*விளக்கம்: ஒழுக்கம் உடையவர்களின் சொற்கள் வழுக்கல் உடைய நிலத்தில் நடப்போர்க்கு ஊன்றுகோல் போல உதவி புரியும்.*

**6.எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்**
**ஆன்ற பெருமை தரும்.**
*விளக்கம்: நல்லோர் சொல்லும் செய்தி சிறிதளவாக இருந்தாலும்,அது அளவுக்கு மீறிய பெருமையைத் தரும்.*

**7.பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துணர்ந்(து)**
**ஈண்டிய கேள்வி யவர்.**
*விளக்கம்: கேள்வி அறிவு உள்ளவர்கள் ஒற்றை தவறாக உணர்ந்தாலும் அறநெறிக்கு மாறாக பேச மாட்டார்கள்.*

**8.கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்**
**தோட்கப் படாத செவி.**
*விளக்கம்: கேள்வியால் துளையிடப்படாத காது கேட்கும் விருப்பம் இல்லையென்றால் செவிட்டுத் தன்மைக் கொண்ட காதாகக் கருதப்படும்.*

**9.நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய**
**வாயின ராதல் அரிது.**
*விளக்கம்: நுட்பமான கருத்துக்களைக் கேட்டு அறியாதவர் நல்ல சொற்களைப் பேசுதல் அரிது.*

**10.செவியின் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்**
**அவியினும் வாழினும் என்.**
*விளக்கம்: செவியால் உணரகூடிய சுவையை உணராது,வாய் சுவையை மட்டும் கொண்டவர்களை மக்கள் என்று கருதமாட்டார்கள்,மாக்கள் என்றே கருதுவர்.*



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

## அறிவுடைமை

**1.அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்**
**உள்ளழிக்க லாகா அரண்.**
*விளக்கம்: அறிவு என்பது அழிவிலிருந்து நம்மை காக்கும் கருவியாகும்.பகைவர்களால் அழிக்க முடியாத கருவியாகும்.*

**2.சென்ற இடத்தாற் செலவிடா தீதொரீஇ**
**நன்றின்பா லுய்ப்பது தறிவு.**
*விளக்கம்: மனம் போகும் பாதையில் தானும் போகாமல்,தீமையை விட்டு நன்மையானவற்றை செய்வதே சிறந்த அறிவாகும்.*

**3.எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு.**
*விளக்கம்: ஏதாவது ஒரு செய்தியை யார் கூறினாலும்,அச்செய்தியின் கருத்தை ஆராய்ந்து அறிவது அறிவு ஆகும்.*

**4.எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்**
**நுண்பொருள் காண்ப தறிவு.**
*விளக்கம்: தான் சொல்லும் கருத்தை மற்றவர்கள் எளிதாக புரியவும்,மற்றவர்கள் சொல்லும் கருத்தை புரிந்து கொள்வதும்,அறிவுடையார்களின் செயலாகும்.*

**5.உலகந் தழீஇயது தொட்பம் மலர்தலுங்**
**கூம்பலு இல்ல தறிவு.**
*விளக்கம்: உலகத்தை புரிந்து நடப்பதே சிறந்த அறிவு.தெளிவும்,கலக்கமும் மாறிமாறி வந்தாலும் ஒரே சீராக இருப்பதே அறிவு.*

**6.எவ்வ துறைவ துலக முலகத்தோ**
**டவ்வது துறைவ தறிவு.**
*விளக்கம்: உலகத்தோடு ஒத்து நடப்பதே அறிவாகும்.எனக்கு எல்லாம் தெரியும் என்று யார் கூறுவதையும் கேட்கமல் இருந்தால் பாவமும் பழியும் வந்து சேரும்.*



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**7.அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்**
**அஃதறி கல்லா தவர்.**
*விளக்கம்: அறிவுடையவர்கள்,எதிர்காலத்தில் வர போவதை அறிந்து செயல்படுவர்.அறிவில்லாதவர் பின்விளைவை நோக்காது செயல்படுவர்.*

**8.அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவ**
**தஞ்சல் அறிவார் தொழில்.**
*விளக்கம்: அஞ்சத்தக்கதைக் கண்டு அஞ்சுவது அறிவுடையார்களின் செயலாகும்.அஞ்சாமல் இருப்பது அறிவில்லாதவர்களின் செயலாகும்.*

**9.எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு கில்லை**
**அதிர வருவதோர் நோய்.**
*விளக்கம்: பின்வர போவதை முன்னே அறிந்து தன்னை காத்து கொள்பவர்கள் அறிவுடையவர்கள்,அவர்களுக்கு எந்த துன்பமோ நோயோ வராது.*

**10.அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார்**
**என்னுடைய ரேனும் மிலர்.**
*விளக்கம்: அறிவுடையவர் எல்லாம் உடையவராக கருதப்படுவர்,அறிவு இல்லாதவரிடம் எல்லாம் இருந்தும் ஒன்றும் இல்லாதவராகவே கருதப்படுவர்.*

## அடக்கமுடைமை

**1.அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை**
**ஆரிருள் உய்ந்து விடும்.**
*விளக்கம்: அடக்கம் ஒருவனை உயர்ந்த இடத்தில் வைக்கும்.அடக்கம்இல்லாதவனை இருள் கொண்ட வாழ்க்கை சூழ்ந்து விடும்.*

**2.காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்**
**அதனினூஉங் கில்லை உயிர்க்கு.**
*விளக்கம்: அடக்கத்தை ஒரு செல்வமாக மதித்துக் காக்க வேண்டும்.அடக்கத்தை உயிரினும் மேலாக கருதுவர்.*



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**3.செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்**
**தாற்றி னடங்கப் பெறின்.**
*விளக்கம்: அறிய வேண்டியவற்றை அறிந்து நடப்பதே அறிவுடைமை ஆகும்.அவ்வாறு நடந்தால் பாராட்டும்,புகழும் கிடைக்கும்.*

**4.நிலையிற் றிரியாது அடங்கியான் தோற்றம்**
**மலையினும் மாணப் பெரிது.**
*விளக்கம்: ஐம்புலன்களை தன் நிலையிலிருந்து மாறுபடாமல் அடக்கி வாழ்பவனுடைய உயர்வு மலையை விடப் பெரியதாகும்.*

**5.எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்**
**செல்வர்க்கே செல்வந் தகைத்து.**
*விளக்கம்: ஒருவன் எல்லாரையும் பணிந்து நடந்தால் அது அவனுக்கு நன்மை பயக்கும்.செல்வத்தை விட மிகப் பெரிய செல்வமாக கருதப்படும்.*

**6.ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்**
**எழுமையும் ஏமாப் புடைத்து.**
*விளக்கம்: ஒரு பிறவியில் ஆமையைப் போல ஐம்பொறிகளையும் அடக்கி வாழ்ந்தால்,அது அவனுக்கு மறு பிறவியிலும் நல்ல பயன் தரும்.*

**7.யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்**
**சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.**
*விளக்கம்: ஒருவன் தன் நாவை அடக்கி காக்க வேண்டும்.அவ்வாறு காக்க விட்டால் சொற்குற்றம் ஏற்பட்டு துன்புறுவர்.*

**8.ஒன்றானுந் தீச்சொற் பொருட்பய னுண்டாயின்**
**நன்றாகா தாகி விடும்.**
*விளக்கம்: ஒருவன் தீய சொற்களால் பிறரை துன்பப் படுத்தினால்,அது அவனுக்கு வரும் நன்மையும் தீமையாக முடியும்.*

**9.தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினாற் சுட்ட வடு.**
*விளக்கம்: தீயினால் சுட்டபுண் உடம்பில் ஆறி விடும்.ஆனால் நாவினால் பேசுவது மனத்தில் ஆறாத வடுவாக இருக்கும்.*



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**10.கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி**
**அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து.**
*விளக்கம்: யாரிடமும் கோபம் கொள்ளாது அடக்கம் உடையவனாக வாழ்ந்தால்,அறக்கடவுள் காலம் பார்த்துக் காத்திருப்பார்.*

## ஒழுக்கமுடைமை
## (நல்ல நடத்தை உடையவராதல்)

**1.ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்.**
*விளக்கம்: ஒருவனுக்கு அனைத்துச் சிறப்புகளையும் தருவது ஒழுக்கமே.அவ்வொழுக்கத்தை உயிரினும் மேலானதாகக் கருதிக் காத்துக் கொள்ளவேண்டும்.*

**2.பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்**
**தேரினும் அஃதே துணை.**
*விளக்கம்: ஒருவன் ஒழுக்கமாக நடப்பது கடினமானது.ஒழுக்கத்தோடு நடத்தால் அது அவனுக்கு நல்ல துணை தரும்.*

**3.ஒழுக்கம் முடைமை குடிமை இழுக்கம்**
**இழிந்த பிறப்பாய் விடும்.**
*விளக்கம்: ஒருவன் ஒழுக்கமாக இருந்தால் அது அவனுக்கும்,அவன் குடும்பத்திற்கும் பெருமைத் தரும்.ஒழுக்கம் இல்லாதிருந்தால் உயர்குடியில் பிறந்தாலும் இழிவாகவே பேசப்படுவர்.*

**4.மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்**
**பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.**
*விளக்கம்: ஒருவன் கற்ற கல்வியை மறந்து விட்டால் மீண்டும் கற்று கொள்ள முடியும்.ஆனால் ஒழுக்கத்தை இழந்து நடந்தால் அது அவன் சிறப்பை அழித்து விடும்.*

**5.அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை**
**ஒழுக்கம் இலான்கண் உயர்வு.**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

*விளக்கம்: பொறாமைக்குணம் உடையவரிடம் வளர்ச்சி இருக்காது.அதுபோல ஒழுக்கம் இல்லாதவனிடம் உயர்வு இருக்காது.*

**6.ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்**
**ஏதம் படுபாக் கறிந்து.**
*விளக்கம்: ஒழுக்கம் தவறுவதால் ஏற்படும் இழிவை அறிந்தவர்கள்,அவ்வொழுக்கத்திலிருந்து தன்னை காத்து கொள்வர்.*

**7.ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்**
**எய்துவர் எய்தாப் பழி.**
*விளக்கம்: ஒழுக்கம் உடையவர்களை இவ்வுலகம் புகழ்ந்து பாராட்டும் ஒழுக்கம் இல்லாதவர்கள் செய்யாத குற்றங்களுக்கு பழியும் பாவமும் அடைவர்.*

**8.நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்**
**என்றும் இடும்பை தரும்.**
*விளக்கம்: நல்ல ஒழுக்கம் என்பது நன்மையை தரும் விதையாகும்.தீய ஒழுக்கம் என்பது துன்பத்தை விளைவிக்கும்.*

**9.ஒழுக்கம் உடையவர்க் கொல்லாவே தீய**
**வழுக்கியும் வாயாற் சொலல்.**
*விளக்கம்: ஒழுக்கம் உடையவர்கள் தம் வாயினால் பிறர்க்கு தீமை தரும் சொற்களை பேச மாட்டார்கள்.*

**10.உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்**
**கல்லார் அறிவிலா தார்.**
*விளக்கம்: ஒழுக்கம் இல்லாதவர்கள் உலகியல் கல்வியை எவ்வளவு கற்றாலும் அறிவில்லாதவராகவே கருதப்படுவர்.*

## பொறையுடைமை

### (பிறர் செய்யும் துன்பங்களை பொறுத்தல்)

**1.அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
**இகழ்வார்ப் பொறுத்தல் தலை.**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

*விளக்கம்: நிலமானது தன்னைத் தோண்டுபவரை தாங்குவது போல,நம்மை இகழ்பவரை பொறுத்துக் கொள்வது சிறந்த செயலாகும்.*

**2.பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை**
**மறுத்தல் அதனினும் நன்று.**

*விளக்கம்: ஒருவர் நமக்கு செய்யும் தீமையை பொறுத்துக் கொள்வதை விட மறந்து விடுவது நல்ல செயலாகும்.*

**3.இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்**
**வன்மை மடவார்ப் பொறை.**

*விளக்கம்: விருந்தினரை வரவேற்க முடியாத நிலை ஒருவனுக்கு வறுமையை விட மிகப் பெரிய வறுமை ஆகும்.அதுபோல அறிவு இல்லாதவர்கள் செய்யும் குற்றத்தைப் பொறுத்துக் கொள்வது வலிமையுள் சிறந்த வலிமையாகும்.*

**4.நிறையுடைமை நீங்காமை வேண்டின்,பொறையுடைமை**
**போற்றி ஒழுகப் படும்.**

*விளக்கம்: நற்குணங்கள் நம்மை விட்டு நீங்காமல் இருக்க பொறுமையை இழக்காமல் காத்து கொள்ள வேண்டும்.*

**5.ஒறுத்தாரை ஒன்றாக வையாரே, வைப்பர்**
**பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.**

*விளக்கம்: தீமை செய்தவரை பொறுத்துக் கொள்ளாது தண்டிப்பவரை மதிக்கமாட்டார்கள்.ஆனால் அத்தீங்கை பொறுத்துக் கொள்பவரை பொன்னை போல மதித்து போற்றுவர்.*

**6.ஒறுத்தார்க் கொருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்**
**பொன்றும் துணையும் புகழ்.**

*விளக்கம்: தீங்கு செய்தவரைப் பொறுத்து கொள்ளாது தண்டிப்பது அந்த ஒருநாள் மட்டுமே மகிழ்ச்சி தரும்.அதை பொறுத்து கொண்டவர்களுக்கு உலகம் அழியும் வரை புகழ் உண்டாகும்.*

**7.திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்(து)**
**அறனல்ல செய்யாமை நன்று.**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

*விளக்கம்: அறியாமையால் ஒருவர் செய்யும் தீமையை எண்ணி வருந்தித் தாமும் தீமை செய்யாது பொறுத்துக் கொள்வது சிறந்த பண்பாகும்.*

**8.மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்**
**தகுதியான் வென்று விடல்.**
*விளக்கம்: மடமையால் தமக்கு தீமை செய்தவரை பொறுமையாக இருந்து வெற்றி கொள்ளல் வேண்டும்.*

**9.துறுந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்**
**இன்னாச்சொல் நோற்கிற் பவர்.**
*விளக்கம்: கொடிய சொற்களை பேசுபவர்கள் முன் பொறுமையாக இருப்பது துறவிகளை விட மேலாகக் கருதுவர்.*

**10.உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்**
**இன்னாச்சொல் நோற்பாரின் பின்.**
*விளக்கம்: நோன்பு இருப்பவர்களை விடத் தம்மை இகழ்பவர்களை பொறுத்து கொள்பவர்களை மேலானவர்களாகக் கருதுவர்.*

## நட்பு

**1.செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்**
**வினைக்கரிய யாவுள காப்பு.**
*விளக்கம்: நட்பை கொண்டு செய்கின்ற செயலுக்குச் சிறந்த பாதுகாப்பு உண்டு.*

**2.நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்**
**பின்நீர பேதையார் நட்பு.**
*விளக்கம்: அறிவுடையவர்களின் நட்பு வளர்பிறை போல வளர்ந்து கொண்டு போகும்.அறிவு இல்லாதவர்கள் நட்பு தேய்பிறை போல தேய்ந்துக் கொண்டு போகும்.*

**3.நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்**
**பண்புடை யாளர் தொடர்பு.**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

*விளக்கம்: நல்ல நூல்களை கற்கக் கற்க இன்பம் தரும்.அதுபோல பண்புடையவர்களோடு பழகக் பழக இன்பம் தரும்.*

**4.நகுதல் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்**
**மேற்சென்று இடித்தற் பொருட்டு.**

*விளக்கம்: நட்பு என்பது பேசி சிரிப்பதற்கு மட்டுமல்ல, மற்றவர்கள் செய்யும் தவறுகளை கூறி அவர்களை திருத்தவும் நட்பு உதவும்.*

**5.புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்**
**நட்பாங் கிழமை தரும்.**

*விளக்கம்: ஒருவரோடு ஒருவர் பேசி பழகுவது நட்பு ஆகாது.அவர்களோடு ஒத்த மனப்பான்மையோடு செயல்படுவதே நட்பு ஆகும்.*

**6.முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து**
**அகநக நட்பது நட்பு.**

*விளக்கம்: முகம் மட்டும் மலருவது நட்பாகாது.உள்ளமும் மலரும்படி அன்பு கொண்டு நடப்பதே நட்பு ஆகும்.*

**7.அழிவி னவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண்**
**அல்லல் உழப்பதாம் நட்பு.**

*விளக்கம்: நண்பன் தீய வழியில் சென்றால் அவனை நல்ல வழியில் நடக்க செய்வதும், அவனுக்கு ஒரு துன்பம் என்றால் தானும் வருந்துவதே நட்பு.*

**8.உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு.**

*விளக்கம்: நண்பனுக்குத் துன்பம் ஏற்பட்டால் அதை நீக்கி அவனுக்கு உதவி செய்வதே உண்மையான நட்பாகும்.*

**9.நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்பின்றி**
**ஒல்லும்வாய் ஊன்றும் நிலை.**

*விளக்கம்: எந்த ஒரு எதிர்பார்ப்பும் இன்றி நண்பனுக்கு உதவி செய்து தாங்குவது சிறந்த நட்பாகும்.*

**10.இனையர் இவர்எமக்கு இன்னம்யாம் என்று**
**புனையினும் புல்லென்னும் நட்பு.**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

*விளக்கம்: இவர் எனக்கு இத்தன்மையானவர்,நாம் இவர்க்கு இத்தன்மையானவர் என்று ஒருவரை ஒருவர் புகழ்ந்து பேசுவதால் நட்பு தன் சிறப்பை இழந்து விடும்.*

## வாய்மை

**1.வாய்மை எனப்படுவ(து) யாதெனின் யாதொன்றும்**
**தீமை இலாத சொலல்.**
*விளக்கம்: வாய்மை என்பது மற்றவர்களுக்கு தீமை பயக்கும் சொற்களை பேசாமல் நன்மை செய்வதே ஆகும்.*

**2.பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த**
**நன்மை பயக்கு மெனின்.**
*விளக்கம்: ஒருவனுக்கு பொய்யான ஒன்றை கூறி அவனுக்கு நன்மை பயக்கும் என்றால் அதுவே வாய்மை எனப்படும்.*

**3.தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்**
**தன்நெஞ்சே தன்னைச் சுடும்.**
*விளக்கம்: ஒருவன் மனசாட்சிக்கு விரோதமாக பொய் கூறினால்,அதுவே அவன் நெஞ்சை வருந்தி கொண்டிருக்கும்.*

**4.உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்**
**உள்ளத்துள் எல்லாம் உளன்.**
*விளக்கம்: ஒருவன் பொய் கூறாது வாழ்ந்தால் அவனை இவ்வுலகம் பாராட்டும்,எல்லார் உள்ளங்களிலும் இருப்பான்.*

**5.மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு**
**தானம்செய் வாரின் தலை.**
*விளக்கம்: உள்ளத்திலும்,பேச்சிலும் தூய்மையாக இருப்பவரை தானம் தவம் செய்பவரைக் காட்டிலும் உயர்வாகக் கருதுவர்.*

**6.பொய்யாமை அன்ன புகழ்இல்லை எய்யாமை**
**எல்லா அறமும் தரும்.**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

*விளக்கம்: ஒருவன் எந்த சூழ்நிலையிலும் பொய் பேசாமல் இருந்தால்,அவனுக்கு புகழும் நன்மையும் வந்து சேரும்.*

**7.பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற**
**செய்யாமை செய்யாமை நன்று.**
*விளக்கம்: பொய் சொல்லாது வாழ்ந்தால்,தான தருமங்கள் செய்யாமல் எல்லா அறங்களும் ஒரு சேர வந்து விடும்.*

**8.புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை**
**வாய்மையால் காணப் படும்.**
*விளக்கம்: உடம்பு நீரால் தூய்மை அடையும்.அதுபோல,மனம் வாய்மையால் தூய்மை அடையும்.*

**9.எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்**
**பொய்யா விளக்கே விளக்கு.**
*விளக்கம்: விளக்கானது இருளை நீக்கி வெளிச்சைத்தைத் தருவது போல,வாய்மை என்னும் விளக்கு சான்றோர்க்கு நல்ல புகழை தரும்.*

**10.யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்**
**வாய்மையின் நல்ல பிற.**
*விளக்கம்: உண்மை பேசுவதே இவ்வுலகில் பெரிய அறமாகக் கருதப்படுகிறது.அதுவே வாய்மையின் தலைமைப்பண்பாக விளங்குகிறது.*

## காலமறிதல்

**(செயலை நிறைவேற்றுவதற்கு ஏற்ற காலத்தை அறிதல்)**

**1.பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்**
**வேந்தர்க்கு வேண்டும் பொழுது.**
*விளக்கம்: காகம் தன்னை விட வலிமையான கோட்டானை பகலில் வெல்லும்.அதுபோல பகைவரை வெல்ல அரசன் காலம் அறிந்து செயல்பட வேண்டும்.*

**2.பருவத்தோ டொட்ட ஒழுகல் திருவினைத்**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**தீராமை யார்க்குங் கயிறு.**

*விளக்கம்: ஒரு செயலை காலம் அறிந்து செய்வதால் செல்வத்தை தம்மை விட்டு நீங்காமல் கட்டி வைக்கும் கயிறாக காலம் உதவுகிறது.*

**3.அருவினை என்ப உளவோ கருவியாற்**
**காலம் அறிந்து செயின்.**

*விளக்கம்: ஒரு செயலை தொடங்க அதற்கான காலமும் கருவியையும் அறிந்து செயல்பட்டால் வெற்றி கிடைக்கும்.*

**4.ஞாலம் கருதினுங் கைகூடும் காலம்**
**கருதி இடத்தாற் செயின்.**

*விளக்கம்: காலத்திற்காகக் காத்திருந்து இடம் அறிந்து செயல்பட்டால் இவ்வுலகத்தையே வெல்ல முடியும்.*

**5.காலம் கருதி இருப்பர் கலங்காது**
**ஞாலம் கருது பவர்.**

*விளக்கம்: இவ்வுலகத்தை ஆள நினைப்பவர் அதற்கான காலம் வரும் வரை காத்திருப்பர்.*

**6.ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்**
**தாக்கற்குப் பேருந் தகைத்து.**

*விளக்கம்: ஊக்கம் உடையவன் காலத்தை எதிர்பார்த்து பொறுமையாக இருப்பது,ஆடு தன் எதிரியை தாக்க பின்வாங்கி சென்று தாங்குவது போல தாங்கி வெற்றி பெறுவான் என்பதே.*

**7.பொள்ளேன ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்**
**துள்வேர்ப்பர் ஒள்ளி யவர்.**

*விளக்கம்: அறிவுடையவர் தன் பகைவர் தீங்கு செய்தால் உடனே கோபம் கொள்ளாமல் அதை மனதில் வைத்துக் கொண்டு தக்க காலம் வரும் வரை காத்திருப்பர்.*

**8.செறுநரைக் காணின் சுமக்க இறுவரை**
**காணின் கிழக்காம் தலை.**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

*விளக்கம்: தமக்கு தீங்கு செய்தவரை பார்க்கும்போது பணிவாக நடந்து கொள்ள வேண்டும்.அவர்களுக்கு முடிவுகாலம் வரும் போது கெட்டு அழிவார்கள்.*

**9.எய்தற் கரிய தியைந்தக்கால் அந்நிலையே**
**செய்தற் கரிய செயல்.**
*விளக்கம்: செய்தற்கரிய செயலை செய்ய அரிய வாய்ப்பு கிடைக்கும் போதே செய்து முடித்தல் வேண்டும்.*

**10. கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்**
**குத்தொக்க சீர்த்த இடத்து.**
*விளக்கம்: கொக்கு இரைக்கு காத்திருத்து இரை வந்ததும் விரைந்து செயல்படுவது போல நாமும் காத்திருந்து செயல்பட வேண்டும்.*

## வலியறிதல்

**1.வினைவலியுந் தன்வலியு மாற்றான் வலியுந்**
**துணைவலியுந் தூக்கிச் செயல்.**
*விளக்கம்: ஒரு செயலை செய்யும் முன் தன் வலிமையும் பகைவர் வலிமையும் துணை நிற்பவர் வலிமையும் ஆராய்ந்து செய்ய வேண்டும்.*

**2.ஒல்வ தறிவ தறிந்ததன் கண்தங்கிச்**
**செல்வார்க்குச் செல்லாத தில்.**
*விளக்கம்: ஒரு செயலை மேற்கொள்ளும் போது,அதை பற்றி நன்கு அறிந்து தெரிந்து செயல்படுவதால் அச்செயல் நன்றாக முடியும் என்பதே.*

**3.உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி**
**இடைக்கண் முரிந்தார் பலர்.**
*விளக்கம்: தன்னுடைய பலத்தை அறிந்து செயல்பட வேண்டும்.அவ்வாறு செயல்படாமல் தோல்வி அடைத்தவர்கள் பலர்.*

**4.அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை**
**வியந்தான் விரைந்து கெடும்.**
*விளக்கம்: எதிரியின் வலிமையை தெரிந்து கொள்ளாமல் தன்னை பெருமை பாராட்டுபவன் விரைவில் கெட்டு அழிவான்.*



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**5.பீலிபெய் சாகாடு மச்சிறு மப்பண்டஞ்**
**சால மிகுத்துப் பெயின்.**
*விளக்கம்: மயில் இறகை அளவுக்கு மிகுதியாக வண்டியில் ஏற்றினால் அச்சு முறியும்.அதுபோல வலிமைமிக்கவன் பகைவரிடம் அளவுக்கு மீறி பகை கொண்டால் அழிந்து விடுவான்.*

**6.நுனிக்கொம்ப ரேறினா ரஃதிறந் தூக்கி**
**னுயிர்க்கிறுதி யாகி விடும்.**
*விளக்கம்: மரத்தின் நுனிக்கொம்பில் ஏற நினைப்பது உயிர்க்கே அழிவை உண்டாக்கும்.எதிரியை அழிக்க எல்லை மீறி முயற்சி செய்வது அழிவை உண்டாக்கும்.*

**7.ஆற்றி னளவறிந் தீக அதுபொருள்**
**போற்றி வழங்கும் நெறி.**
*விளக்கம்: தன்னிடம் இருக்கும் பொருளை அறிந்து பிறர்க்கு உதவ வேண்டும்.அதுவே சிறப்பாக வாழ வழிவகுக்கும்.*

**8.ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை**
**போகா றகலாக் கடை.**
*விளக்கம்: வருவாய் சிறியதாக இருந்தால் செலவை விரிவுபடுத்தாமல் குறைந்து செலவு செய்தால் நம் வாழ்வில் எந்த தீங்கும் வராது.*

**9.அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல**
**இல்லாகித் தோன்றாக் கெடும்.**
*விளக்கம்: பொருளின் அளவை அறிந்து வாழாதவனுடைய வாழ்க்கை எல்லா வளமும் இருப்பது போல அழிந்து விடும்.*

**10.உளவரை தூக்காத ஒப்புர வாண்மை**
**வளவரை வல்லைக் கெடும்.**
*விளக்கம்: தனக்கு உள்ள செல்வத்தின் அளவை ஆராய்ந்து பார்க்காமல் பிறர்க்கு உதவுவது செல்வத்தை எல்லாம் விரைவில் அழித்து விடும்.*

## ஒப்புரவறிதல்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**1.கைம்மாறு வேண்டாக் கடப்பாடு மாரிமாட்**
**டென்னாற்றுங் கொல்லோ உலகு.**
*விளக்கம்: மழை பொழியும் மேகத்திற்கு நாம் கைம்மாறு செய்வது இல்லை. அதுபோல,பிறர்க்கு உதவி செய்து விட்டு அவர்களிடம் கைம்மாறு எதிர்பார்க்ககூடாது.*

**2.தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு**
**வேளாண்மை செய்தற் பொருட்டு.**
*விளக்கம்: ஒருவன் தன்னால் முடிந்த அளவு முயற்சி செய்து சேர்த்த செல்வத்தை தான் மட்டும் அனுபவிக்காமல் பிறர்க்கு கொடுத்து உதவ வேண்டும்.*

**3.புத்தே ளுலகத்து மீண்டும் பெறலரிதே**
**ஒப்புரவி னல்ல பிற.**
*விளக்கம்: பிறர்க்கு உதவி செய்து வாழும் ஒப்புரவைப் போல இவ்வுலகில் வேறு ஒன்றும் இல்லை.*

**4.ஒத்த தறிவானுயிர் வாழ்வான் மற்றையான்**
**செத்தாருள் வைக்கப் படும்.**
*விளக்கம்: பிறர்க்கு உதவி செய்து வாழ்பவரை உயிர் உள்ளவராக மதிப்பர்.உதவி செய்யாதவரை இறந்த பிணமாகக் கருதுவர்.*

**5.ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்**
**பேரறி வாளன் திரு.**
*விளக்கம்: மக்களுக்கு பயன்படும் கிணற்றில் நீர் நிறைந்து இருப்பது போல பிறர்க்கு உதவுபவரின் செல்வமும் குறையாது.*

**6.பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வம்**
**நயனுடை யான்கட் படின்.**
*விளக்கம்: ஊர் நடுவே இருக்கும் மரத்தின் பழம் எல்லார்க்கும் பயன்படுவது போல, உதவி செய்பவரின் செல்வமும் பயன்படும்.*

**7.மருந்தாகித் தப்பா மரத்தற்றாற் செல்வம்**
**பெருந்தகை யான்கட் படின்.**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

*விளக்கம்: பிறர்க்கு உதவி செய்பவனின் செல்வமானது மற்றவர்க்கு எல்லா துன்பங்களையும் போக்கும் மருத்து மரமாகப் பயன்படுகிறது.*

**8.இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார்**
**கடனறி காட்சி யவர்.**

*விளக்கம்: பிறர்க்கு உதவி செய்யும் குணம் உடையவர் தன்னிடம் பொருள் இல்லாத வறுமையாக இருந்தாலும் உதவி செய்ய தயங்கமாட்டார்கள்.*

**9.நயனுடையான் நல்கூர்ந்தா னாதல் செயும்நீர**
**செய்யா தமைகலா வாறு.**

*விளக்கம்: பிறர்க்கு உதவும் இயல்பு உடையவர் உணவு பொருள் இல்லாத நிலையை வறுமை என்று கருதமாட்டார்.பிறர்க்கு உதவ முடியாத நிலையை வறுமை என்று கருதி வருந்துவர்.*

**10.ஒப்புரவி னால்வருங் கேடெனி னஃதொருவன்**
**விற்றுக்கோள் தக்க துடைத்து.**

*விளக்கம்: பிறர்க்கு உதவுவதால் தன் செல்வம் அழியும் நிலை வந்தாலும் அதை பொருட்படுத்தாமல் தன்னை விற்றாவது பிறர்க்குஉதவி செய்பவருக்கு புகழ் கிடைக்கும்.*

## செய்நன்றியறிதல்

**1.செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்**
**வானகமும் ஆற்றல் அரிது.**

*விளக்கம்: நாம் பிறர்க்கு ஒரு உதவியும் செய்யாதிருக்க,நமக்கு பிறர் செய்கின்ற உதவிக்கு இந்த மண்ணுலகமும்,விண்ணுலகமும் ஈடாகாது.*

**2.காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்**
**ஞாலத்தின் மாணப் பெரிது.**

*விளக்கம்: வேண்டிய காலத்தில் ஒருவன் செய்த உதவி சிறியதாக இருந்தாலும் அது செய்யபட்ட காலத்தை ஆராய்ந்து பார்த்தால் இவ்வுலகத்தை விட பெரியதாகும்.*

**3.பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்**
**நன்மை கடலின் பெரிது.**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

*விளக்கம்: எந்த பயனையும் எதிர்பார்க்காமல் செய்கின்ற உதவி கடலை விட பெரியதாகும்.*

**4.தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்**
**கொள்வர் பயன்தெரி வார்.**
*விளக்கம்: ஒருவன் தினை அளவு உதவி செய்தாலும் அப்பயனை உணர்ந்தவர் அவ்வுதவியை பனை அளவாக கருதி போற்றுவர்.*

**5.உதவி வரைத்தன் றுதவி உதவி**
**செயப்பட்டார் சால்பின் வரைத்து.**
*விளக்கம்: ஒருவருக்கு செய்யும் உதவி அவ்வுதவியின் அளவை வைத்து மதிக்ககூடாது.அவ்வுதவி செய்யபட்டவரின் தன்மையை வைத்து மதிக்க வேண்டும்.*

**6.மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க**
**துன்பத்துள் துப்பாயார் நட்பு.**
*விளக்கம்: துன்பம் வந்த காலத்தில் நமக்கு உதவி செய்தவரின் நட்பை கைவிட கூடாது.அது நமக்கு பாதுகாப்பாக இருக்கும்.*

**7.எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்**
**விழுமந் துடைத்தவர் நட்பு.**
*விளக்கம்:நமக்கு துன்பம் நேர்ந்த காலத்தில் உதவி செய்தவர்களின் நட்பை ஏழு பிறவிகளிலும் மறக்க கூடாது.*

**8.நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல**
**தன்றே மறப்பது நன்று.**
*விளக்கம்: பிறர் செய்த உதவியை எப்பொழுதும் மறக்க கூடாது.ஆனால் அவர் செய்த தீமையை அப்பொழுதே மறந்து விட வேண்டும்.*

**9.கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த**
**ஒன்றுநன் றுள்ளக் கெடும்.**
*விளக்கம்: உதவி செய்த ஒருவர் கொலை குற்றம் செய்தாலும் அவர் முன்பு செய்த நன்மையை நினைக்க தீமை மறைந்துவிடும்.*

**10.எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**செய்ந்நன்றி கொன்ற மகற்கு.**

*விளக்கம்: எந்தவித தவறு செய்தவனுக்கும் தப்பிக்க வழிகள் உண்டு.ஆனால் ஒருவர் செய்த உதவியை மறந்தவனுக்கு அதிலிருந்து தப்ப வழி இல்லையாம்.*

## சான்றாண்மை

## (பண்புகளால் நிறைந்து நிற்றல்)

**1.கடன்என்ப நல்லவை எல்லாம் கடனறிந்து**
**சான்றாண்மை மேற்கோள் பவர்க்கு.**

*விளக்கம்: நல்ல குணம் கொண்டவர்கள் நல்ல செயல்களை எல்லாம் தமது கடமை என நினைத்து வாழ்வர்.*

**2.குணநலம் சான்றோர் நலனே பிறநலம்**
**எந்நலத் துள்ளதூஉ மன்று.**

*விளக்கம்: நல்ல குணங்களை கொண்டு இருந்தாலே எல்லா சிறப்பும் வந்து சேரும்.வேறு எந்த நலன்களும் சிறப்பை தராது.*

**3.அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ(டு)**
**ஐந்துசால்(பு) ஊன்றிய தூண்.**

*விளக்கம்: அன்புடைமை,நாணம்,உதவி செய்தல்,இரக்கம் கட்டுதல்,உண்மை பேசுதல் போன்ற ஐந்து குணங்களை சான்றாண்மையின் தூண்களாகும்.*

**4.கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை**
**சொல்லா நலத்தது சால்பு.**

*விளக்கம்: தவம் என்பது பிற உயிர்களை கொல்லாமை,பிறர் குறைகளை சொல்லாமை சான்றாண்மை எனப்படும்.*

**5.ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்**
**மாற்றாரை மாற்றும் படை.**

*விளக்கம்: ஒரு செயலை வெற்றியுடன் செய்து முடிக்க ஆற்றலும் பணிவாக நடத்தலும் வேண்டும்.அதுவே பகைவரை நண்பராக்க உதவும்.*

**6.சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி**
**துலையல்லார் கண்ணும் கொளல்.**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

*விளக்கம்: தம்மை விட ஆற்றல் குறைந்தவரிடத்தில் தோல்வி அடைந்தால் அதை ஏற்று கொள்ள வேண்டும்.அதுவே ஒருவரின் சான்றாண்மையை அறிய உதவும் உரைகல் ஆகும்.*

**7.இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்**
**என்ன பயத்ததோ சால்பு.**

*விளக்கம்: நமக்கு தீங்கு செய்தவருக்கு நன்மை செய்ய வேண்டும்.அவ்வாறு செய்யாவிட்டால் சான்றாண்மை பண்பு இருந்தும் எந்த பயனும் இல்லை.*

**8.இன்மை ஒருவற்கு இளிவன்று சால்பென்னும்**
**திண்மையுண் டாகப் பெறின்.**

*விளக்கம்: சான்றாண்மை என்னும் பண்பு ஒருவருக்கு இருந்தால் வறுமை அவருக்கு ஒரு குறையாக இருக்காது.*

**9.ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்(கு)**
**ஆழி எனப்படு வார்.**

*விளக்கம்: சான்றாண்மை பண்பு கொண்டவர்களை கடல் என்று புகழ்வர்.உலகம் அழியும் காலம் வந்தாலும் தன் நிலையிலிருந்து மாற மாட்டார்கள்.*

**10.சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்**
**தாங்காது மன்னோ பொறை.**

*விளக்கம்: சான்றாண்மை பண்பில் குறைவு ஏற்பட்டவர்களின் பாரத்தை பூமி தாங்காது.*

## பெரியாரைத் துணைக்கோடல்

**(நன்னெறியில் செலுத்தும் பேரறிவுடையாரைத் துணையாகக் கொள்ளுதல்)**

**1.அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை**
**திறனறிந்து தேர்ந்து கொளல்.**

*விளக்கம்: அறிவிலும்,ஒழுக்கத்திலும்,வயதிலும் பெரியவர்களின் நட்பை ஏற்று கொள்ள வேண்டும்.*

**2.உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்**
**பெற்றியார்ப் பேணிக் கொளல்.**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

*விளக்கம்: தமக்கு வந்த துன்பத்தை நீக்கி துன்பம் வராதவாறு காக்கும் திறமையுடையவரை நட்பாக்கி கொள்ள வேண்டும்.*

**3.அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்**
**பேணித் தமராக் கொளல்.**
*விளக்கம்: அறிவுமிக்க பெரியோர்களை உறவாக கொள்ள வேண்டும்.அதுவே ஒருவன் பெற வேண்டிய பேறுகளுள் அரிய பேறு ஆகும்.*

**4.தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்**
**வன்மையுள் எல்லாம் தலை.**
*விளக்கம்: நம்மை விட பெரியவர்களை நட்பாக்கி கொள்ள வேண்டும்.அதுவே சிறந்த வலிமையாகும்.*

**5.சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்**
**சூழ்வாரைச் சூழந்து கொளல்.**
*விளக்கம்: தக்க வழிகளை ஆராய்ந்து கூறும் பெரியயோர்களை கண்ணாக கொண்டு நடப்பதால் மன்னனுக்கு அரசபாரம் எளிதாக தோன்றும்.*

**6.தக்கார் இனத்தனாய்த் தானொழுக வல்லானைச்**
**செற்றார் செயக்கிடந்த தில்.**
*விளக்கம்: பெரியவர்களின் துணை கொண்டு நடப்பவர்களுக்கு பகைவர்களால் எந்த தீங்கும் வராது.*

**7.இடிக்குந் துணையாரை ஆள்வாரை யாரே**
**கெடுக்குந் தகைமை யவர்.**
*விளக்கம்: தவறுகளை சுட்டிகாட்டும் பெரியவர்களைத் துணையாகக் கொண்டு வாழ்பவர்களை அழிக்க எவருமிலர்.*

**8.இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்**
**கெடுப்பார் இலானுங் கெடும்.**
*விளக்கம்: தவறுகளை சுட்டி காட்டும் பெரியவர்களின் துணையை மதிக்காதவன் பகைவர் இல்லை என்றாலும் தானே அழித்து விடுவான்.*

**9.முதலிலார்க்(கு) ஊதிய மில்லை மதலையாம்**
**சார்பிலார்க் கில்லை நிலை.**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

*விளக்கம்: முதலீடு இல்லாத வணிகருக்கு எந்த ஊதியமும் இல்லை,அதுபோல பெரியோர் துணையில்லாதவர்க்கு எந்த நன்மையும் இல்லை.*

**10.பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே**
**நல்லார் தொடர்கை விடல்.**
*விளக்கம்: பெரியோர்களின் நட்பை கைவிடுவது பலரை பகைத்து கொள்வதை விட பலமடங்கு தீமை உடையது ஆகும்.*

## பொருள் செயல்வகை

**(பொருளை ஆக்குவதற்கும் காப்பதற்குமான செயல்முறைகள்)**

**1.பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்**
**பொருளல்ல தில்லை பொருள்.**
*விளக்கம்: எந்த தகுதியும் இல்லாதவரை மதிக்க செய்வது பொருள் என்னும் செல்வமாகும்.*

**2.இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை**
**எல்லாரும் செய்வர் சிறப்பு.**
*விளக்கம்: செல்வம் இல்லாதவரை உலகம் இகழும்,செல்வம் உடையவரை புகழ்ந்து பேசும்.*

**3.பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்**
**எண்ணிய தேயத்துச் சென்று.**
*விளக்கம்: செல்வம் என்பது அணையா விளக்கு அது எந்த இடத்திற்கு சென்றாலும் பகைமை என்னும் இருளை போக்கும்.*

**4.அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து**
**தீதின்றி வந்த பொருள்.**
*விளக்கம்: பிறருக்கு தீங்கு செய்யாமல் நல்ல வழியில் சேர்த்த செல்வம் அறத்தினையும்,இன்பத்தினையும் தரும்.*

**5.அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்**
**புல்லார் புரள விடல்.**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

*விளக்கம்: தவறான வழியில் வந்த செல்வத்தை அனுபவிக்காமல் அழிய விட வேண்டும்.*

**6.உறுபொருளும் உல்கு பொருளுந்தன் ஒன்னார்த்**
**தெறுபொருளும் வேந்தன் பொருள்.**
*விளக்கம்: மக்கள் வரி பொருளும்,அரசுரிமையால் வந்த பொருளும்,பகைவரை வென்று கொண்ட பொருளும் அரசனுக்குரிய பொருள் ஆகும்.*

**7.அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னுஞ்**
**செல்வச் செவிலியால் உண்டு.**
*விளக்கம்: அன்பு என்னும் தாய் ஈன்ற அருள் என்னும் குழந்தை,பொருள் என்னும் வளர்ப்புத்தாயால் வளர்க்கப்படும்.*

**8.குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்**
**றுண்டாகச் செய்வான் வினை.**
*விளக்கம்: தன் கையில் பொருளை வைத்து கொண்டு ஒரு செயலை செய்வது,மலையின் மேல் ஏறி யானைப் போரை பார்ப்பது போன்றதாகும்.*

**9.செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்**
**எஃகதனிற் கூரிய தில்.**
*விளக்கம்: எதிரியை அழிக்கும் கூர்மையான கருவி செல்வமாகும்.அச்செல்வத்தை தேடி சேர்க்க வேண்டும்.*

**10.ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க் கெண்பொருள்**
**ஏனை யிரண்டும் ஒருங்கு.**
*விளக்கம்: நல்ல வழியில் பொருளை சேர்ந்தவருக்கு அறமும் இன்பமும் ஒரு சேர எளிதாகக் கிடைக்கும்.*

## வினைத்திட்பம்

**1.வினைத்திட்பம் என்பது தொருவன் மனத்திட்பம்**
**மற்றைய எல்லாம் பிற.**
*விளக்கம்: மனஉறுதி என்பது ஒரு தொழிலை செய்யும் உறுதி ஆகும்.வேறு எந்த உறுதியும் சிறந்தது இல்லை.*

**2.ஊறொரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்**
**ஆறென்பர் ஆய்ந்தவர் கோள்.**

*விளக்கம்: வருமுன் காத்தல்,வந்த பின் தளராமை ஆகிய இரண்டும் வினைத்திட்பம் பற்றி அறிந்தவர்களின் செயல் ஆகும்.*

**3.கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை இடைக்கொட்கின்**
**ஏற்றா விழுமந் தரும்.**

*விளக்கம்: ஒரு செயலை செய்து முடிக்கும் வரை வெளியில் தெரியாமல் செய்வது திறமை ஆகும்.வெளிப்பட்டால் துன்பத்தை தரும்.*

**4.சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்**
**சொல்லிய வண்ணம் செயல்.**

*விளக்கம்: ஒரு செயலை இன்னவாறு செய்து முடிக்கலாம் என்று சொல்வது எளிதாகும்.அதை போல் செய்து முடிப்பது அரியதாகும்.*

**5.வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்**
**ஊறெய்தி உள்ளப் படும்.**

*விளக்கம்:ஒரு செயலை செய்து பெருமை பெற்றவரின் வினைத்திட்பமானது உலகத்தால் நன்கு மதிக்கபடும்.*

**6.எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்**
**திண்ணியர் ஆகப் பெறின்.**

*விளக்கம்: ஒரு பொருளை பெற எண்ணியவர் அவற்றை பெற முயற்சி செய்தால் அவர் எண்ணியவற்றை பெற முடியும்.*

**7.உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்**
**கச்சாணி யன்னார் உடைத்து.**

*விளக்கம்: பெரிய தேரினை இயக்க உதவும் சிறிய அச்சாணி போல சிறுஉடம்பினர்கள் இவ்வுலகத்தில் உண்டு.அவர்களை நாம் இகழ கூடாது.*

**8.கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது**
**தூக்கங் கடிந்து செயல்.**

*விளக்கம்: மனதில் எண்ணிய செயலை மனம் தளராமலும் காலம் தாழ்த்தாமலும் செய்து முடிக்க வேண்டும்.*



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**9.துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி**
**இன்பம் பயக்கும் வினை.**

*விளக்கம்: ஒரு செயலை செய்யும் போது பல துன்பங்கள் வந்தாலும் மனம் தளராது செய்து முடிந்தால் அச்செயல் முடிவில் இன்பத்தை தரும்.*

**10.எனைத்திட்ப மெய்தியக் கண்ணும் வினைத்திட்பம்**
**வேண்டாரை வேண்டா துலகு.**

*விளக்கம்: வேறு எந்த உறுதி இருந்தும் செய்யும் செயலில் உறுதி இல்லாதவரை இவ்வுலகம் மதிக்காது.*

## இனியவைகூறல்

### (இனிமை பயக்கும் சொற்களைப் பேசுதல்)

**1.இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம்**
**செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.**

*விளக்கம்: அன்பு நிறைந்து பேசுபவரின் வாய் சொற்கள் வஞ்சனை இல்லாது இருக்கும்.*

**2.அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து**
**இன்சொலன் ஆகப் பெறின்.**

*விளக்கம்: ஒருவருக்கு மனம் விரும்பி பொருள்களை கொடுத்து மகிழ்வதை விட முகம் மலர்ந்து அவர்களிடம் பேசுவது நல்ல மகிழ்ச்சியை தரும்.*

**3.முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானாம்**
**இன்சொ லினதே அறம்.**

*விளக்கம்: தன்னை பார்க்க வருவோரை கண்டவுடன் முகம் மலர்ந்து இனிய சொற்களை பேசுவதே சிறந்த அறமாகும்.*

**4.துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்**
**இன்புறூஉம் இன்சொ லவர்க்கு.**

*விளக்கம்: எல்லாரிடமும் இனிய சொற்களை பேசுவதால் துன்பம் என்னும் வறுமை தம்மை அணுகாது.*



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**5.பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு**
**அணியல்ல மற்றுப் பிற.**
*விளக்கம்: பிறரிடத்தில் பணிவாகவும் இனிய சொற்களை பேசுவதும் உண்மையான அணிகலன்கள் ஆகும்.வேறு எந்த அணிகலன்களும் அழகை தராது.*

**6.அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை**
**நாடி இனிய சொலின்.**
*விளக்கம்: பிறர்க்கு நன்மை பயக்கும் இனிய சொற்களை பேசுவது சிறந்த அறமாகும்.*

**7.நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று**
**பண்பின் தலைப்பிரியாச் சொல்.**
*விளக்கம்: பிறருக்கு நன்மை பயக்கும் இனிய சொற்களை பேசுவது இன்பத்தை தரும்.*

**8.சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்**
**இம்மையும் இன்பந் தரும்.**
*விளக்கம்: பிறருக்கு துன்பம் விளைவிக்கும் சொற்களை பேசாது இனிய சொற்களை பேசுபவனின் வாழ்வு இப்பிறவியிலும் மறுபிறவியிலும் இன்பத்தை கொடுக்கும்.*

**9.இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ**
**வன்சொல் வழங்கு வது.**
*விளக்கம்: இனிய சொல் பேசுவது இன்பத்தை தரும் என்று அறிந்தும்,பிறரிடம் கடுஞ்சொற்களை பேசுவது தவறான செயல் ஆகும்.*

**10.இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று.**
*விளக்கம்: பிறரிடம் பேசும் போது இனிய சொற்களை பேசாது துன்பம் தரும் கடுஞ்சொற்களை பேசுவது கையில் கனியை வைத்து கொண்டு காய்களை உண்பது போன்றது ஆகும்.*



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)**

**பாடம் : தமிழ்**

**பகுதி : பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்**

**©காப்புரிமை :**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)** க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**



www.Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

# பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்

## பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் குறித்த வெண்பா:

- "நாலடி,நான்மணி,நா நாற்பது,ஐந்திணை,முப்
  பால்,கடுகம்,கோவை,பழமொழி,மாமூலம்,
  இன்னிலைய காஞ்சியோடு,ஏலாதி என்பவே,
  கைந்நிலைய வாம்கீழ்க்கணக்கு."
- இத்தொகுதியில் அடங்கியுள்ள நூல்களுள் பெரும்பாலானவை நீதி நூல்களாகும்.
- பதினொரு நூல்கள் இவ்வகையைச் சார்ந்தவை.
- ஆறு நூல்கள் அகத்திணை சார்பானவை.
- ஒன்று புறத்திணை நூல்.
- இந் நூல்கள் அனைத்தும் சிறு பாடல்களால் ஆனவை. கூடிய அளவாக நான்கு அடிகளை மட்டுமே கொண்டவை.

## நீதி நூல்கள்

1. திருக்குறள்
2. நாலடியார்
3. நான்மணிக்கடிகை
4. இன்னா நாற்பது
5. இனியவை நாற்பது
6. திரிகடுகம்
7. ஆசாரக்கோவை
8. பழமொழி நானூறு
9. சிறுபஞ்சமூலம்
10. ஏலாதி
11. முதுமொழிக்காஞ்சி

## அகத்திணை நூல்கள்

1. ஐந்திணை ஐம்பது



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

2. திணைமொழி ஐம்பது
3. ஐந்திணை எழுபது
4. திணைமாலை நூற்றைம்பது
5. கைந்நிலை
6. கார் நாற்பது

**புறத்திணை நூல்**

1. களவழி நாற்பது

### 1. நாலடியார்

- நாலடியார் ஆசிரியர் — சமணமுனிவர்
- நாலடியார் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.
- இந்நூல் 400 பாடல்களைக் கொண்டது.
- அறக்கருத்துக்களைக் கூறுவதாகும்.
- "நாலடி நானூறு" என்னும் சிறப்புப் பெயரும் இதற்குண்டு.
- இந்நூல் சமணமுனிவர் பலர் பாடிய பாடல்களின் தொகுப்பாகும்.
- ”நாய்க்கால் சிறுவிரல்போல் நன்கணிய ராயினும்
  ஈக்கால் துணையும் உதவாதார் நட்பென்னாம்
  சேய்த்தானும் சென்று கொளல்வேண்டும் செய்விளைக்கும்
  வாய்க்கால் அனையார் தொடர்பு” — சமணமுனிவர்

### 2. நான்மணிக்கடிகை

- நான்மணிக்கடிகை — ஆசிரியர் — விளம்பிநாகனார்
- விளம்பி என்பது ஊர் பெயர்இ நாகனார் என்பது புலவரின் இயற்பெயர்.
- பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும்.
- கடிகை என்றால் அணிகலன் (நகை) ஆகும்.
- நான்கு மணிகள் கொண்ட அணிகலன் என்பது இதன் பொருள்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- ஒவ்வொரு பாட்டும் நான்கு மணி மணியாக அறக் கருத்துக்களை கொண்டது.
- ”மனைக்கு விளக்கம் மடவாள்மடவாள் தனக்குத் தகைசால் புதல்வர் மனக்கினிய காதல் புதல்வர்க்குக் கல்வியே கல்விக்கும் ஓதின் புகழ்சால் உணர்வு”. — விளம்பிநாகானார்

## 3. இனியவை நாற்பது — பூதஞ்சேத்தனார்

### ஆசிரியர் குறிப்பு

- பெயர் — மதுரை தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேத்தனார்
- ஊர் — மதுரை
- காலம் — கி.பி. இரண்டாம் நூற்றாண்டு
- நூல் குறிப்பு — இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. நன்மைதரும் இனிய கருத்துகளை நாற்பதுப் பாடல்களில் தொகுத்துரைப்பதால் இனியவை நாற்பது எனப் பெயர் பெற்றது.

”குழவி பிணியின்றி வாழ்தல் இனிதே
கழறும் அவையஞ்சான் கல்வி இனிதே
மயரிக எல்லராய் மாண்புடையார்ச் சேரும்
திருவுந்தீர் வின்றேல் இனிது.”

”சலவரைச் சாரா விடுதல் இனிதே
புலவர்தம் வாய்மொழி போற்றல் இனிதே
மலர்தலை ஞாலத்து மன்னுயிர்க் கெல்லாம்
தகுதியால் வாழ்தல் இனிது”

## 4. இன்னா நாற்பது

- இன்னா நாற்பதில் கடவுள் வாழ்த்து நீங்கலாக நாற்பது பாடல்கள் உள்ளன.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- ஒவ்வொரு பாடலிலும் நான்கு கருத்துக்களைக் கொண்டுஇ ஒவ்வொன்றையும் "இன்னா" என எடுத்துக் கூறுதலின் "இன்னா நாற்பது" எனப் பெயர்பெற்றது.
- இந்நூலை இயற்றியவர் கபில தேவர்.
- ஆசிரியர் தமது கடவுள் வாழ்த்தில் சிவபெருமான், பலராமன், திருமால், முருகன் ஆகியோரைக் குறித்துள்ளார்.
- இதனால் இவர் சமயப் பொது நோக்கு உடையவர் என எண்ண இடமுண்டு.

## 5. பழமொழி நானூறு

- ஆசிரியர் — முன்றுறை அரையனார்.

**ஆசிரியர் குறிப்பு**

- முன்றுறை என்பது ஊர்பெயர் அரையன் என்பது அரசனைக் குறிக்கும் சொல்.
- முன்றுறை என்ற ஊரை ஆண்ட அரசனாக இருக்கலாம் அல்லது அரையன் உன்பது புலவரின் குடிப்பெயராகவும் இருக்கலாம்.

**நூல் குறிப்பு:**

- பதினெண்கீழக்கணக்கு நூல்களுள் ஒன்று பழமொழி நானூறு
- இது நானூற்று பாடல்களைக் கொண்ட நூல்.
- ஒவ்வொரு பாடலிலும் ஒரு பழமொழி இடம் பெற்றுள்ளது.
- "ஆற்றுணா வேண்டுவது இல்" என்பதற்கு "கற்றவனுக்கு கட்டுச்சோறு வேண்டாம்" என்று பொருள்.
- பழமொழி நானூறு

”ஆற்றவும் கற்றார் அறிவுடையார் அஃதுடையார்
நாற்றிசையும் செல்லாத நாடில்லை அந்நாடு



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

வேற்றுநாடு ஆகா தமவேயாம் ஆயினால்
ஆற்றுணா வேண்டுவது இல்".

## 6. ஏலாதி

### ஆசிரியர் குறிப்பு

- ஏலாதியை இயற்றியவர் கணமேதாவியார்.
- இவருக்குக் கணிமேதையர் என்னும் மற்றொரு பெயரும் உண்டு.
- இவர் சமண சமயத்தை சார்ந்தவர்.
- இவர் ஏலாதியில் சமண சமயத்திற்கே உரிய கொல்லாமை முதலிய உயரிய அறக்கருத்துகளை வலியுறுத்திக் கூறுகிறார்.
- இவர் கடைச்சங்க காலத்தில் வாழ்ந்தவர்.
- "வணங்கி வழியொழுகி மாண்டார்சொல் கொண்டு நுணங்கிநூல் நோக்கி நுழையா — இணங்கிய பால்நோக்கி வாழ்வான் பழியில்லா மன்னனாய் நூல்நோக்கி வாழ்வான் நுனித்து".

**நூற்குறிப்பு:**

- பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று ஏலாதி.
- இந்நூல் சிறப்புப் பாயிரம், தற்சிறப்புப் பாயிரம் உட்பட எணபத்தொரு வெண்பாக்களை கொண்டுள்ளது.
- நான்கடிகளில் ஆறு அறங்கருத்துகளை இந்நூல் நவில்கிறது.
- இந்நூல் தமிழருக்கு அருமருந்து போன்றது.
- ஏலம் என்னும் மருந்துப் பொருளை முதன்மையாகக் கொண்டு இலவங்கம்,சிறுநாவற்பூ, மிளகு, திப்பிலி, சுக்கு ஆகியவற்றினால் ஆன மருந்துப் பொருளுக்கு ஏலாதி என்பது பெயர்.
- இம்மருந்து உண்ணுபவரின் உடற்பிணியைப் போக்கும்.
- அதுபோல இந்நூலின் கருத்துக்கள் கற்போரின் அறியாமையை அகற்றும்.

.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

## 7. சிறுபஞ்சமூலம்

**ஆசிரியர் குறிப்பு:**

- பெயர் — காரியாசான்
- மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனாரின் மாணவர் என சிறப்புப்பாயிரம் கூறுகிறது.
- இவர் சமண சமயத்தைச் சார்ந்தவர்
- இவரும் கணிமேதாவியாரும் ஒரு சாலை மாணக்கராவர்.
- பெரும்பான்மை பொது அறக்கருத்துகளும் சிறுபான்மை சமண அறக்கருத்துகளும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

**நூல் குறிப்பு:**

- சிறுபஞ்சமூலம் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.
- கடவுள் வாழ்த்துடன் தொண்ணூற்றெழு வெண்பாக்கள் உள்ளன.
- கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய ஐந்து மூலிகையும் உடல் நோயைத் தீர்ப்பன.
- இந்நூலின் ஒவ்வொரு பாடலிலும் கூறப்பட்டுள்ள ஐந்து கருத்துகளும் மக்கள் மனநோயைப் போக்குவன.

"கண்வனப்புக் கண்ணோட்டம் கால்வனப்புச் செல்லாமை
எண்வனப்பு இத்துணையாம் என்றுரைத்தல்- பண்வனப்புக்
கேட்டார்நன் றென்றல் கிளர்வேந்தன் தன்னாடு
வாட்டான்நன் றென்றல் வனப்பு".

## 8. முதுமொழிக்காஞ்சி

- ஆசிரியர் — மதுரைக் கூடலூர் கிழார்.
- பிறந்த ஊர் — கூடலூர்
- சிறப்பு — இவர்தம் பாடல்களை நச்சினார்க்கினியர் முதலிய நல்லுரையாசிரியர்கள் மேற்கோளாகக் கையாண்டுள்ளார்கள்.
- காலம் — சங்க காலத்திற்குப் பின் வாழ்ந்தவர்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**நூல் குறிப்பு:**

- முதுமொழிக்காஞ்சி என்பது காஞ்சி திணையின் துறைகளுள் ஒன்று.
- பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான இந்நூல் உலகியல் உண்மைகளைத் தெளிவாக எடுத்து இயம்புகிறது.
- அறவுரைக்கோவை எனவும் வழங்கப்படுகிறது.
- பத்து அதிகாரங்கள் உள்ளன. ஒவ்வோர் அதிகாரத்திலும் பத்துச் செய்யுள் உள்ளன.
- இந்நூல் நூறு பாடல்களால் ஆனது.

**சிறந்த பத்து:**

(சிறந்ததெனக் கூறப்படும் பத்துப் பொருளைத் தன்னகத்தே கொண்டிருப்பது சிறந்த பத்து)

1. ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
   ஓதலில் சிறந்தன்(று) ஒழுக்கம் உடைமை
2. காதலில் சிறந்தன்று கண்ணஞ்சப் படுதல்
3. மேதையில் சிறந்தன்று கற்றது மறவாமை
4. வண்மையில் சிறந்தன்று வாய்மை யுடைமை
5. இளமையில் சிறந்தன்று மெய்பிணி இன்மை
6. நலனுடை மையின் நாணுச் சிறந்தன்று
7. குலனுடை மையின் கற்புச் சிறந்தன்று
8. கற்றலின் கற்றாரை வழிபடுதல் சிறந்தன்று
9. செற்றாரைச் செறுத்தலில் தற்செய்கை சிறந்தன்று
10. முன்பெரு கலின்பின் சிறுகாமை சிறந்தன்று

## 9.ஆசாரக்கோவை

- ஆசாரம் - ஒழுக்கம், கோவை - அடுக்கிக் கூறுதல் அல்லது கோர்க்கப்பட்டது.
- ஒழுக்கங்களை அடுக்கிக் கூறும் நூல் இது.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- ஒருவர் மேற்கொள்ள வேண்டிய ஒழுக்கமுறைகளைத் தொகுத்து கூறுவதால் இந்நூல் இப்பெயர் பெற்றது.
- இந்நூலின் மூல நூல் - ஆரிடம் என்ற வடமொழி

**ஆசிரியர் குறிப்பு:**

- கயத்தூர் பெருவாயின் முள்ளியார்.
- இவர் ஒரு சைவர்.
- "பகல் தெற்கு நோக்கார், இரா வடக்கு நோக்கார்"

## 10.திரிகடுகம்

**திரிகடுகத்தின் உருவம்:**

- ஆசிரியர் = நல்லாதானர்
- பாடல்கள் = 100 + 1
- பாவகை = வெண்பா

**பெயர்க்காரணம்:**

- சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்றும் உடல் நோயைத் தீர்ப்பான.
- அதனை போன்று இந்நூலில் அமைந்துள்ள ஒவ்வொரு பாட்டிலும் உள்ள மூன்று கருத்துக்களும் உள்ளத்தின் நோயைத் தீர்க்கும்.
- திரி = மூன்று
- கடுகம் = காரமுள்ள பொருள்

**ஆசிரியர் குறிப்பு:**

- இவர் திருநெல்வேலி மாவட்டம் "திருத்து" என்னும் ஊரை சேர்ந்தவர்.
- "செருஅடுதோள் நல்லாதன்" எனப் பாயிரம் குறிப்பிடுவதால் இவர் போர் வீரராய் இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது

**பொதுவான குறிப்புகள்:**

- "திரிகடுகம்=சுக்கு, மிளகு, திப்பிலி" என திவாகர நிகண்டு கூறுகிறது
- இந்நூலின் கடவுள் வாழ்த்து திருமாலைப் பற்றி கூறுகிறது.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- இந்நூலின் ஒவ்வொரு பாடலிலும் “இம்மூன்றும்” அல்லது “இம்மூவர்” என்னும் சொல் வருகிறது.
- மருந்தின் பெயரால் பெயர் பெற்ற நூல்.
- இந்நூலில் 66 பாடகளில் நன்மை தருபவை எவை என்பது பற்றிக் கூறப்பட்டுள்ளது.
- இந்நூலில் 34 பாடல்களில் தீமை தருபவை எவை எனக் கூறப்பட்டுள்ளது.
- கணவன் மனைவி வாழ்க்கை பற்றியே 35 பாடல்கள் உள்ளன.
- 300 அறக்கருத்துக்கள் இந்நூலில் கூறப்பட்டுள்ளது.

**முக்கிய அடிகள்:**

- நெஞ்சம் அடங்குதல் வீடாகும்
- வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்
- தாளாளன் என்பான் கடன்பட வாழாதான்
- நிறை நெஞ்சம் உடையானை நல்குரவு அஞ்சும்
- நட்பின் கொழுநனை பொய் வழங்கின் இல்லாகும்
- கொண்டான் குறிப்பறிவாள் பொண்டாட்டி

www.Padasalai.Net

## அகநூல்கள் - 5

### 1. ஐந்திணை ஐம்பது

- முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல் என்ற வைப்பு முறையை உடைய நூல்.
- முல்லை திணையை முதலாவதாகக் கொண்ட பதினெண்கீழ்க்கணக்கு நூல் இது மட்டுமே.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- திணைக்கு 10 பாடல்களாக மொத்தம் 50 பாடல்களை உடையது.
- இந்நூலின் ஆசிரியர் - மாறன் பொறையனார்.
- இரண்டு மான்கள் பாலைவனத்தில் தண்ணீர் குடிக்கும் உயர்ந்த நெறியை விளக்குகிறது.
- இதன் கடவுள் வாழ்த்து - திருமால், முருகன், சிவனைப் பற்றியது. "கொள்ளாத் தெருவில் ஊசி விற்றல்"

**2.ஐந்திணை எழுபது**

- ஆசிரியர் - மூவாதியார்
- திணைக்கு 14 பாடல்கள் வீதம் 70 பாடல்களை உடையது.)
- ( குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்ற வைப்பு முறையை உடைய நூல். பாலை நிலத்தின் கொடுமையை எடுத்துக் கூறும் நூல்.)
- "நன்மலை நாட மறவல் வயங்கிழைக்கு" -

**3. திணைமொழி ஐம்பது**

- ஆசிரியர் - சாத்தந்தையார் மகனார் கண்ணன் சேந்தனார்.
- குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்ற வைப்பு முறையை உடைய நூல்.
- ஒவ்வொரு திணைக்கும் 10 பாடல்கள் வீதம் மொத்தம் 50 பாடல்களை உடையது.
- "யாழும் குழலும் முழவும் இயைந்தன"

**4.திணைமாலை நூற்றைம்பது**

- பதினெண்கீழ்க்கணக்கு அகப்பொருள் நூல்களில் மிகவும் பெரியது
- இந்நூல் குறிஞ்சி, நெய்தல், பாலை, முல்லை, மருதம் என்ற வைப்பு முறையை உடைய நூல்.
- ஒவ்வொரு திணைக்கும் 30 பாடல்கள் வீதம் மொத்தம் 150 பாடல்களை உடையது.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- இப்பிறவியின் வினை இப்பிறவியிலேயே பயனளிக்கும் என்பதை உணர்த்தும் நூல்.
- இந்நூலின் கருத்துகள் சுந்தரரின் தேவாரமான 7ஆம் திருமுறையிலும் (திருப்பாட்டு) மாணிக்கவாசகரின் திருக்கோவையிலும் (400 பாடல்கள்) 8ஆம் திருமுறையிலும் இடம் பெற்றுள்ளது.
- ஆசிரியர் - கணிமேதாவியார் (ஏலாதியின் ஆசிரியர்)
- ஐந்திணை நிலங்களின் இயற்கை வருணனை வர்ணிக்கும் நூல் இது.
- பதினெண்கீழ்க்கணக்கு அகநூல்களில் வடசொல் கலப்பு மிகுதியாக உள்ள நூல் இது.
- அறநூல்களில் வடசொல் கலப்பு மிகுதியாக உள்ள நூல் - ஏலாதி
- அறநூல்களில் வடசொல் கலப்பு குறைவாக உள்ள நூல் - கைந்நிலை
- திருமணத்திற்கு வரதட்சணை வாங்கக் கூடாது எனக் கூறும் நூல் இது.

## 5. கார் நாற்பது

- ஆசிரியர் - மதுரை கண்ணன் கூத்தனார்.
- பதினெண்கீழ்க்கணக்கு அகநூல்களில் மிகவும் சிறியது இது.
- கடவுள் வாழ்த்து - சிவன்
- தலைவனைப் பிரிந்த தலைவி ஆற்றியிருத்தலைக் கூறுகிறது.
- ஆற்றியிருத்தல் என்பது முல்லை திணைக்குரிய உரிப்பொருள்.
- கார்காலம் முல்லை நிலத்திற்குரிய பெரும்பொழுது ஆகும்.
- தோழி, தலைவி, தலைவன், தேர்ப்பாகன் என்ற 4 பேர் மட்டுமே வைத்து அமைக்கப்பட்ட பதினெண்கீழ்க்கணக்கு நூல் இது.
- பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒரு திணையை ((முல்லை) மட்டும் பாடிய நூல்.
- "துதோடு வந்த மழை"

## 6. கைந்நிலை

- ஆசிரியர் - புல்லங்காடனார்.
- வேறுபெயர் - ஐந்திணை அறுபது, நாற்பால்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் வைப்பு முறையை உடைய நுல்.
- ஒவ்வொரு திணைக்கும் 12 பாடல்கள் வீதம் மொத்தம் 60 பாடல்களை உடையது.
- கை - ஒழுக்கம், நிலை - தன்மை
- கைந்நிலை என்றால் ஒழுக்கத்தின் தன்மை என்று பொருள்

## புறநூல்

### 1.களவழி நாற்பது

- ஆசிரியர் - பொய்கையார்
- இந்நூலில் மொத்தம் 40 பாடல்கள் உடையது.
- பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் புறப்பொருள் பற்றிக் கூறும் ஒரே நூல் இது மட்டுமே.
- 40 பாடல்களிலும் களம் என்ற சொல் வருவதால் இந்நூல் களவழி நாற்பது என்று பெயர் பெற்றது.
- சேர மன்னன் கணைக்கால் இரும்பொறைக்கும் சோழ மன்னன் செங்காணனுக்குமிடையே நடந்த போர் பற்றி கூறுகிறது.
- போர் நடந்த இடம் - கழுமலம்
- போரில் வெற்றி பெற்றவன் - சோழ மன்னன் செங்காணன்
- சேர மன்னன் கணைக்கால் இரும்பொறை சிறை வைக்கப்பட்ட இடம் - குணவாயிற்கோட்டம்
- இச்சேர மன்னன் தான் நிர்கேட்டுத் தாமதமாகப் பெற்று மானம் கருதி உயிர்விட்டவன்.

## இன்னிலை

- ஆசிரியர் - பொய்கையார்
- 45 பாடல்களை உடையது.
- அறம் (10),



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

பொருள் (9),

இன்பம் (12),

வீட்டிலக்கம்பால் (14) என்று பிரிக்கப்படுகிறது.

- இந்நூலிற்கு கடவுள் வாழ்த்து பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்.
- தொல்காப்பியம் கூறும் எண்வகை வனப்புகளில் அம்மை எனும் வகையைச் சார்ந்தது.

www.Padasalai.Net



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)**

**பாடம் : தமிழ்**

**பகுதி : கம்பராமாயணம்**

**©காப்புரிமை :**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)** க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

## கம்பராமாயணம்

- இராமாயணம் இதிகாசம் இரண்டனுள் முதலாவது
- கம்பராமாணயம் ஒரு வழி நூல்
- வடமொழியில் வால்மீகி எழுதிய இராமாயணம் முதல் நூல்
- கம்பராமாயணம் வால்மீகி இராமாயணத்தின் மொழிபெயர்ப்பு அன்று தழுவல்
- இயற்றியவர் கம்பர்
- குலம் 9 ஆம் நூற்றாண்டு (அ) 10 ஆம் நூற்றாண்டு என்பர்.
- பிறந்த ஊர் சோழநாட்டுத் திருவெழுந்தூர்
- கம்பர் இறந்த ஊர் பாண்டிய நாட்டு நாட்டரசன் கோட்டை
- கம்பரை ஆதரித்தவர் சடையப்ப வள்ளல்.
- கம்பர் 1000 பாடலுக்கு ஒருமுறை சடையப்ப வள்ளலைப் பாடியுள்ளார்.
- கம்பர் தம் நூலுக்கு வைத்த பெயர் இராமாவதாரம்

## கம்பராமாயணம் நூல் அமைப்பு:

- காண்டம் - 6,
- படலம் - 113,
- பாடல்கள் - 10569

## காண்டம்:

1. பாலகாண்டம்
2. அயோத்தியா காண்டம்
3. ஆரண்ய காண்டம்
4. கிஷ்கிந்தா காண்டம்
5. சுந்தர காண்டம்
6. யுத்த காண்டம்

- முதற்படலம் - ஆற்றுப்படலம்
- இறுதிப்படலம் - விடை கொடுத்த படலம்
- தமிழின் மிகப் பெரிய நூல் கம்பராமாயணம்
- காப்பியத்தின் உச்சகட்ட வளர்ச்சி கம்பராமாயணம்
- திருமாலின் அவதாரம் இராமன்
- இராமனின் குலம் சூரிய காலம்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- தந்தை - தசரதன்
- தாய் - கோசலை (கௌசல்யா)
- வளர்ப்புத்தாய் - கைகேயி
- நாடு - கோசலம்
- நகரம் - அயோத்தி
- ஆசிரியர் - வசிட்டர்
- கைகேயியின் தோழி - கூனி
- கூனியின் இயற்பெயர் - மந்தரை
- கைகேயியின் மனத்தை மாற்றியவள் - கூனி

**இராமனின் தம்பியர் மூவர்:**

1. பரதன்
2. இலக்குவன்
3. சத்ருக்கனன்

**இராமனால் தம்பியராக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் மூவர்:**

1. குகன்
2. சுக்ரீவன்
3. வீடணன்

- இராமன் முதன் முதலாகக் கொன்றது தாடகை என்ற பெண்ணை
- விசுவாமித்திரரின் யாகத்தைக் காக்கும் பொருட்டு இராமன் தாடகையைக் கொன்றான்.
- இராமனை மிதிலைக்கு அழைத்துச் சென்றவர் விசுவாமித்திரர்.
- இராமன் - சீதை திருமணம் நடந்த இடம் மிதிலை
- சீதையின் தந்தை ஜனகன்
- சீதைக்கு ஜானகி, மைதிலி என்ற வேறுபெயர்களும் உண்டு.
- கங்கைக் கரையைக் கடக்க இராமனுக்கு உதவியவன் குகன்.
- குகனின் தலைநகரம் சிருங்கிபேரம்
- சுக்ரீவன் அமைச்சன் அனுமான்
- இராமனுக்காகச் சீதையிடம் தூது சென்றவன் அனுமான்.
- இராமாயணப் போர் 18 மாதம் நடந்தது.

.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

- இராமன் முடிசூட்டிக் கொண்ட போது அரியணை தாங்கியவன் அனுமான்.
- உடைவாள் ஏந்தியவன் அங்கதன்
- வெண்கொற்றைக் குடை பிடித்தவன் பரதன்
- கவரி வீசியவர்கள் இலக்குவன் சத்ருக்கனன்
- முடிஎடுத்துக் கொடுத்தவர் சடையப்ப வள்ளலின் முன்னோர் முடிசூட்டியவன் வசிட்டன்
- கம்பர் தம் ராமாயணத்தை அரங்கேற்றிய இடம் திருவரங்கம்.

## கம்பர் எழுதிய பிற நூல்கள்:

1. ஏர் எழுபது
2. திருக்கை வழக்கம் (இரண்டாம் உழவு பற்றியது)
3. சடகோபர் அந்தாதி
4. சரசுவதி அந்தாதி
5. கம்பர் மகன் அம்பிகாபதி

- அம்பிகாபதி எழுதியது அம்பிகாபதிக்கோவை
- இராம நாடகக் கீர்த்தனை எழுதியவர் - அருணாசலக் கவிராயர்

## புகழுரைகள்:

"கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்ததும்"

"கம்பனைப் போல வள்ளுவனைப் போல்

இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை"- பாரதி

## மேற்கோள்:

"இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினார்"

"அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினான்"

"வீரமும் களத்தே போட்டு வெறும் கையோடு இலங்கை புக்கான்"

"இன்று போய் நாளை வா"



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

"வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்"

"பேசுவது மானம் இடைப்பேணுவது காமம்
கூசுவது மானுடரை நன்று நம் கொற்றம்"

"இற்பிறப்பு என்பெதான்றும் இரும்பொறை என்பதொன்றும்
கற்பெனும் பெயரதொன்றும் களிநடம் புரியக் கண்டேன்"

"கவியெனக் கிடந்த கோதாவரியினை வீரர் கண்டார்.

"தண்டலை மயில்கள் ஆட தாமரை விளக்கம் தாங்க"

"வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்"

"எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லை உடையாரும் இல்லை மாதோ"

"உயிரெலாம் உறைவதோர் உடம்பும் ஆயினான்"

"கல்லாப் புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயிற்றன்றே"

"கை வண்ணம் அங்குக் கண்டேன்
கால்வண்ணம் இங்குக் கண்டேன்"

"ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ"

"அன்றலர்ந்த செந்தாமரையை வென்றதம்மா"

"விருந்துவரின் என்னுறுமோ என்று விம்மும்"



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**கம்பராமாயணம்:**

தாதுகு சோலை தோறும் சண்பகக் காடு தோறும்
போதவிழ் பொய்கை தோறும் புதுமணத் தடங்கள் தோறும்
மாதவி வேலிப் பூக வனந்தொறும் வயல்கள் தோறும்
ஓதிய உடம்பு தோறும் உயிரென உலாய தன்றே. - கம்பர்

**அயோத்தியா காண்டம்:**

**குகன் படலம்**

- **குகன் வருகை:**

ஆய காலையின் ஆயிரம் அம்பிக்கு
நாய கன்போர்க் குகன்எனும் நாமத்தான்
தூய கங்கைத் துறைவிடும் தொன்மையான்
காயும் வில்லினன் கல்திரள் தோளினான்.

- **குகனின் தோற்றம்:**

துடியன் நாயினன் தோல்செருப்பு ஆர்த்தபேர்
அடியன் அல்செறிந் தன்ன நிறத்தினான்
நெடிய தானை நெருங்கலின் நீர்முகில்
இடியி னோடுஎழுந் தாலன்ன ஈட்டினான்.

- **குகன் இராமனைக் காண வருதல்:**

1. "சிருங்கி பேரம் எனத்திரைக் கங்கையின்
மருங்கு தோன்றும் நகருறை வாழ்க்கையன்
ஒருங்கு தேனொடு மீன்உப காரத்தான்
இருந்த வள்ளலைக் காணவந் தெய்தினான்."

2. "கூவா முன்னம் இளையோன் குறுகிநீ
ஆவான் யார்என அன்பின் இறைஞ்சினான்
தேவா நின்கழல் சேவிக்க வந்தனென்
நாவாய் வேட்டுவன் நாய்அடியேன் என்றான்."

- **குகனைக்குறித்து இராமனிடம் இலக்குவன் கூறியது:**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

நிற்றி ஈண்டு என்றுபுக்கு நெடியவன் தொழுது தம்பி
கொற்றவ! நின்னைக் காணக் குறுகினன் நிமிர்ந்த கூட்டச்
சுற்றமும் தானும்; உள்ளம் தூயவன்; தாயின் நல்லான்;
எற்றுநீர்க் கங்கை நாவாய்க்கு இறை; குகன் ஒருவன் என்றான்

- **இராமன் இலக்குவனிடம் குகனை அழைத்துவரப் பணித்தும், வந்த குகன் பணிதலும்:**

அண்ணலும் விரும்பி என்பால் அழைத்திநீ அவனை என்றான்
பண்ணவன் வருக என்னப் பிரிவினன் விரைவில் புக்கான்
கண்ணனைக் கண்ணின் நோக்கிக் கனிந்தனன் இருண்ட குஞ்சி
மண்ணுறப் பணிந்து மேனி வளைத்துவாய் புதைத்து நின்றான்.

- **தேனும் மீனும் விருப்பத்துடன் கொண்டு வந்தாகக் குகன் கூறுதல்:**

இருத்தி ஈண்டு என்னலோடும் இருந்திலன் எல்லை நீத்த
அருத்தியன் தேனும் மீனும் அமுதினுக்கு அமைவ தாகத்
திருத்தினன் கொணர்ந்தேன் என்கொல் திருவுளம் என்ன வீரன்
விருத்தமா தவரை நோக்கி முறுவலன் விளம்ப லுற்றான்

- **இராமன் குகனைப் பாராட்டல்:**

அரியதாம் உவப்ப உள்ளத் தன்பினால் அமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த என்றால் அமிழ்தினும் சீர்த்த வன்றே
பரிவினில் தழீஇய என்னில் பவித்திரம் எம்ம னோர்க்கும்
உரியன இனிதின் நாமும் உண்டனெம் அன்றோ என்றான்

- **குகன் வேண்டுகோள்:**

கார்குலாம் நிறத்தான் கூறக் காதலன் உணர்த்து வான்இப்
பார்குலாம் செல்வ நின்னை இங்ஙனம் பார்த்த கண்ணை
ஈர்கிலாக் கள்வ னேன்யான் இன்னலின் இருக்கை நோக்கித்
தீர்கிலேன் ஆன தைய செய்குவென் அடிமை என்றான்.

- **குகன் கொண்டுவந்த படகில் மூவரும் புறப்படல்:**

சிந்தனை உணர்கிற்பான் சென்றனன் விரைவோடும்
தந்தனன் நெடுநாவாய் தாமரை நயனத்தான்
அந்தணர் தமையெல்லாம் அருளுதிர் விடைஎன்னா
இந்துவின் நுதலாளோடு இளவலொ டினிதேறா.

- **குகன் படகைச் செலுத்துதல்:**

விடுநனி கடிதென்றான் மெய்உயிர் அனையானும்
முடுகினன் நெடுநாவாய் முரிதிரை நெடுவீர்வாய்க்
கடிதினில் மடஅன்னக் கதியது செலநின்றார்
இடர்உற மறையோரும் எரியுறு மெழுகானார்.

- **குகன் உடன்வருவதாக நவின்றபோது இராமன் கூற்று:**

அன்னவன் உரைகளோ அமலனும் உரைநேர்வான்
என்னுயிர் அனையாய்நீ இளவல்உன் இளையான் இந்
நன்னுத லவள்நின்கேள் நளிர்கடல் நிலமெல்லாம்
உன்னுடையது. நான் உன் தொழில் உரிமையின் உள்ளேன்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு** : **TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)**

**பாடம்** : **தமிழ்**

**பகுதி** : **சங்க இலக்கியம்**

**©காப்புரிமை** :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)** க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

www.Padasalai.Net

## சங்க இலக்கியம்

- பாண்டியர்கள் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த காலம் **சங்க காலம்** எனப்படும்.
- கி.மு. 2ம் நூற்றாண்டு முதல் கி.பி. 2ம் நூற்றாண்டு வரை உள்ள இடைப்பட்டக் காலத்தை சங்க காலம் என்பர்.
- சங்க காலத்தில் எழுந்த நூல்கள் **சங்க இலக்கியம்** எனப்பட்டது.
- சங்க இலக்கிய செய்யுட்களைச் சான்றோர் செய்யுட்கள் என்று கூறுவார் பேராசிரியர்.
- சங்க இலக்கிய நூல்களைத் **தொகை, பாட்டு** என இரண்டாகப் பிரிப்பர்.
- பல புலவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பைத் தொகை என்றும் தனி ஒரு புலவர் பாடிய பாடலைப் பாட்டு என்றும் கூறுவர்
- தொகை என்பது **எட்டுத்தொகையையும்**, பாட்டு என்பது **பத்துப்பாட்டையும்** குறிக்கும்.
- எட்டுத்தொகை என்பது **எட்டுத் தொகை நூல்**களின் தொகுப்பாகும்.
- சங்க இலக்கியங்களைத் திணை இலக்கியங்கள் என்றும் கூறுவர்.
- சங்க இலக்கியத்தில் வரும் அகப்பாடல்கள் பாத்திரங்களின் கூற்றிலும் புறப்பாடல்கள் புலவர்கள் கூற்றிலும் அமைந்துள்ளன.
- இவற்றை **பதினெண்மேற்கணக்கு நூல்கள்** என்றும் கூறுவர்.
- எட்டுத் தொகையில் எட்டுத் தொகை நூல்கள் உள்ளன. அவை,

  - **நற்றிணை,**
  - **குறுந்தொகை,**
  - **ஐங்குறுநூறு,**
  - **பதிற்றுப்பத்து,**
  - **பரிபாடல்,**
  - **கலித்தொகை,**
  - **அகநானூறு,**
  - **புறநானூறு**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூ
றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோ டகம்புறமென்
றித்திறத்த எட்டுத் தொகை.

- எட்டுத் தொகை நூல்களை **அகம்**, **புறம்** (அகத்திணை நூல்கள், புறத்திணை நூல்கள்) என இரண்டாகப் பிரிப்பர்.
- எட்டுத்தொகை நூல்களில் அகத்திணை நூல்கள் **ஐந்து**. அவை,
    - ❖ **நற்றிணை,**
    - ❖ **குறுந்தொகை,**
    - ❖ **ஐங்குறுநூறு,**
    - ❖ **கலித்தொகை,**
    - ❖ **அகநானூறு**
- எட்டுத்தொகை நூல்களுள் புறத்திணை நூல்கள் **இரண்டு**. அவை,
    - ❖ **பதிற்றுப்பத்து,**
    - ❖ **புறநானூறு**
- எட்டுத்தொகை நூல்களுள் **அகமா? புறமா?** என்ற ஐயம்கொண்ட நூல் **பரிபாடல்**.
- பரிபாடலை அகப்புற நூல்கள் என்றும் கூறுவர்.
- எட்டுத் தொகையுள் பாடப்பட்ட யாப்பினால் பெயர்பெற்ற நூல்கள் இரண்டு. அவை, கலித்தொகை (கலிப்பா), பரிபாடல் (பரிபாட்டு) என்பன.
- எட்டுத் தொகை நூல்களுள் காலத்தால் முந்தைய நூல் புறநானூறு.
- எட்டுத் தொகை நூல்களுள் காலத்தால் பிந்தைய நூல்கள் இரண்டு. அவை, கலித்தொகை. பரிபாடல் என்பன
- எட்டுத்தொகை நூல்களுள் '**நல்**' என்ற அடைமொழிக் கொண்ட நூல் **நற்றிணை.**
- எட்டுத்தொகை நூல்களுள் '**நல்ல**' என்ற அடைமொழிக் கொண்ட நூல் **குறுந்தொகை.**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- எட்டுத்தொகை நூல்களுள் '**ஒத்த**' என்ற அடைமொழிக் கொண்ட நூல் **பதிற்றுப்பத்து.**
- எட்டுத்தொகை நூல்களுள் '**ஓங்கு**' என்ற அடைமொழிக் கொண்ட நூல் **பரிபாடல்.**
- எட்டுத்தொகை நூல்களுள் '**கற்றறிந்தார் ஏத்தும்**' என்ற அடைமொழிக் கொண்ட நூல் **கலித்தொகை.**
- எட்டுத்தொகை நூல்களுள் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, பரிபாடல் ஆகியன தனித்தனிப் பாடல்களாகப் பாடப்பட்டுத் தொகுக்கப்பெற்ற **தனிநிலைச்** செய்யுட்களாகும்.
- ஐங்குறுநூறு. கலித்தொகை ஆகியன சொல்லாலும், பொருளாலும் தொடர்ந்து பாடப்பட்ட **தொடர்நிலைச்** செய்யுட்களாகும்.

## அகத்திணை நூல்கள்

- ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் தம்முள் கொண்ட இன்ப நுகர்ச்சிகளை இவ்வாறு இருந்தன எனப் புறத்தார்க்குக் கூறப்படாது தமக்குள்ளேயே கொண்டு இன்பம் அனுபவிக்கும் இல்லற இன்ப நுகர்ச்சியே அகத்திணை எனப்படும்.
- அகத்திணை நூல்களாக **நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு** என்ற ஐந்து நூல்கள் உள்ளன.

## நற்றிணை

- நன்மை+திணை = நற்றிணை (சிறந்த ஒழுக்கம் என்னும் பொருள் கொண்ட நூல்)
- இது எட்டுத்தொகை நூல்களுள் **முதலாவதாகக்** குறிப்பிடும் நூல்.
- இது **அகப்பொருள்** பற்றிய நூல்.
- '**நல்**' என்னும் அடைமொழி கொண்டநூல்.
- **ஒன்பது** அடிமுதல் **பன்னிரண்டு** அடிவரையில் பாடப்பட்ட நூல்.
- இது 400 பாடல்களைக் கொண்டு அமைகிறது. ஆதலால் **நற்றிணை நானூறு** என்ற சிறப்புப் பெயரும் இதற்குண்டு.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- இதனை 275 புலவர்கள் பாடியுள்ளனர்.
- இந்நூலுக்குப் **பாரதம் பாடிய பெருந்தேவனார்** கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார்.
- இந்நூலைத் தொகுத்தவர் **பாண்டிய மன்னன் பன்னாடு தந்த மாறன் வழுதி**. தொகுப்பித்தவர் பெயர் தெரியவில்லை.
- இதற்கு பழைய குறிப்பு கொண்டு **பின்னாத்தூர் நாராயணசாமி அய்யர்** எழுதிய விளக்க உரையே **முதல் உரை**யாகும்.

**நற்றிணை:**(தோழி தலைமகனிடம் கூறியது)

"அரிகால் மாறிய அங்கண் அகல்வயல்
மறுகால் உழுத ஈரச் செறுவின்
வித்தொடு சென்ற வட்டி பற்பல
மீனொடு பெயரும் யாணர் ஊர
நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்
செல்வம் அன்றுதன் செய்வினைப் பயனே
சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கண் செல்வம் செல்வமென் பதுவே".-

மிளைகிழான் நல்வேட்டனார்

**ஆசிரியர் குறிப்பு:**

- மிளை என்னும் ஊரில் பிறந்தவராதலால் **மிளைகிழான் நல்வேட்டனார்** என்னும் பெயர் பெற்றார்.
- இவர் ஐந்திணைகளைப் பற்றியும் பாடல் இயற்றியுள்ளார்.
- இவர் பாடியனவாக நற்றிணையில் நான்கு பாடல்களும் குறுந்தொகையில் ஒன்றுமாக ஐந்து பாடல்கள் உள்ளன.
- இவர் சங்க காலத்தவர்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

## குறுந்தொகை

- குறுமை+தொகை = குறுந்தொகை
- இது எட்டுத்தொகை நூல்களுள் இரண்டாவதாகக் குறிப்பிடும் நூல்.
- இது **அகப்பொருள்** பற்றிய நூலாகும்.
- '**நல்ல**' என்னும் அடைமொழி கொண்டநூல்
- குறைந்த அடிகளை உடைய பாக்களால் ஆனது என்பதால் இதனைக் குறுந்தொகை என்று கூறப்படுகிறது.
- இதன் அடிஎயவு **நான்கு அடி** முதல் **எட்டு அடி** வரை ஆகும்.
- எனினும் 307, 391 ஆகிய இரண்டு பாடல்கள் ஒன்பது அடிகளால் பாடப்பட்டுள்ளன.
- **இருநூற்று ஐவர்** (205) பாடிய இந்நூலைத் தொகுத்தவர் 'பூரிக்கோ'.
- தொகுப்பித்தவர் யாரெனத் தெரியவில்லை.
- யார் பாடியது என அறிய முடியாத வகையில் 10 பாக்கள் உள்ளன.
- இந்நூலுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடல் பாடியவர் '**பாரதம் பாடிய பெருந்தேவனார்**'.
- இக்கடவுள் வாழ்த்து முருகனைப் பற்றியது.
- கடவுள் வாழ்த்து உட்பட இதில் 402 (401+1) பாடல்கள் உள்ளன.
- இந்நூலை முதன் முதலில் பதிப்பித்தவர் சி.வை. தாமோதரம் பிள்ளை.
- ஆராய்ச்சிப் பதிப்பு உ.வே. சாமிநாதர்.
- உரையாசிரியர்களால் மிகுதியாக மேற்கோள் காட்டி எடுத்தாளப்பெற்ற சங்க இலக்கிய நூல் இதுவேயாகும்.
- சங்க நூல்களுள் குறுந்தொகையே முதன் முதலில் தொகுக்கப்பெற்ற நூலாகும்.
- குறுந்தொகைப் பாடல்களின் வாயிலாகப் **பண்டைத் தமிழ் மக்களின் ஒழுக்கம்**, **காதல் வாழ்க்கை**, **பழக்க வழக்கங்கள்**, **நாகரிகம்**, **மகளிர் மாண்புகள்**, **அற உணர்வுகள்** முதலியனவற்றை அறியலாம்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

## இறைவன் தருமிக்கு அருளிய பாடல்:

“கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீ அறியும் பூவே. “

- குறுந்தொகை 2

## குறுந்தொகை

“நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரல்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே.- தேவகுலத்தார்.

## குறிஞ்சி

## ஆசிரியர் குறிப்பு- கபிலர்

- பாண்டி நாட்டிலுள்ள திருவாதவூரில் அந்தணர் மரபில் பிறந்தவர்.
- கடைச்சங்கப் புலவர்கள் பரணர், இடைக்காடர், ஔவை ஆகியோரிடம் நட்பு பூண்டவர்.
- கடையெழு வள்ளல்களுள் ஒருவனாகிய பாரியை உயிர்த் தோழனாகக் கொண்டவர்.
- பாரியின் அவைக்களப் புலவராகவும் விளங்கியவர்.
- குறிஞ்சித் திணைப் பாடல்கள் பாடுவதில் வல்லவர்.
- “கபிலரது பாட்டு” என்னும் தொடரே இவர் பாட்டுத் திறனுக்குச் சான்றாகும்.

> - “வாய்மொழிக் கபிலன்” என்று நக்கீரரும்,
> - நல்லிசைக் கபிலன்” என்று பெருங்குன்றூர்க் கிழாரும்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன்" என்று பொருந்தில் இளங்கீரனாரும்,
- "புலனழுக்கற்ற அந்தணாளன்","பொய்யா நாவிற் கபிலன்" என மாறோக்கத்து நப்பசலையாரும் புகழ்ந்துள்ளனர்.

யாரு மில்லை தானே கள்வன்

தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ

தினைத்தா ளன்ன சிறுபசுங் கால

ஒழுகுநீ ராரல் பார்க்கும்

குருகு முண்டுதான் மணந்த ஞான்றே

- கபிலர்

- திணை - குறிஞ்சி
- துறை - வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

## ஐங்குறுநூறு

- ஐந்து+குறுமை+நூறு = ஐங்குறுநூறு.
- எட்டுத் தொகையுள் மூன்றாவதாக வைத்துக் கூறப்படும் நூல்.
- இது அகத்திணை நூல்.
- **மூன்று அடி** முதல் **ஆறு அடி** வரை பாடப்பட்ட நூல்.
- இந்நூல் **ஐந்நூறு** பாடல்களைக் கொண்டுள்ளது.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை என்ற வரிசை முறையில் அமைக்கப்பட்டு ஒவ்வொரு திணைக்கும் நூறு பாடல்கள் வீதம் ஐந்நூறு பாடல்கள் பாடப்பட்டுள்ளன.
- இவை முறையே

  - **ஓரம்போகியார்,**
  - **அம்மூவனார்,**
  - **கபிலர்,**
  - **ஓதலாந்தையார்,**
  - **பேயனார்**

ஆகிய ஐந்து ஆசிரியர்கள் பாடியுள்ளனர்.

| **திணை** | **பாடலாசிரியர்** |
|---|---|
| மருதம் | ஓரம்போகி |
| நெய்தல் | அம்மூவன் |
| குறிஞ்சி | கபிலர் |
| பாலை | ஓதலாந்தை |
| முல்லை | பேயன் |

- **மருதமோ ரம்போகி நெய்த லம்மூவன்**
  **கருதுஞ் குறிஞ்சி கபிலன் - கருதிய**
  **பாலையோத லாந்தை பனிமுல்லை பேயனே**
  **நூலையோ தைங்குறு நுறு.**

- இந்நூலைத் தொகுத்தவர் '**புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்**'.
- தொகுப்பித்தவர் **கோச்சேரமான் 'யானைக்கண்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை**'.
- இந்நூலில் ஒவ்வொரு தினையிலும் உள்ள 100 பாடல்கள் பத்துப்பத்துப் பாடல்களாகப் பிரிக்கப்பட்டுத் தனித்தனித் தலைப்புக்களின் கீழ்ப்பகுக்கப்பட்டுள்ளன.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- இந்நூலுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடியவர் **பாரதம் பாடிய பெருந்தேவனார்**.
- இக் கடவுள் வாழ்த்து சிவனைப் பற்றியது.
- இந்நூல், ஐந்து திணைகளிலும் தனித்தனியே நூறு நூறு பாடல்களால் பாடப்பட்ட, ஐந்து நூறுகளின் தொகுதி என்பதால் இதற்கு ஐங்குறுநூறு எனப்பட்டது.
- இந்நூலை முதன் முதலில் பதிப்பித்தவர் உ.வே. சாமிநாதையர்.

## கலித்தொகை

- இது **கலிப்பாவால்** ஆன நூல்
- சங்க நூல்களில் ஓசை நயம் மிக்க பாட்டுகள் அமைந்த நூல்.
- இது அகப்பொருள் சார்ந்த நூல்.
- 'கற்றறிந்தார் ஏத்தும் கலி' என்ற சிறப்பைப் பெற்ற நூல்.
- இதனைத் தொகுத்தவர் **நல்லந்துவனார்**.
- தொகுப்பித்தவர் யார் எனத் தெரியவில்லை.
- கலித்தொகைப் பாடல்கள்
  - ❖ '**பாலைக்கலி**,
  - ❖ **குறிஞ்சிக்கலி**,
  - ❖ **மருதக்கலி**,
  - ❖ **முல்லைக்கலி**,
  - ❖ **நெய்தல்கலி**'

  என்ற வரிசை முறையில் ஐந்துப் பிரிவுகளைக் கொண்டு அமைகிறது.
- இதனைப் பாடியவர்கள் ஐவர் ஆவார்.

www.Padasalai.Net



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| திணை | பாடியவர் | பாடல் எண்ணிக்கை |
|---|---|---|
| பாலை | பெருங்கடுங்கோன் | 35 |
| குறிஞ்சி | கபிலர் | 29 |
| மருதம் | மருதன் இளநாகனார் | 35 |
| முல்லை | சோழன் நல்லுருத்திரன் | 17 |
| நெய்தல் | நல்லந்துவனார் | 33 |

- இந்நூல் கடவுள் வாழ்த்துப் பாடலோடு சேர்த்து 150 பாடல்களைக் கொண்டுள்ளது.
- கடவுள் வாழ்த்தைப் பாடியவர் நல்லந்துவனார். இக்கடவுள் வாழ்த்து சிவனைப் பற்றியது.
- இனிய ஓசையோடு நாடக முறையில் காதல் நிகழ்ச்சிகள் அமைந்திருப்பதும் இந்நூலின் சிறப்பியல்பாகும்.
- இதற்கு **நச்சினார்க்கினியர்** விரிவான உரை எழுதியுள்ளார்.
- இந்நூலை முதன் முதலில் பதிப்பித்தவர் சி.வை. தாமோதரம் பிள்ளை.
- இந்நூலை நல்லந்துவனார் என்ற புலவர் மட்டுமே பாடியிருக்கக் கூடும் எனக் கருதுபவர்கள் சி.வை. தாமோதரம் பிள்ளை, எஸ். வையாபுரிப்பிள்ளை, கே.என். சிவராஜப் பிள்ளை.

**கலித்தொகை:**

"ஆற்றுதல் என்பதுஒன்று அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடுஅறிந்து ஒழுகுதல்
அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை

அறிவெனப் படுவது பேதையார் சொல்நோன்றல்
செறிவெனப் படுவது கூறியது மறாஅமை
நிறையெனப் படுவது மறைபிறர் அறியாமை



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

முறையெனப் படுவது கண்ணோடாது உயிர்வௌவல்
பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்"

## ஆசிரியர் குறிப்பு:

- நல்லந்துவனார் சங்க காலத்தவர்
- இவரைப் பற்றிய குறிப்புகள் ஏதும் கிடைக்கப் பெறவில்லை.
- இவர் நெய்தல் கலியில் முப்பத்து மூன்று பாடல்களைப் பாடியுள்ளார்.
- கலித்தொகையைத் தொகுத்தவரும் இவரே.

## அகநானூறு

- அகம்+நான்கு+நூறு = அகநானூறு.
- இதனை 'அகப்பாட்டு' எனவும் 'அகம்' எனவும் கூறுவர்.
- இது ஒரு அகத்தினை நூல்.
- 400 பாடல்களைக் கொண்டநூல்.
- ஆசிரியப்பாவால் ஆனது.
- இந்நூல்
    - ❖ **களிற்றுயானை** 120 (1 - 120) **பாடல்கள்**
    - ❖ **மணிமிடைப்பவளம்**, 180 (121 - 300) **பாடல்கள்**
    - ❖ **நித்திலக்கோவை** 100 (301 - 400) **பாடல்கள்**

  என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது.
- இது 13 அடி சிறுமையும் 31 அடி பெருமையும் கொண்டது.
- இதற்கு நெடுந்தொகை என்ற வேறுபெயரும் உண்டு.
- இந்நூலில்
    - ❖ 1,3,5,7,9 என வரும் ஒற்றைப்படை எண்களாக வரும் பாடல்கள் அனைத்தும் பாலைத்திணைப் பாடல்கள்.
    - ❖ 2,8 என வரும் எண்களைக் கொண்ட பாடல்கள் அனைத்தும் குறிஞ்சித்திணைப் பாடல்கள்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- 4,14,24 என வரும் எண்களைக் கொண்ட பாடல்கள் அனைத்தும் முல்லைத்திணைப் பாடல்கள்.
- 6,16,26 என வரும் எண்களைக் கொண்ட பாடல்கள் அனைத்தும் மருதத்திணைப் பாடல்கள்.
- 10,20,30 என வரும் எண்களைக் கொண்ட பாடல்கள் அனைத்தும் நெய்தல்திணைப் பாடல்கள்.

- இவ்வமைப்பில் தொகுக்கப்பட்ட சங்க இலக்கிய நூல் இது மட்டுமே.
- இந்நூல்,
  - பாலைத்திணையில் 200 பாடல்களும்,
  - குறிஞ்சித் திணையுல் 80 பாடல்களும்,
  - முல்லைத் திணையில் 40 பாடல்களும்,
  - மருதத் திணையில் 40 பாடல்களும்,
  - நெய்தல் திணையில் 40 பாடல்களும் கொண்டுள்ளது.

- இந்நூலைத் தொகுத்தவர் மதுரை உப்பூரிக்குடிக்கிழார் மகனார் உருத்திர சன்மனார் ஆவார்.
- தொகுப்பித்தவன் பாண்டியன் உக்கிர பெருவழுதி.
- இந்நூலுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். இக்கடவுள் வாழ்த்து சிவனைப் பற்றியது.
- இந்நூலை முதன் முதலில் பதிப்பித்தவர் வே. ராசகோபால ஐயங்கார்.
- இந்நூலுக்கு உரை எழுதியவர்கள் நா.மு. வேங்கடசாமி நாட்டார், இரா. வேங்கடாசலம் பிள்ளை.

### பாலை

ஓங்குமலைச் சிலம்பில் பிடவுடன் மலர்ந்த

வேங்கை வெறித்தழை வேறுவகுத் தன்ன

ஊன்பொதி அவிழாக் கோட்டுகிர்க் குருளை



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

மூன்றுடன் ஈன்ற முடங்கர் நிழத்த

துறுகல் விடரளைப் பிணவுப்பசி கூர்ந்தெனப்

பொறிகிளர் உழுவைப் போழ்வாய் ஏற்றை

அறுகோட்டு உழைமான் ஆண்குரல் ஓர்க்கும்

நெறிபடு கவலை நிரம்பா நீளிடை

வெள்ளி வீதியைப் போல நன்றுஞ்

செலவயர்ந் திசினால் யானே பலபுலந்து

உண்ணா உயக்கமொடு உயிர்செலச் சாஅய்த்

தோளும் தொல்கவின் தொலைய நாளும்

பிரிந்தோர் பெயர்வுக் கிரங்கி

மருந்துபிறி தின்மையின் இருந்துவினை இலனே

- ஔவையார்

- திணை- பாலை
- துறை- செலவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

## புறத்திணை நூல்கள்

- எட்டுத்தொகை நூல்களுள் புற இலக்கியங்களாக விளங்குவன இரண்டு. அவை, பதிற்றுப்பத்து, புறநானூறு என்பனவாகும்.
- மக்களின் புற வாழ்க்கையோடு இயைந்த கல்வி, ஒழுக்கம், அறம், கொடை, வீரம், வெற்றி, ஆட்சிமுறை, புகழ், அறிவு, பண்பாடு, பழக்கவழக்கங்கள் ஆகிய புறப்பொருள் பற்றிப் பாடப்பட் பாடல்கள் ஆகையால் புறப்பாட்டு எனப்பட்டது.

## பதிற்றுப்பத்து

- பத்து x பத்து = நூறு
- பத்து+இன்+இற்று+பத்து = பதிற்றுப்பத்து
- இன், இற்று என்பன சாரியைகள்.
- சேர அரசர்கள் பத்துப் பேரை பத்து புலவர்கள் தலா பத்துப் பாடல்கள் வீதம் பாடியதால் இதற்குப் பதிற்றுப்பத்து எனப்பட்டது.
- சேர அரசர்களைப் பற்றிப் பாடும் எட்டுத்தொகை நூல் பதிற்றுப்பத்து.
- இந்நூல், தமிழ் மூவேந்தருள் சேர மன்னர்களின் செயல் நலன்கள் மட்டும் வரைந்து கூறுகிறது.
- இந்நூலில், முதல் பத்துப் பாடல்களும் கடைசிப் பத்துப் பாடல்களும் கிடைக்கப்பெறவில்லை.
- ஏனைய 80 பாடல்களே இடம்பெற்றுள்ளன.
- இதில் ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் ஒரு பதிகம் காணப்படுகிறது. இந்நூலைத் தொகுத்த ஒருவரால் இப்பதிகம் பாடப்பட்டிருக்கலாம்.
- இந்நூலுக்குப் பழைய உரை ஒன்றும் உள்ளது.
- இந்நூலை முதன் முதலில் பதிப்பித்தவர் உ.வே. சாமிநாதர்.
- உரை இயற்றியவர் சு. துரைசாமிப் பிள்ளை
- இப்போதுள்ள பதிற்றுப்பத்தில் எட்டு சேர மன்னர்கள் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- பதிற்றுப்பத்தில் அமைந்துள்ள ஒவ்வொரு பத்துப் பாடல்களின் ஈற்றிலும் ஒரு பதிகம் அமைந்துள்ளது.
- இப்பதிகத்தில் பாடப்பட்ட மன்னன் பெயர், அவர் செய்த போர், கொடைத்திறம், பாடிய புலவர் பெயர், அவர் பெற்ற பரிசுப்பொருள் ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன.
- ஒவ்வொரு பாட்டின் ஈற்றிலும் அப்பாடலின் துறை, வண்ணம், தூக்கு, பெயர் என்ற பாட்டியல் கூறுகளைப் பழைய உரையாசிரியர் குறித்துள்ளார்.
- பதிற்றுப்பத்துப் பாடல்களை அனைத்தும் பாடண்திணையைச் சார்ந்தவை.
- பரிபாடலைப் போலவே பதிற்றுப்பத்தும் இசையோடுப் பாடுதற்குரியது.

| வ. எண் | நூல் | ஆசிரியர் | பாடுடைத் தலைவன் |
|---|---|---|---|
| 1 | முதல் பத்து | கிடைக்கப் பெறவில்லை | |
| 2 | இரண்டாம் பத்து | குமட்டூர் கண்ணனார் | இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் |
| 3 | மூன்றாம் பத்து | பாலைக் கௌதமனார் | பல்யானைச் செல்கெழுங் குட்டுவன் |
| 4 | நன்காம் பத்து | காப்பியாற்றுக் காப்பியனார் | களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் |
| 5 | ஐந்தாம் பத்து | பரணர் | கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவன் |
| 6 | ஆறாம் பத்து | காக்கைபாடினியார்(எ) நச்செள்ளையார் | ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் |
| 7 | ஏழாம் பத்து | கபிலர் | செல்வக் கடுங்கோ வாழியாதன் |
| 8 | எட்டாம் பத்து | அரிசில் கிழார் | தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை |
| 9 | ஒன்பதாம் பத்து | பெருங்குன்றூர் கிழர் | குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை |
| 10 | பத்தாம் பத்து | கிடைக்கப் பெறவில்லை | |



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

## புறநானூறு

- புறம்+நான்கு+நூறு = புறநானூறு.
- இதனைப் 'புறப்பாட்டு', 'புறம்', 'புறம்பு', 'தமிழ்க் கருவூலம்' எனவும் வழங்குவர்.
- 400 பாடல்களைக் கொண்ட இந்நூல், ஆசிரியப்பாவால் பாடப்பட்டுள்ளது.
- இதனை 158 புலவர்கள் பாடியுள்ளனர்.
- இதற்குக் கடவுள் வாழ்த்துப் பாடல் பாடியவர் 'பாரதம் பாடிய பெருந்தேவனார்'. இக்கடவுள் வாழ்த்து சிவனைப் பற்றியது.
- இந்நூலைத் தொகுத்தவர், தொகுப்பித்தவர் யாரெனத் தெரியவில்லை.
- புறநானூற்றில் சில பாடல்களை ஜி.யு. போப் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.
- தமிழ்நாட்டில் பண்டைக் காலத்தில் வாழ்ந்த மூவேந்தர்கள், சிற்றரசர்கள், அமைச்சர்கள், சேனைத் தலைவர்கள், கடையெழு வள்ளல்கள், வீரர்கள், புலவர்கள், சான்றோர்கள் எனப் பலருடைய வரலாற்றுக் குறிப்புகளும், அக்கால மக்களின் வாழ்க்கை, நாகரிகம், பண்பாடு, பழக்கவழக்கங்கள் முதலியனவும் இந்நூலின் மூலம் அறிய முடிகிறது.
- புறநானூற்றுப் பாடல்கள் வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை என வழங்கப்பெறும் புறத்திணைகளுக்குரிய துறைப்பொருள்கள் கொண்டு அமைந்தவையாகும்.
- திணை - ஒழுக்கம், நெறி.
- துறை - திணையின் உட்பிரிவு. (அவ்வத்திணையில் கூறப்படும் பொருளைப் பாகுப்படுத்திக் கூறுவது.)
- இந்நூலில் 11 புறத்திணைகளும் 65 துறைகளும் கூறப்பட்டுள்ளன.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

## புறநானூறு - ஔவையார்

"நாடாகு ஒன்றோ காடாகு ஒன்றோ
அவலாகு ஒன்றோ மிசையாகு ஒன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை; வாழிய நிலனே! "- ஔவையார்

## ஆசிரியர் குறிப்பு:

- ஔவையார் சங்கப் புலவர், அதியமானின் நண்பர்.
- அரிய நெல்லிக்கனியை அதியமானிடம் பெற்றவர்
- சங்க காலத்தில் பெண் கவிஞர் பலர் இருந்தும் அவர்களுள் மிகுதியான பாடல்கள் பாடியவர் ஔவையார்.
- சங்கப்பாடல்கள் பாடிய ஔவையாரும், ஆத்திசூடி பாடிய ஔவையாரும் ஒருவர் அல்லர் வேறு வேறானவர்.

## புறநானூறு - மோசிகீரனார்

"நெல்லும் உயிரன்றே நீரும்உயி ரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்
அதனால் யான்உயிர் என்பது அறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே."- மோசிகீரனார்

## ஆசிரியர் குறிப்பு :

- தென்பாண்டி நாட்டிலுள்ள மோசி என்னும் ஊரில் வாழ்ந்தவர். கீரன் என்பது குடிப்பெயராகக் குறிப்பிடப்படுகிறது.
- உடல் சோர்வினால் அரசுக்குரிய முரசுக் கட்டிலில் உறங்கிய போது, சேரமான் பெருஞ்சேரல் இரும் பொறை என்ற அரசனால் கவரி வீசப் பெற்ற பெருமைக்குரியவர்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- இவர் பாடிய பாடல்கள் அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை ஆகியவற்றுள் உள்ளன.

### புறநானூறு - நக்கீரனார்

"தென்கடல் வளாகம் பொதுமை இன்றிவெண்குடை நிழற்றிய ஒருமை
யோர்க்கும் நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஓர்ஒக் கும்மே
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்போம் எனினே தப்புந பலவே".-

மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்.

### ஆசிரியர் குறிப்பு:

- மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்.
- இவர் இறையனார் எழுதிய களவியலுக்கு உரை கண்டவர்
- பத்துப்பாட்டுள் திருமுருகாற்றுப்படையையும் நெடுநல் வாடையையும் இயற்றியவர்
- இவ் உலகியல் உண்மையை இப்பாடலில் கூறியுள்ளார்
- மகனார் நக்கீரனார்.

### புறநானூறு - கண்ணகனார்

### ஆசிரியர் குறிப்பு:

- இப்பாடலாசிரியர் கண்ணகனார் கோப்பெருஞ்சோழனின் அவைக்களப் புலவர்களுள் ஒருவர்.
- கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்த பொழுது பிசிராந்தையாரின் வருகைக்காகக் காத்திருந்தான்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- அவருடன் இருந்தவர் கண்ணகனார் ஆவார்.
- அவன் உயிர் துறந்த பொழுது மிகவும் வருந்திய கண்ணகனார் இப்பாடலைப் பாடினார்.

## அகப்புற நூல்

- அகமும் புறமும் கலந்து பாடப்பட்ட எட்டுத் தொகை நூல் பரிபாடல்.
- 'வேம்பு தலை யாழ்த்த நோன்காழ் எஃகம்' என்ற குறிப்பே இதனைப் புற இலக்கியமாக்கியது.

## பரிபாடல்

- இசைப்பாட்டு வகையைச் சார்ந்த நூல்.
- தமிழின் முதல் இசைப்பாடல் நூல்.
- பாவகையால் பெயர்பெற்ற நூல்.
- எட்டுத் தொகையுள் அகத்திற்கும் புறத்திற்கும் உரிய நூல்.
- பாண்டிய நாட்டைச் சிறப்பிக்கவே பாடப்பட்ட நூல் பரிபாடல்.
- பரிபாடலைப் பாடிய புலவர்களின் எண்ணிக்கை 13.
- இதன் சிற்றெல்லை 25 அடி, பேரெல்லை 400 அடி..

| வ. எண் | நூல் | பாடிய ஆசிரியர்களின் எண்ணிக்கை | பாடல் எண்ணிக்கை | யாப்பு | அடிய ளவு | திணை | தொகுத்தவர் | தொகுப்பித்தவர் | கடவுள் வாழ்த்துப் பாடியவர் | கடவுள் வாழ்த்தில் பாடப்பட்ட தெய்வம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | நற்றிணை | 175 | 400 | ஆசிரியப் பா | 9-12 | அகம் | தெரியவில்லை | பன்னாடு தந்த மாறன் வழுதி | பாரதம் பாடிய பெருந்தேவனார் | திருமால் |
| 2 | குறுந்தொகை | 205 | 401 | ஆசிரியப் பா | 4-8 | அகம் | பூரிக்கோ | | பாரதம் பாடிய பெருந்தேவனார் | முருகன் |
| 3 | ஐங்குறுநூறு | 5 | 500 | ஆசிரியப் பா | 3-6 | அகம் | புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் | யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை | பாரதம் பாடிய பெருந்தேவனார் | சிவன் |
| 4 | கலித்தொகை | 5 | 150 | கலிப்பா | | அகம் | நல்லந்துவனார் | | நல்லந்துவனார் | சிவன் |
| 5 | அகநானூறு | 145 | 400 | ஆசிரியப் பா | 13-31 | அகம் | உருத்திரசன்ம னார் | பாண்டியன் உக்கிர பெருவழுதி | பாரதம் பாடிய பெருந்தேவனார் | சிவன் |
| 6 | பதிற்றுப்பத்து | 8 | 80 | ஆசிரியப் பா | | புறம் | தெரியவில்லை | தெரியவில்லை | கிடைக்கவில்லை | |
| 7 | புறநானூறு | 158 | 400 | ஆசிரியப் பா | | புறம் | தெரியவில்லை | தெரியவில்லை | பாரதம் பாடிய பெருந்தேவனார் | சிவன் |
| 8 | பரிபாடல் | 13 | 22 | பரிபாட்டு | 25-400 | அகப்பு றம் | தெரியவில்லை | தெரியவில்லை | | |



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- இது, திருமால்(8), முருகன்(31), கொற்றவை(1), வையை(26), மதுரை நகர்(4) ஆகிய தலைப்புகளில் 70 பாடல்களைக் கொண்டுள்ளது.

**திருமாற் கிருநான்கு செவ்வேட்கு முப்பத்**
**தொருபாட்டு காடுகிழாட் கொன்று - மருவினிய**
**வையை இருபத்தா(று) மாமதுரை நான்கென்ப**
**செய்ய பரிபாடல் திறம்.**

- ஆயினும் இன்று திருமால் (6), முருகன் (8), வையை (8) ஆகிய தலைப்புகளில் அமைந்த 22 பாடல்களே பழைய உரையுடன் கிடைக்கின்றன.
- வேறுவகையால் இரண்டு பாடல்களும், சிதறிய நிலையில் சில பாடல்களும் கிடைத்திருக்கின்றன.
- இவற்றுள் திருமாலுக்கு ஏழு பாடலும், முருகனுக்கு எட்டு பாடலும், வையைக்கு ஒன்பது பாடலும், மதுரையைப் பற்றி ஆறு பாடலும் சிதைவுகளாகக் கிடைக்கின்றன.
- முதல் 22 பாட்டுக்கும் துறை, பாடியோர் பெயர், பாடப்படும் பாணி, பண் வகுத்தோர் ஆகியவை குறிக்கப்பட்டிருக்கின்றன. வேறு வகையால் கிடைக்கப்பெற்றவைகளுக்கு இக்குறிப்புகள் இல்லை.
- இந்நூல் முழுமையும் கிடைக்கப் பெறாமையால் இதனைத் தொகுத்தோர் பெயரும் பிறவும் அறிய முடியவில்லை.
- கிடைத்தவை மட்டும் வைத்து நோக்கும்போது நல்லந்துவனார் முதலாக 13 பேர் பாடி இருப்பதாகத் தெரிகிறது.
- வையைப் பற்றிய பாடல்கள் அகம் சார்ந்தன.
- கடவுள் வாழ்த்துப் பற்றிய பாடல்கள் புறம் சார்ந்தன.
- பாடலைத் தொகுத்தவர் பெயர் தெரியவில்லை.
- பரிபாடலுக்கு பரிமேலழகர் உரை இயற்றியுள்ளார்.
- இதனை முதன் முதலில் தொகுத்தவர் உ.வே.சாமிநாதர்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

## பத்துப்பாட்டு

- எட்டுத் தொகையில் அடி நீண்டு வரும் பாடல்களைத் தனியே தொகுத்து அதற்கு பாட்டு என்று பெயரிட்டுள்ளனர்.
- பாட்டு என்பது பத்துப் பாடல்கள் அடங்கிய பத்துப்பாட்டைக் குறிக்கும்.

**முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை**
**பெருகு வளமதுரைக் காஞ்சி - மருவினிய**
**கோல நெடு(நல்)வாடை கோல்குறிஞ்சி பட்டினப்**
**பாலை கடாத்தொடும் பத்து.**

- இப்பத்துப்பாட்டின் சிற்றெல்லை 103 அடிகள், பேரெல்லை 782 அடிகளாகும்.
- 103 அடிகளைக் கொண்ட பத்துப்பாட்டு நூல் முல்லைப்பாட்டு.
- 782 அடிகளைக் கொண்ட பத்துப்பாட்டு நூல் மதுரைக்காஞ்சி.
- இவற்றுள் ஆற்றுப்படைகளாக வருவன ஐந்து நூல்கள்
- அவை,
    - ❖ திருமுருகாற்றுப்படை (புலவராற்றுப்படை),
    - ❖ பொருநராற்றுப்படை,
    - ❖ சிறுபாணாற்றுப்படை,
    - ❖ பெரும்பாணாற்றுப்படை,
    - ❖ கூத்தராற்றுப்படை (மலைபடுகடாம்)
- ஆற்றுப்படை நூல்கள் அனைத்தும் புறநூல்களாகும்.
- ஏனைய ஐந்து நூல்களும் அகம், புறம் சார்ந்தவைகளாகும்.
- பத்துப்பாட்டில் அகத்திணை நூல்கள் மூன்று.
- அவை,



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- ❖ முல்லைப் பாட்டு,
- ❖ குறிஞ்சிப்பாட்டு,
- ❖ பட்டினப்பாலை.

- பத்துப்பாட்டில் புறத்திணை நூல்கள் ஆறு.

- அவை,

  - ❖ **திருமுருகாற்றுப்படை (புலவராற்றுப்படை),**
  - ❖ **பொருநராற்றுப்படை,**
  - ❖ **சிறுபாணாற்றுப்படை,**
  - ❖ **பெரும்பாணாற்றுப்படை,**
  - ❖ **கூத்தராற்றுப்படை (மலைபடுகடாம்)**

  } **ஆற்றுப்படை**

  - ❖ **மதுரைக் காஞ்சி** உடன் சேர்த்து ஆறு நூல்களாகும்.

- பத்துப்பாட்டில் அகப்புற நூல் ஒன்று. அது, **நெடுநல்வாடை**..

## 1. திருமுருகாற்றுப்படை

- பத்துப்பாட்டின் முதல் நூலாக அமைவது திருமுருகாற்றுப்படை.
- இது பத்துப்பாட்டின் கடவுள் வாழ்த்துப் பாடலாகவும் அமைகிறது.
- பத்துப்பாட்டில் காலத்தால் பிந்தைய நூல்.
- ஆசிரியப்பாவால் ஆனது.
- திருமுருகாற்றுப்படையைப் புலவராற்றுப்படை என்றும் அழைப்பர்
- இதனை இயற்றியவர் நக்கீரர்.
- இந்நூல் 317 அடிகளைக் கொண்டது.
- இது முருகப் பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டுள்ளது.
- ஆபத்தில் மாட்டிக் கொண்ட ஒரு புலவன் அதிலிருந்து மீண்டு வருவதற்கான வழிவகைகளை இந்நூல் குறிப்பிடுகிறது.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- ஏனைய ஆற்றுப்படை நூல்கள் பரிசில் பெறச் செல்வோரின் பெயரால் அமைய, திருமுருகாற்றுப்படை மட்டும் பரிசில் கொடுப்போன் பெயரால் அமைந்துள்ளது.

## 2. பொருநராற்றுப்படை

- பத்துப்பாட்டின் இரண்டாவது நூலாக அமைவது பொருநராற்றுப்படை
- இதன் ஆசிரியர் முதடத்தாமைக் கண்ணியார்.
- பாட்டுடைத் தலைவன் கரிகால் பெருவளத்தான்.
- இதில் 248 அடிகள் உள்ளன.
- இது ஆசிரியப்பாவால் ஆன நூல்.
- இவ்வாசிரியப்பாவில் வஞ்சியடிகள் இடையிடையே விரவி வருகின்றன.
- போர்க்களத்தில் பாடுவோன் பொருநன்.

## 3. சிறுபாணாற்றுப்படை

- பத்துப்பாட்டின் மூன்றாவதாக அமைவது சிறுபாணாற்றுப்படை
- இதன் ஆசிரியர் இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார்.
- 269 அடிகளைக் கொண்ட இந்நூல் ஆசிரியப்பாவால் ஆனது.
- இதன் பாட்டுடைத் தலைவன் ஓய்மா நாட்டு நல்லிய கோடன்.
- ஓய்மா நாடு என்பது திண்டிவனத்தை ஒட்டிய பகுதிகள்.
- இடைக்கழி நாடு என்பது செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டத்தில் உள்ள கடற்கரைப் பகுதி.
- உப்பங்கழிக்கும் கடலுக்கும் இடைப்பட்டப்பகுதி இடைக்கழிநாடு எனப்படும்.

## 4. பெரும்பாணாற்றுப்படை

- பத்துப்பாட்டின் நான்காவதாக அமைவது பெரும்பாணாற்றுப்படை.
- இதன் ஆசிரியர் கடியலூர் உருத்திரங் கண்ணனார்.

www.Padasalai.Net



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- கண்ணன் என்பது இயற்பெயர், உருத்திரன் என்பது தந்தையார் பெயர்.
- 500 அடிகளைக் கொண்ட இந்நூல் ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டுள்ளது.
- இதன் பாட்டுடைத் தலைவன் தொண்டைமான் இளந்திரையன்.

## 5. முல்லைப்பாட்டு

- பத்துப்பாட்டின் ஐந்தாவதாக அமைவது முல்லைப்பாட்டு.
- இது அகத்திணை நூல்.
- அகவற்பவால் ஆனநூல்.
- 103 அடிகளைக் கொண்டது.
- இதனைப் பாடியவர் காவிரிப் **பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார் மகன் நப்பூதனார்.**

## 6. மதுரைக்காஞ்சி

- பத்துப்பாட்டின் ஆறாவதாக அமைவது மதுரைக் காஞ்சி
- இது புறத்திணை நூல்
- 782 அடிகளைக் கொண்டது
- இது ஆசிரியப்பாவால் ஆனநூல். இடையிடையே வஞ்சியடிகள் விரவி வருதலால் இதனை **வஞ்சிப்பாட்டு** என்று கூறுவர்.
- இதனை இயற்றியவர் மதுரைக்காஞ்சி எனப் புகழப்படும் **மாங்குடி மருதனார்** ஆவார்.
- இதன் பாட்டுடைத் தலைவன் **தலையாலங் கானத்து செருவென்ற பாண்டியன் நெருஞ்செழியன்.**

## 7. நெடுநல்வாடை

- பத்துப்பாட்டின் ஏழாவதாக அமைவது நெடுநல்வாடை
- இது அகப்புற நூல்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- 188 அடிகளைக்கொண்டது.
- ஆசிரியப்பாவால் ஆனது.
- இது ஒரு அகத்திணை நூல்.
- இதன் ஆசிரியர் **நக்கீரர்**.
- பாடுடைத்தலைவன் **தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன்.**

## 8. குறிஞ்சிப்பாட்டு

- பத்துப்பாட்டின் எட்டாவதாக அமைவது **குறிஞ்சிப்பாட்டு.**
- இது அகத்திணை நூல்.
- இதற்கு **பெருங்குறிஞ்சி** என்ற பெயரும் உண்டு.
- இதனை இயற்றியவர் **கபிலர்.**
- இதில் **261** அடிகள் உள்ளன.
- **அகவற்பாவால்** இயற்றப்பட்டுள்ளது.
- இதனை ஆரிய அரசன் பிரகதத்தனுக்குத் தமிழ் அறிவித்தற்காகக் கபிலர் பாடினார் என்ற ஒரு வரலாறும் உண்டு.
- இதில் தமிழ் என்பது அகப்பொருள் என்றும் கூறுவர்.
- இப்பாடல் தோழி செவிலித்தாய்க் கூறுவதாக அமைகிறது.
- 99 வகை பூக்களின் பெயர்களை இந்நூல் குறிப்பிடுகிறது.
- 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் பூ குறிஞ்சி.

## 9. பட்டினப்பாலை

- பத்துப்பாட்டின் ஒன்பதாவதாக அமைவது பட்டினப்பாலை.
- இது அகத்திணை நூல். 301 அடிகளைக் கொண்டுள்ளது.
- ஆசிரியப்பாவால் ஆனது. எனினும் வஞ்சியடிகள் நிறைய வருதலின் இதனை **வஞ்சி நெடும்பாட்டு** என்றும் கூறுவர்.
- இதனைப் பாடியவர் **கடியலூர் உருத்திரங் கண்ணனார்**.
- பாட்டுடைத் தலைவன் **சோழன் கரிகால் பெருவளத்தான்**.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| வ. எண் | நூல் | பாடல் எண்ணிக்கை | யாப்பு | நூலின் பண்பு | ஆசிரியர் | பாடுடைத் தலைவன் | வேறு பெயர்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | திருமுருகாற்றுப்படை | 317 | ஆசிரியப்பா | ஆற்றுப்படை | நக்கீரர் | முருகன் | புலவாராற்றுப்படை |
| 2 | பொருநராற்றுப் படை | 248 | ஆசிரியப்பா | ஆற்றுப்படை | முடத்தாமக் கண்ணியார் | கரிகால் வளவன் | |
| 3 | சிறுபாணாற்றுப் படை | 269 | ஆசிரியப்பா | ஆற்றுப்படை | நல்லூர் நத்தத்தனார் | நல்லிய கோடன் | |
| 4 | பெரும்பாணாற்றுப்படை | 500 | ஆசிரியப்பா | ஆற்றுப்படை | கடியலூர் உருத்திரங் கண்ணனார் | தொண்டைமான் இளந்திரையன் | பாணாற்றுப் படை |
| 5 | முல்லைப் பாட்டு | 103 | ஆசிரியப்பா | அகத்திணை | நப்பூதன் | இல்லை | |
| 6 | மதுரைக்காஞ்சி | 782 | ஆசிரியப்பா | புறத்திணை | மாங்குடி மருதனார் | தலையாலங் கானத்து செருவென்ற நெடுஞ்செழியன் | வஞ்சிப் பாட்டு |
| 7 | நெடுநல்வாடை | 188 | ஆசிரியப்பா | அகப்புறத் திணை | நக்கீரர் | தலையாலங் கானத்து செருவென்ற நெடுஞ்செழியன் | |
| 8 | குறிஞ்சிப்பாட்டு | 261 | ஆசிரியப்பா | அகத்திணை | கபிலர் | இல்லை | பெருங் குறிஞ்சி |
| 9 | பட்டினப்பாலை | 301 | ஆசிரியப்பா | அகத்திணை | கடியலூர் உருத்திரங் கண்ணனார் | இல்லை | வஞ்சி நெடும் பாட்டு |
| 10 | மலைபடுகடாம் | 583 | ஆசிரியப்பா | புறத்திணை | பெருங்கௌசிகனார் | நன்னன் | கூத்தராற்றுப்படை |



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

## 10. மலைபடுகடாம்

- பத்துப்பாட்டின் பத்தாவதாக அமைவது மலைபடுகடாம்.
- கடாம் என்பது மதம். மதம் பிடித்த பெருயாணை முழக்கம். மதம்பிடித்த யானை பிளிறும் ஓசைபோல் மலையில் ஓசை அமைகிறது என்பதே மலைபடுகடாம் என்பதன் பொருள்.
- இதற்குக் **கூத்தராற்றுப்படை** என்ற வேறு பெயரும் உண்டு.
- இதனைப் பாடியவர் **இரணிய முற்றத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார்.**
- இது **நன்னனைப்** புகழ்ந்து பாடும் நூல்.
- 583 அடிகளைக்கொண்ட நூல்.
- ஆசிரியப்பாவால் ஆனது.
- இசைக்கருவிகளின் பெயர்களைக் கூறும் நூல் இது.
- யாழினைப் புகழ்ந்து இந்நூல் தொடங்குகிறது.

www.Padasalai.Net



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)**

**பாடம் : தமிழ்**

**பகுதி : ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறுக்காப்பியங்கள்**

**©காப்புரிமை :**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)** க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

## காப்பிய இலக்கியத் தகவல்கள்

- காப்பிய இலக்கணம் குறித்துக் கூறும் நூல் தண்டியலங்காரம்.
- காப்பியம் பெருங்காப்பியம் சிறுகாப்பியம் என இரு வகைப்படும்.
- அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற்பொருளையும் கூறுவது பெருங்காப்பியம் எனப்படும்.
- அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கில் ஒன்றோ பலவோ குறைந்து வருவது சிறுகாப்பியம் எனப்படும்.

## ஐம்பெருங்காப்பியங்கள்

- ஐம்பெருங்காப்பியங்கள் என்ற தொடரை முதன் முதலில் கூறியவர் மயிலைநாதர்; (நன்னூல் 387) உரை.
- சிலப்பதிகாரம் - இளங்கோவடிகள்
- மணிமேகலை -சீத்தலைச் சாத்தனார்
- சீவக சிந்தாமணி - திருத்தக்க தேவர்
- வளையாபதி -பெயர் தெரியவில்லை
- குண்டலகேசி - நாதகுத்தனார்
- சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் ஆகும்.
- சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, வளையாபதி என்ற மூன்றும் சமணக் காப்பியங்கள்
- மணிமேகலை, குண்டலகேசி, என்ற இரண்டும் பௌத்த காப்பியங்கள்
- ஐஞ்சிறுகாப்பியங்கள் அனைத்தும் சமணக் காப்பியங்கள் ஆகும்.
- குண்டலகேசிக்கு எதிராகச் செய்யப்பட்டது நீலகேசி
- நீலகேசி ஐஞ்சிறு காப்பியத்துள் ஒன்று (காண்க ஐஞ்சிறு காப்பியங்கள்)



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

## 1. சிலப்பதிகாரம்

### நூற் குறிப்பு:

- சிலம்பு +அதிகாரம் = சிலப்பதிகாரம்
- கண்ணகியின் சிலம்பால் விளைந்த கதையை முதன்மையாகக் கொண்டது. ஆதலின் சிலப்பதிகாரமாயிற்று.
- சிலப்பதிகாரம் எனும் செந்தமிழ்க் காப்பியம் புகார்க் காண்டம், மதுரைக் காண்டம்,
- வஞ்சிக் காண்டம் எனும் முப்பெருங்கண்டங்களையும் முப்பது காதைகளையும் உடையது.
- புகார்க்காண்டம் பத்து காதைகளையும், மதுரைக் காண்டம் பதின்மூன்று
- காதைகளையும் வஞ்சிக் காண்டம் ஏழு காதைகளையும் கொண்டுள்ளது.
- இது உரையிடப்பட்ட பாட்டுடைச் செய்யுள் எனவும் வழங்கப்பெறும்.
- முதற் காப்பியம், இரட்டைக் காப்பியம், முத்தமிழ் காப்பியம், குடிமக்கள் காப்பியம், ஒற்றுமைக் காப்பியம், நாடகக் காப்பியம் எனச் சிலப்பதிகாரத்தைப் போற்றி புகழ்வோர்.
- ஐம்பெருங்காப்பியங்களில் முதன்மையானது சிலப்பதிகாரம்
- ஆசிரியர் இளங்கோவடிகள்
- இளங்கோவடிகள் துறவு பூண்டு அமர்ந்த இடம் குடவாயிற் கோட்டம் என்ற ஊர்.
- குடவாயிற் கோட்டம் சேர நாட்டு ஊர்
- மூன்று காண்டம் முப்பது காதை
- காதை - கதை பொதிந்துள்ள பாட்டு
- புகார் காண்டம் : மங்கல வாழ்த்துப் பாடல் முதல் நாடுகாண் காதை வரை உள்ள 10 காதைகள்
- மதுரைக் காண்டம்: காடுகாண் காதை முதல் கட்டுரைக் காதை வரை உள்ள 13 காதைகள்
- வஞ்சிக் காண்டம் : குன்றக் குரவை முதல் வரந்தருகாதை உள்ள 13 காதைகள்
- சிலப்பதிகாரம் ஆசிரியப் பாவாலும் கொச்சகக் கலிப்பாவாலும் ஆனது.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

## ஆசிரியர் குறிப்பு:

- இளங்கோவடிகள் சேர மரபினர்
- இளங்கோவடிகளின் தந்தை இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் , தாய் நற்சோனை
- இவரது தமையன் சேரன் செங்குட்டுவன்
- இளையவரான இளங்கோவே நாடாள்வார் என்று கணியன் கூறிய கருத்தைப் பொய்ப்பிக்கு ம் பொருட்டு இளங்கோ இளமையிலேயே துறவு பூண்டு குணவாயிற் கோட்டத்தில் தங்கினார்.
- அரசியல் வேறுபாடு கருதாதவர், சமய வேறுபாடற்ற துறவி.
- இவர் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.

## சிலம்பின் புகழ்:

- “நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு” - பாரதியார்
  “சிலப்பதிகாரச் செய்யுளைக் கருதியும் ... தமிழ்ச் சாதியை அமரத்தன்மை வாய்ந்தது என்று உறுதி கொண்டிருந்தேன்” - பாரதியார்

- “யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
  வள்ளுவனைப் போல் இளங்கோவனைப் போல்
  பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை” - பாரதியார்

- “தமிழ் கூறும் நல் உலகம்” என்று மூன்று நாடுகளையும் ஒருங்கே காணும் தன்மை தொல்காப்பியத்தில் உண்டு. ஆனால் சங்க இலக்கியத்தில் இல்லை.
  “முதன்முதலாகத் தமிழ் மக்கள் எல்லோரையும் ஒருங்கே காணும் நெறியில் நின்று நூல் செய்தவர் இளங்கோவடிகள் - மு.வரதராசனார்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- நாட்டுப்புறப் பாடல்களுக்குச் சிறப்பு த் தந்து முதலில் பாடியவர் இளங்கோவடிகள்
- நாட்டுப்புறப் பாடல்களுக்குச் சிறப்புத் தந்து இணங்கோவடிகளை அடுத்துப் பாடியவர் மாணிக்கவாசகர்;
- சைவ வைணவ நெறிகளையும் பாடிய சமணநூல் சிலப்பதிகாரம்
- முதல் காப்பியம், முத்தமிழ்க் காப்பியம், நாடகக் காப்பியம்
- முதல் தேசியக் காப்பியம் சிலப்பதிகாரம்
- இரண்டாவது தமிழ் தேசிய காப்பியம் பெரிய புராணம்
- பாவின் வளர்ச்சிக்கு வித்திட்ட நூல் சிலப்பதிகாரம்
- சிலப்பதிகாரத்திற்குச் சிறந்த உரை எழுதியவர் அடியார்க்கு நல்லார்.

## முக்கிய கதை மாந்தர்கள்:

- தலைவன் கோவலன்
- தலைவி கண்ணகி (சங்க காலத்துக் கடையெழு வள் ளல்களில் ஒருவனான பேகனின் மனைவி பெயரும் கண்ணகி)
- ஆடல் மங்கை மாதவி
- கோவலன் தந்தை மாசாத்துவான்
- கண்ணகியின் தந்தை மாநாய்கன்
- மாதவியின் தாய் சித்திராபதி
- கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்தவள் மணிமேகலை
  கண்ணகியின் தோழி தேவந்தி (இவள் ஓர் அந்தணப் பெண் இவள் கணவன் பாசண்ட சாத்தன்)
- மாதவியின் தோழி வயந்தமாலை
- பெண் சமணத்துறவி கவுந்தியடிகள்
- ஆண் பௌத்தத் துறவி அறவண அடிகள்

## செய்திகள்:

- சிலம்பின் குறிக்கோள் மூன்று
- கோவலன் - மாதவி பிரிவுக்குக் காரணம் ஊழ்
- கோவலன் மதுரை சென்றதுக்குக் காரணம் ஊழ்
- கோவலன் கொலையுண்டதற்குக் காரணம் ஊழ்
- மதுரை எரிந் ததற்குக் காரணம் ஊழ் என்று இளங்கோவடிகள் கருதுகிறார்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- இளங்கோவடிகளுக்குக் கண்ணகியின் வரலாற்றைக் கூறியவர் சீத்தலைச் சாத்தனார்.
- கண்ணகியின் வரலாற்றைச் சீத்தலைச் சாத்தனார் எழுத வேண்டும் என்று சொன்னவர் இளங்கோவடிகள்
- கண்ணகியின் வரலாற்றை எழுதத் தகுதியுடையவர் இளங்கோவடி களே என்று சொல்லி அவரே எழுத வேண்டும் என்று சொன்னவர் சீத்தலைச் சாத்தனார்.
- இளங்கோவடிகள் தம் நூலைச் சீத்தலைச் சாத்தனார் முன் அரங்கேற்றினார்.

## 2. மணிமேகலை

- ஆசிரியர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்
- வேறுபெயர் தண்டமிழ்ச் சாத்தன், தண்டமிழ்ப் புலவன்
- காலம் 2 ஆம் நூற்றாண்டு
- இந்நூலுக்கு மணிமேகலைத் துறவு என்ற பெயரும் உண்டு
- பௌத்த காப்பியம்
- தமிழன் இரண்டாம் காப்பிய நூல்
- சமய பூசலுக்கு வித்திட்ட நூல்
- துறவுக்கு முதன்மை கொடுக்கும் நூல்
- கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மணிமேகலை என்ற பெண்ணின் வரலாற்றைக் கூறும் நூல்
- பெண்ணின் பெருமை பேசும் நூல் (சிலப்பதிகாரம் போன்று)
- சங்க இலக்கியம் இல்லறத்திற்கு முதன்மை கொடுத்தது திருக்குறள் இல்லறம் துறவறம் இரண்டுக்கும் முதன்மை கொடுத்தது மணிமேகலை துறவுக்கு முதன்மை கொடுத்தது.

### நூல் அமைப்பு:

- காண்டப் பிரிவுகள் இல்லை
- 30 காதைகள் உள்ளன
- முதல் காதை விழாவறைக் காதை
- இறுதிக் காதை பவத்திறம் அறுக என பாவை நோற்ற காதை
- முழுவதும் ஆசிரியப் பாவால் ஆனது.
- 27-வது சமயக்கணக்கர்தம் திறம் கேட்ட காதை மட்டும் இணைக் குறள்
- ஆசிரியப்பாவாலானது மற்றவை நிலை மண்டில ஆசிரியப்பாக்கள்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**ஆசிரியர் குறிப்பு:**

- மணிமேகலையின் ஆசிரியர் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்.
- சாத்தன் என்பது இவரது இயற்பெயர்
- இவர் திருச்சிராப்பள்ளியைச் சார்ந்த சீத்தலை என்னும் ஊரில் பிறந்து மதுரையில் வாழ்ந்தார்
- கூலவாணிகம் (கூலம் - தானியம்) செய்தவர்.
- இவர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்று வழங்கப்பெற்றார்.
- இளங்கோவடிகளும் இவரும் சமகாலத்தவராவார்.
- இவர் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர்.
- தண்டமிழ் ஆசான் சாத்தன் தன்னூற்புலவன் என்று இளங்கோவடிகள் சாத்தனாராகப் பாராட்டியுள்ளார்.
- இவரது காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு என்பர்.

**நூற்குறிப்பு:**

- மணிமேகலை ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று.
- மணிமேகலையின் துறவு வாழ்க்கையைக் கூறுவதால் இந்நூலுக்கு மணிமேகலையைத் துறவு என்னும் வேறு பெயரும் உண்டு.
- இந்நூல் சொற்சுவையுமம் பொருட்சுவையும் இயற்கை வருணனைகளும் நிறைந்தது. பௌத்த மதச் சார்புடையது.
- முப்பது காதைகளைக் கொண்டது
- முப்பது காதைகளுள் ஆபுத்திரன் நா டு அடைந்த காதை இருபத்து நான்காவது காதை.

**கதை மாந்தர்:**

- மணிமேகலையின் தோழி சுதமதி கண்ணகியின் தோழி தேவந்தி
- ஆதிரையின் கணவன் சாதுவன்
- மணிமேகலைக்கு முதன்முதலாக அமுதசுரபியில் பிச்சையிட்டவள் ஆதிரை
- ஆதிரையின் வரலாற்றை மணிமேகலைக்குச் சொன்னவள் காய சண்டிகை
- விருச்சிக முனிவரால் பசிநோய் சாபம் பெற்றவள் காய சண்டிகை
- காய சண்டிகையின் பசிநோயைப் போக்கியவள் மணிமேகலை



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- மணிமேகலையை மணிபல்லவத்தீவுக்கு அழைத்துச் சென்ற தெய்வம் மணிமேகலாத் தெய்வம்
- மணிமேகலாத் தெய்வம் மணிமேகலைக்குக் கொடுத்த வரம் மூன்று
- ஆபுத்திரனுக்கு அமுதசுரபியைக் கொடுத்தது சிந்தாதேவி
- அமுதசுரபியைக் கோமுகியில் இட்டவன் ஆபுத்திரன்
- அமுத சுரபி பற்றி மணிமேகலைக்குச் சொன்னது தீவதிலகை

**இடங்கள்:**

- மணிமேகலை பிறந்த ஊர் பூம்புகார்
- மணிமேகலை மறைந்த ஊர் காஞ்சிபுரம்
- மணிமேகலை சமயவாதிகளிடம் உண்மை கேட்ட ஊர் வஞ்சி மாநகரம்
- பூம்புகாரில் உள்ள சோலைகள் : இலவந்திகை, உய்யாவனம், உவவனம், கவேரவனம், சம்பாதிவனம்
- மணிமேகலை பூக்கொய்யச் சென்ற வனம் உவவனம்
- மணிபல்லவத்தில் இருந்த பீடிகை புத்தபீடிகை
- அமுத சுரபி இருந்த இடம் கோமுகி
- அமுத சுரபிக்கு வேறு பெயர் அட்சய பாத்திரம்

**செய்திகள்:**

- சம்புத் தீவின் தெய்வம் சம்பு
- சம்புத் தீவிற்கு நாவலந்தீவு என்ற வேறுபெயரும் உண்டு
- நாவலந்தீவு என்பது இந்தியா
- சம்பாபதி புகார் நகரத்திற்குக் காவிரி பூம்பட்டினம் என்று பெயர் அளி;த்தது.
- முதன்முதலில் இந்திரவிழா எடுத்தவன் தூங்கெயில் எறிந்த தொடிதோட் செம்பியன்
- இந்திரவிழா 28 நாட்கள் நடைபெறும்.
- மழை வேண்டி எடுக்கப்படும் விழா இந்திரா விழா
- பூம்புகாரில் இந்திரவிழா மிகச் சிறப்பாக நடந்ததாக சிலப்பதிகாரம் மணிமேகலை என்ற இரண்டு நூல்களும் கூறுகின்றன.
- மூவகைப் பத்தினிப் பெண்டிர்
  1. உடன் எரி மூழ்குவர்
  2. தனிஎரி மூழ்குவர்
  3. கைம்மை நோன்பு நோற்பார்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- உடல் அடக்க முறை ஐந்து
  1. சுடுதல்
  2. வாளா இடுதல்
  3. தோண்டிப்புதைத்தல்
  4. பள்ளத்தில் அடைத்தல்
  5. தாழியில் கவிழ்தல்
- தீயவை பத்து
  1. கொலை 2. களவு 3. காமம்
  4. பொய் 5. குறளை 6. கடுமொழி
  7. பயனில் சொல் 8. வெஃகல் 9. வெகுளல்
  10. பொல்லாக்காட்சி

### 3. சீவக சிந்தாமணி

- ஆசிரியர் திருத்தக்க தேவர்
- காலம் 9 ஆம் நூற்றாண்டு. கருத்து வேறுபாடு உண்டு.
- திருத்தக்க தேவர் நிலையாமை குறித்து எழுதிய நூல் நரிவிருத்தம்
- விருத்தப்பாவால் இயற்றப்பட்ட முதல் காப்பியம்
- சமணக் காப்பியம்
- மணநூல், காமநூல்,முக்தி நூல் என்ற வேறு பெயர்களும் உண்டு.
- வட மொழியில் உள்ள கத்திய சிந்தாமணி, சத்திர சூளாமணி என்ற இரு நூலையும் தழுவி எழுதப்பட்டது சீவக சிந்தாமணி
- காண்டப் பிரிவு இல்லை
- 13 இலம்பகங்களையும் 3145 பாடல்களையும் கொண்டது.
- முதல் இலம்பகம் நாமகள் இலம்பகம்
- இறுதி இலம்பகம் முக்தி இலம்பகம்
- காப்பியத் தலைவன் சீவகன்
- சீவகன் சிந்தாமணியுடன் ஒப்பிடப்பட்டுள்ளான்.
- சிந்தாமணி என்பது கேட்டதைக் கொடுக்கும்
- தேவலோகத்தில் உள்ள ஒரு மணி (ரத்தினம்)
- சீவகனின் தந்தையான சச்சந்தனைக் கொன்றவன் கட்டியங்காரன்
- சீவகன் பிறந்த இடம் சுடுகாடு
- சீவகனை எடுத்து வளர்த்தவன் கந்துக்கடன் என்னும் வணிகன்
- சீவகனுக்குக் கல்வி கற்பித்த ஆசிரியர் அச்சணந்தி
- திருத்தக்கதேவர் சோழர்குலத்தில் பிறந்தவர் இவர்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- இவர் சமண சமயத்தைச் சார்ந்தவர்
- இவர் பாடிய மற்றொரு நூல் நரி விருத்தம் ஆகும்.

## நூல் குறிப்பு:

- ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று சீவகசிந்தாமணி
- இந்நூலின் கதைத் தலைவன் சீவகன்
- அவன் பெயரை இணைதத்துச் சீ வகசிந்தாமணி எனப் பெயர் பெற்றது என்பர்.
- இந்நூலுக்கு மணநூல் என்னும் வேறு பெயரும் உண்டு.

## சிறப்பு:

- அனைத்துச் சமயத்தவரும் விரும்பிக்கற்ற சமணக் காப்பியம்
- சைவனான குலோத்துங்க மன்னன் விரும்பிக்கற்ற காப்பியம்
- நூல் முழுமைக்கும் சைவரான நச்சினார்க்கினியர் உரை எழுதினார்.
- இவர் இருமுறை உரை எழுதினார் என்பர்
- சைவரான உ.வே.சா. அவர்கள் முதன் முதலில் பதிப்பித்தார்.
- அவர் பதிப்பித்த முதல் நாலும் சீவகசிந்தாமணியே ஆகும்.
- கிறித்துவரான ஜி.யு.போப் இதனை இலியட் ஒடிசியுடன் ஒப்பிட்டுள்ளார்.

### 4. வளையாபதி

- ஆசிரியர் பெயர் தெரியவில்லை
- சமணக் காப்பியம்
- விருத்தப்பாவால் ஆனது
- முழுமையாகக் கிடைக்கவில்லை
- கிடைத்தவை 72 பாக்கள்
- மூல நூல் வைசிக புராணம் 35 வது சுருக்கம்
- நவகோடி நாராயணன் பற்றிய நூல்
- மடலேறுதல் பற்றிக் கூறும் காப்பிய நூல்
- ஒட்டக் கூத்தர் கவியழகு வேண்டி வளையாபதியை நினைத்தார் என்று தக்கயாகப்
- பரணியின் உரையாசிரியர் கூறுகிறார்.சிறப்பு
- இலக்கண இலக்கிய உரையாசிரியர்களால் மிகவும் போற்றப்பட்ட நூல்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

## 5. குண்டலகேசி

- ஆசிரியர் நாதகுத்தனார்
- காலம் 7 ஆம் நூற்றாண்டு
- பௌத்த காப்பியம்
- சுருண்ட தலைமுடியை உடையவள் என்று பொருள்
- குண்டலகேசி விருத்தம் அகல கவி என்ற வேறு பெயர்களும் உண்டு.
- நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை
- கிடைத்தவை 224 பாடல்கள்
- குண்டல கேசியின் வரலாற்றை நீலகேசி கூறுகிறது
- குண்டல கேசியின் இயற்பெயர் பத்திரை
- இராசகிருக நாட்டு மந்திரியின் மகள்
- குண்டலகேசியின் கணவன் காளன் இவன் ஒரு கள்வன்
- குண்டலகேசி சாரிபுத்தரிடம் தோற்றுப் புத்தமதம் தழுவினாள்
- கலைஞரால் 'மந்திரி குமாரி' என்று திரைப்படமாக்கப்பட்டது.

## ஐஞ்சிறு காப்பியங்கள்

- ஐஞ்சிறு காப்பியங்கள் அனைத்தும் சமணக் காப்பியங்களே
- அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கில் ஒன்றோ பலவோ குறைந்து வருவது
- சிறுகாப்பியம் என்று இதன் இலக்கணத்தைத் தண்டியலங்காரம் கூறுகிறது.
- ஐஞ்சிறு காப்பியம் என்ற வழக்கினை ஏற்படுத்தியவர் ச.வை.தாமோதரம் பிள்ளை ஆவார்.
- நாக குமார காவியம் - ஆசிரியர் தெரியவில்லை (கந்தியார்)
- உதயண குமார காவியம் - ஆசிரியர் தெரியவில்லை (கந்தியார்)
- யசோதர காவியம் - வெண்ணாவலூர் உடையார் வேள் நீலகேசி - ஆசிரியர் தெரியவில்லை
- சமண சமயத்துப் பெண் துறவியின் பொதுப்பெயர் கந்தியார்

### 1. நாககுமார காவியம்

- ஆசிரியர் பெயர் தெரியவில்லை கந்தயார் ஒருவர் எழுதினார் என்பர்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- நாகபஞ்சமி நோன்பின் சிறப்பைக் கூறும் நூல்
- இந்நூலுக்கு நாகபஞ்சமி கதை என்ற வேறுபெயரும் உண்டு
- இராசகிரியில் உள்ள விபுலி மலையில் வீற்றிருக்கும் வர்த்தமான மகாவீரரை வணங்குவதற்குச் சி ரேணிக மாமன்னனும் அவன் தேவியாகிய சாலினியும் சென்றனர் . அக்கோயிலில் இருந்த தவ முனிவராகிய கௌதமர் அவர்களுக்கு நாககுமாரனது கதையை எடுத்துரைக்கிறார்.
- மணத்தையும் போகத்தையும் மிகுதியகாகக் கூறும் சமண நூல்

## 2. உதயணகுமார காவியம்

- ஆசிரியர் பெயர் தெரியவில்லை கந்தியார் என்பர்.
- மூலநூல் பெருங்கதை
- காண்டங்கள் 6,விருத்தப்பாக்கள் 369

  1. உஞ்சைக் காண்டம் 2. இலாவண காண்டம்
  3. மகதகாண்டகம் 4. வத்தவ காண்டம்
  5. நரவாகன காண்டம் 6. துறவுக் காண்டம்
- பெருங்கதையின் முதற்பகுதியும் இறுதிப் பகுதியும் கிடைக்கவில்லை . முழுக் கதையையும் அறிய இந்நூல் துணைபுரிகிறது.
- உதயணன் குலம் குருகுலம்
- பெற்றோர் சதானிகன்ää மிருகாபதி
- நாடு வத்தவ நாடு
- தலை நகரம் கோசாம்பி
- சூரிய உதயத்தில் பிறந்ததால் உதயணன் எனப்பட்டான்.
- உதயணனுக்கு 'விச்சை வீரன்' என்ற வேறு பெயரும் உண்டு
- விச்சை வீரன் என்றால் பலகலை வல்லவன் என்று பொருள்
- உதயணனைச் சிறைப்படுத்தியவன் உச்சியினி மன்னன் பிரச் சோதனன்
- உதயணன் யாழின் பெயர் கோடபதி
- இவன் அமைச்சன் பெயர் யூகி (நண்பனும் ஆவான்)
- உதயணனுக்கு நான்கு மனைவியர்

## 3. யசோதர காவியம்

- ஆசிரியர் வெண்ணாவலூர் உடையார்வேள்
- சருக்கம் 5, பாடல்கள் 320



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- வடமொழியில் எழுதப்பட்ட உத்திர புராணத் திலிருந்து இதன் கதை எடுக்கப்பட்டது என்றும் , புட்பதத்தர் எழுதிய யசோதர சரிதத்தின் தழுவல் என்றும் கூறுவர்.
- உயிர்க்கொலை தீது என்று உணர்த்தும் நூல்
- நல்ஞானம் நற்காட்சி நல்ஒழுக்கம் இம்மூன்றும் மும்மணிகள்
- ஏழுவகை நரகங்கள் கூறப்படுகின்றன அவை .

  1. இருளில் இருள் 2. இருள்
  3. புகை 4. சேறு 5. மணல்
  6. பரல் 7. மருள்

## 4. நீலகேசி

- நீலகேசி என்றால் கருத்த கூந்தலை உடையவள் என்று பொருள்
- ஆசிரியர் பெயர் தெரியவில்லை
- சருக்கம் 10 (பதிகவுரைச் சருக்கம் நீங்கலாக)
- பாடல்கள் 894
- நீலகேசித் தெருட்டு என்ற வேறு பெயரும் உண்டு
- சமண முனிவர் முனிச் சந்திரனை நீலி என்ற பெண் அச்சுறுத்தி மயக்க முயல்கிறாள். மயங்காத முனிவர் அறிவுரை கூற , அவள் திருந்தி சமணமதத்தை ஏற்றுப் பிற சமய வாதிகளை வெற்றி கொள்கிறாள்.
- சமணம் அல்லாத பிற இந்திய சமயங்கின் கோட்பாடுகளைத் தருக்க முறையில் மறுத்துரைக்கும் நூல்
- குண்டலகேசி என்ற நூலு க்கு எதிராக எழுதப்பட்ட நூல் நீலகேசி உரையாசிரியர் சமய திவாகர வாமன முனிவர் . இவ்வுரைக்குச் சமய திவாகர விருத்தி என்ற பெயரும் உண்டு

## 5. சூளாமணி

- ஆசிரியர் தோலா மொழித்தேவர். இயற்பெயர் வர்த்தமான தேவர்
- சருக்கம் 12 விருத்தப்பாக்கள் 2330
- காப்பியத் தலைவன் உலகின் முடிக்கோ ர் சூளாமணி ஆயினான் என்பதால்
- சூளாமணி என்று பெயர் பெற்றது. (பலமுறை வருதல்)
- முதல் நூல் வட மொழியில் உள்ள ஆருகத மாபுராணம்
- இதன் கதை ஸ்ரீ புராணத்திலும் உள்ளது.
- சுரமை நாட்டு மன்னன் பயாபதி



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- பயாபதியின் மக்கள் மூவர்.
  1. திவிட்ட நம்பி (கண்ணன் அவதாரம்)
  2. விசய நம்பி (பலராமன் அவதாரம்)
  3. மகள் சோதிமாலை

## பெருங்காதை

- ஆசிரியர் கொங்குவேள்
- உதயணன் வரலாற்றை முதலில் தமிழில் கூறிய நூல்
- சமணக் காப்பியம்
- இதற்குக் 'கொங்குவேள் மாக்கதை" என்ற பெயரும் உண்டு
- நூல் முழுவதும் கிடைக்கவில்லை
  கிடைத்தவை 5 காண்டங்கள், 99 காதைகள் ஆசிரியப்பாவில் ஆனது
- முதற் பகுதியும் இறுதிப் பகுதியும் கிடைக்கவில்லை . ( பதிற்றுப்பத்துப் போல)
- முழுக் கதையையும் அறிய உதயணகுமார காவியம் உதவி செய்கிறது
- கதைக் களஞ்சியம் என்று போற்றப்படும் நூல் பெருங்கதைபிருகத்கதா என்ற பைசாச மொழிநூலை ஒட்டி இயற்றப்பட்டது என்றும் கூறுவர்

## விவேக சிந்தாமணி

**நூல் குறிப்பு** : விவேக சிந்தாமணி என்னும் இந்நூல் புலவர் பலரால் இயற்றப்பட்ட பாக்களின் தொகுப்பு இந்நூலைத் தொகுத்தவர் யாரெனத் தெரியவில்லை.

## வாழ்த்து - தாயுமானவர்

**ஆசிரியர் குறிப்பு:**

- பெயர் - தாயுமானவர்
- பெற்றோர் - கேடிலியப்பர் - கெசவல்லி அம்மையார்
- ஊர் - நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள திருமறைக்காடு (வேதாரண்யம்)
- மனைவி - மட்டுவார் குழலி
- நூல் - தாயுமானவர் திருப்பாடல் திரட்டு
- பணி - திருச்சியை ஆண்ட விசய ரகுநாத சொக்கலிங்கரிடம் கருவூல அலுவலர்
- காலம் - கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டு



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**நூல் குறிப்பு:**

- வாழ்த்தாக இடம் பெற்றுள்ள பாடல், தாயுமானவர் திருப்பாடல் திரட்டு என்னும் நூலில் பராபரக் கண்ணி என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ளது.
- இந்நூல் தெய்வத் தமிழின் இனிமையும் ; எளிமையும் பொருந்திய செய்யுள் நடையால் மனத்தூய்மை , பக்திச்சுவை ஆகியவற்றை ஊட்டும்.
- திருச்சிராப்பள்ளி மலைமீது எழுந்தருளியு ள்ள இறைவன் தாயுமானவர் திருவருளால் பிறந்தமையால் இவருக்கு தாயுமானவர் என்று பெயர் சூட்டப்பட்டது.
- தாயுமானவர் நினைவு இல்லம் இராமநாதபுரம் மாவட்டத்து இலட்சுமிபுரத்தில் உள்ளது.

www.Padasalai.Net



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)**

**பாடம் : தமிழ்**

**பகுதி : பெரிய புராணம், சீறாப்புராணம்,நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், தேம்பாவணி**

**©காப்புரிமை :**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)** க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

# பெரிய புராணம்

## ஆசிரியர் குறிப்பு:

- பெரிய புராணத்தை அருளியவர் சேக்கிழார்
- இவர் தற்போதைய காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள குன்றத்தூரில் பிறந்தவர்.
- இவரது இயற்பெயர் அருண்மொழித்தேவர்
- இவர் அநாபாயச் சோழனிடம் தலைமை அமைச்சராய் திகழ்ந்தவர்.
- இவர் உத்தம சோழப் பல்லவர் என்னும் பட்டம் பெற்றவர்.
- இவரைத் தெய்வ சேக்கிழார் என்றும் போற்றுவர்.
- இவரது காலம் கி.பி.பன்னிரண்டாம் நூற்றாண்டு
- சொற்கோவில் எழுப்பிய இவருக்கு கற்கோவிலும் எழுப்பினர்.

## நூற்குறிப்பு:

- தனியடியார் அறுபத்துமூவரும், தொகையடியார் ஒன்பதின்மரும் ஆக எழுபத்திருவர் சிவனடியார் ஆவார்.
- அவ்வடியார்கள் வரலாற்றை கூறுவதால், பெருமை பெற்ற புராணம் என்னும் பொருளில் பெரிய புராணம் எனும் பெயர் பெற்றது.
- இந்நூலுக்கு சேக்கிழார் இட்டப்பெயர் திருத் தொண்டர் புராணம் தில்லை நடராசப் பெருமான் உலகெலாம் என்று அடியெடுத்துக் கொடுக்க பாடப்பட்டதெனவும் கூறுவர்.
- இவரது பாடல்கள் அனைத்தும் தெய்வமனம் கமழும் தன்மையுடையவன.
- எனவே தான் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார்,பக்திச்சுவைநனி சொட்டச்
- சொட்டப் பாடிய கவி வலவ எனச் சேக்கிழார் பெருமானைப் புகழ்ந்துரைத்துள்ளார்.
- உலகம், உயிர், கடவுள் ஆகிய மூன்றையும் ஒருங்கே காட்டும் காவியந்தான் பெரியபுராணம் என்பார் திரு.வி.கலியாண சுந்தரனார்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**இறைவனிடம் தருமி வேண்டல்:**

ஐய யாவையும் அறிதி யேகொலாம்
வையை நாடவன் மனக்க ருத்துணர்ந்(து)
உய்ய வோர்கவி யுரைத்தெ னக்கருள்
செய்ய வேண்டுமென் றிரந்து செப்பினான்.

**திருநாவுக்கரசர் அமுதுண்ண இசைதல்:**

ஆசனத்தில் பூசனைகள் அமர்வித்து விருப்பினுடன்
வாசம்நிறை திருநீற்றுக் காப்பேந்தி மனந்தழைப்பத்
தேசமுய்ய வந்தவரைத் திருவமுது செய்விக்கும்
தேசமுற விண்ணப்பம் செயஅவரும் அதுநேர்ந்தார்.

www.Padasalai.Net



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

# சீறாப்புராணம்

## ஆசிரியர் குறிப்பு:

- சீறாப்புராணத்தை இயற்றியவர் உமறுப்புலவர்
- இவர் எட்டயபுரம் கடிகை முத்துப் புலவரின் மாணவர்
- அப்துல்காதிர் மரைக்காயர் என்ற வள்ளல் சீதக்காதியின் வேண்டுகோளின் வண்ணமே உமறுப்புலவர் சீறாப்புராணம் எழுதத் தொடங்கினார்.
- நூல் முற்றும் முன்னமே சீதக்காதி மறைந்தார்.
- அவருக்குப் பின் அபுல்காசின் என்ற வள்ளல் உதவியால் சீறாப்புராணம் நிறைவுற்றது.
- உமறுப்புலவர் வள்ளல் பெருமக்களை நூலின் பலவிடங்களில் நினைவு கூர்ந்து போற்றுகிறார்.
- இவர் என்பது பாக்களால் ஆகிய முதுமொழி மாலை என்னும் நூலையும் படைத்தளித்துள்ளார்.
- இவர் காலம் பதினேழாம் நூற்றாண்டு.

## நூற் குறிப்பு:

- இறைவனின் திருத்தூதர் நபிகள் நாயகத்தின் சீரிய வரலாற்றினை எடுத்தியம்பும்
- இனிய நூல் சீறாப்புராணம்.
- சீறா - வாழ்க்கை புராணம் - வரலாறு என பொருள்படும்.
- இந்நூல் விலாதத்துக் காண்டம், நுபுவ்வத்துக் காண்டம், ஹிஜ்ரத்துக் காண்டம், என்னும் முப்பெரும் பிரிவுகளை கொண்டது.
- ஐயாயிரத்து இருபத்தேழு விருத்தப்பாக்களால் ஆனது.
- பாடப்பகுதி விலாதத்துக் காண்டத்தில் உள்ளது.

### *புலி வசனித்த படலம்:*

ஒருவன் முகம்மதுநபியை வணங்கிக் கூறிய செய்தி
படர்ந்த தெண்டிரைப் பெருக்கெடுத் தெறிநதிப் பரப்பைக்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

கடந்து கான்பல கடந்தரு நெறிசெலுங் காலை
கொடுத்த மக்கரித் திரளெனும் குழுவினுள் ஒருவன்
அடைந்து சீரகு மதினடி தொழுதறை குவனால்.

**புலியின் தோற்றம்:**

நீண்ட வால்நிலம் புடைத்திடக் கிடந்துடல் நிமிர்ந்து
கூண்ட கால்மடிந் திருவிழழ கனல்கள் கொப்பளிப்பப்
பூண்ட வெள்ளெயி றிலங்கிட வாய்புலால் கமழ
வீண்டு முட்செறி வனத்திடை சினத்தொடும் இருக்கும்

**புலியின் வெறிச்செயல்:**

நிரம்பும் வள்ளுகிர் மடங்கலின் இனங்களில் நிணமுண்
டிரும்ப னைக்கைமும் மதகரிக் கோட்டினை யீழ்த்திட்
டுரம்பி எந்துதி ரங்களை மாந்திநின் றுறங்கா
தரும்பெ ருங்கிரி பிதிர்ந்திட வுருமினும் அலறும்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

## நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்

### ஆசிரியர் குறிப்பு:

- கேரளா மாநிலத்திலுள்ள திருவஞ்சைக்களத்தில் பிறந்தவர் குலசேகரப் பெருமாள்
- இராமபிரானிடம் பக்தி மிகுதியாக வாய்க்கப் பெற்ற காரணத்தால் இவர்
- குலசேகரப் பெருமாள் என்றும் அழைக்கப்பட்டார்.
- இவர் பன்னிரு ஆழ்வார்களில் ஒருவர்.
- இவர் அருளிய திருவாய்மொழி நாலாயிரத்திவ்விய பிரபந்தத்தில் ஒன்று.
- இதில் நூற்றைந்து பாசுரங்கள் உள்ளன.
- இவர் வடமொழி, தென்மொழி இரண்டிலும் வல்லவர்.
- குலசேகரர் திருவரங்கத்தின் மூன்றாவது மதிலைக் கட்டியதால் அதற்கு குலசேகரன்
- வீதி என்னும் பெயர் இன்றும் வழங்கி வருகிறது.
- இவரது காலம் கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டு.

### நூற் குறிப்பு:

- தமிழகத்தின் பழம்பெரும் சமயங்களுள் ஒன்று வைணவம்
- வைணவம் திருமாலை முழுமுதற் கடவுளாய்க் கொண்டு போற்றும்.
- பன்னிரு ஆழ்வார்கள் பாடியருளிய தேனினும் இனிய தீந்தமிழ்ப் பனுவல் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்.
- "மீன்நோக்கும் நீள்வயல்சூழ் வித்துவக்கோட் டம்மாஎன்
  பானோக்கா யாகிலுமுன் பற்றல்லால் பற்றில்லேன்
  தானோக்கா தெத்துயரம் செய்திடினும் தார்வேந்தன்
  கோனோக்கி வாழுங் குடிபோன் றிருந்தேனே".



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

# தேம்பாவணி

## ஆசிரியர் குறிப்பு:

- பெயர் - வீரமாமுனிவர்
- இயற்பெயர் - கான்ஸ்டாண்டின் ஜோசப் பெஸ்கி
- பெற்றோர் - கொண்டல் போபெஸ்கி - எலிசபெத்
- பிறந்த ஊர் - இத்தாலி நாட்டில் காஸ்திக்கிளியோன்
- அறிந்த மொழிகள் - இத்தாலியம் இலத்தீன், கிரேக்கம், எபிரேயம், தமிழ், தெலுங்கு, சமற்கிருதம்.
- தமிழ்க் கற்பித்தவர் - மதுரைச் சுப்பிரதீபக் கவிராயர்
- சிறப்பு - முப்பதாம் வயதில் தமிழகம் வந்து தமிழ் பயின்று காப்பியம் படைத்தமை
- இயற்றிய நூல்கள்
  1. ஞானோபதேசம்
  2. பராமார்த்த குருகதை
  3. சதுரகராதி
  4. திருக்காவலூர்க் கலம்பகம்
  5. தொன்னூல் விளக்கம்
- காலம் - 1680 - 1747

## நூல் குறிப்பு:

- அணி + பா +தேம்பாவணி - தேம்பா + அணி - வாடாதமாலை என்றும்
- தேம்பாவணி - தேன் போன்ற இனிய பாடல்களாலான மாலை என்றும் கூறுவர்
- இந்நூல் கிறித்தவச் சமயத்தாரின் கலைக் களஞ்சியம் என அழைக்கப்படுகிறது.
- இந்நூலில் மூன்று காண்டங்களும் முப்பத்தாறு படலங்களும் உள்ளன. பாடல்களின் எண்ணிக்கை மூவாயிரத்து அறுநூற்றுப் பதினைந்து.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

## வில்லிபாரதம் - வில்லிபுத்தூரார்

### ஆசிரியர் குறிப்பு:

- பெயர் - வில்லிப்புத்தூரார்
- தந்தையார் - வீரராகவர்
- ஆதரித்தவர் - வக்கபாகையை ஆண்ட வரபதி ஆட்கொண்டான்.
- காலம் - பதினான்காம் நூற்றாண்டு

### நூல் குறிப்பு:

- வில்லிபாரதம் பத்து பருவம் கொண்டது.
- நாலாயிரத்து முந்நூற்றைம்பது விருத்தப் பாடலால் ஆனது.

www.Padasalai.Net



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

# திருவிளையாடற் புராணம்

## ஆசிரியர் குறிப்பு:

- பரஞ்சோதி முனிவர் நாகை மாவட்டத்திலுள்ள திருமறைக்காடு (வேதாரண்யம்) என்னும் ஊரில் பிறந்தவர்.
- தமிழிலும் வடமொழியிலும் புலமை பெற்றவர்
- இவரின் தந்தையார் மீனாட்சி சுந்தர தேசிகர் ஆவார்.
- பரஞ்சோதி முனிவர் துறவியாகிச் சிவாலயங்கள் தோறும் சென்று இறைவனை வழிபட்டு வந்தார்.
- மதுரை நகரினை அடைந்து மீனாட்சி அம்மனையும் சோமசுந்தரக் கடவுளையும் வணங்கியவர், அந்நகரிலேயே சிலகாலம் தங்கியிருந்தார்.
- அந்நகரத்தார் அவரைக் கேட்டுக் கொண்டதற்கு இணங்க திருவிளையாடற் புராணத்தை இயற்றினார்.
- அந்நூலைச் சிவபெருமான் திருக்கோவிலின் எதிரே உள்ள அறுகால் பீடத்தில் இருந்து வடமொழி தென்மொழிப் புலவர் யாவரும் போற்ற அரங்கேற்றினார்.

  திருவிளையாடற் போற்றிக் கலிவெண்பா, மதுரைப்பதிற்றுப்பத்தந்தாதி ஆகிய நூல்களையும், வேதாரண்ய புராணம் (திருமறைக்காட்டுப் புராணம்) என்னும் மொழிபெயர்ப்பு நூலையும் இயற்றியுள்ளார்.

## நூல் குறிப்பு:

- திருவிளையாடற் புராணம் கந்தபுராணத்தின் ஒரு பகுதியான ஆலாசிய மான்மியத்தை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டது.
- இந்நூல் மதுரைக்காண்டம் (பதினெட்டுப் படலம்) கூடற்காண்டம் (முப்பது படலம்) திருவாலவாய் காண்டம் (பதினாறு படலம்) என்னும் முப்பெரும் பகுதிகளையும் படலம் என்னும் அறுபத்து நான்கு உட்பிரிவுகளையும் உடையது.
- இதில் மூவாயிரத்து முந்நூற்று அறுபத்து மூன்று விருத்தப்பாக்கள் உள்ளன.
- மதுரையில் இறைவன் நிகழ்த்திய அறுபத்து நான்கு திருவிளையாடல்களை இப்படலங்கள் விளக்குகின்றன.
- இந்நூல் இறைவனின் திருவிளையாடல்களை விளக்கி எழுந்த நூல்களுள் வரிவானதும் சிறப்பானதும் ஆகும்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- தொடைநயமும் பக்திச்சுவையும் மிக்க இந்நூலுக்குப் பண்டிதமணி ந.மு. வேங்கடசாமி உரையெழுதியுள்ளார்.
- இறைவனின் திருவிளையாடல்கள் பற்றிய பிற நூல்கள்:
  1. செல்லிநகர்ப் பெரும்பற்றப் புலியூர் நம்பியின் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் (வேம்பத்தூர் திருவிளையாடற் புராணம்)
  2. தொண்டை நாட்டு இளம்பூர் வீமநாதப் பண்டிதரின் கடம்பவன புராணம்
  3. தொண்டைநாட்டு வாயற்பதி அன தாரியப்பனின் சுந்தரபாண்டியன்.

## திருவிளையாடற் புராணம்:

- புராணம் என்றால் வரலாறு என்று பொருள்
- சிவபெருமானின் திருவிளையாடல்களைப் பற்றிக் கூறும் நூல்
- இறைவனின் திருவிளையாடல்களைப் பற்றி முதன் முதலில் கூறிய கல்லாடம் சுந்தரபாண்டியம்
- கல்லாடத்தின் ஆசிரியர் கல்லாடர் 11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்
- 'கல்லாடம் கற்றவனோடு மல்லாடாதே' என்பது பழமொழி
- முதன் முதலில் (13 நூற்றாண்டு) திருவிளையாடற் புராணம் பாடியவர் பெரும்பற்றப் புலியூர் நம்பி
- இவர் பாடிய திருவிளையாடற் புராணம் திருவாலாவாய் உடையார்
- திருவிளையாடற் புராணம் என்று அழைக்கப்படுகிறது.
- அடுத்துத் திரு விளையாடற் புராணம் எழுதியவர் பரஞ்சோதி முனிவர்
- இவர் ஊர் திருமறைக்காடு
- காலம் 16 ஆம் நூற்றாண்டு
- பரஞ்சோதியின் திருவிளையாடற்புராணமே புகழ்பெற்றது.
- பரஞ்சோதி திருவிளையாடல் என்றே அழைக்கப்படுகிறது.
- இது சொக்கர் சோமசுந்தரப் பெருமானின் திருவிளையாடலைக் கூறுகிறது.
- பரஞ்சோதியின் திருவிளையாடற் புராணம் மூன்று காண்டம் (மதுரை, கூடல், திருவாலவாய்) 68 படலம், 3363 பாடல்களைக் கொண்டது.
- இப்புராணங்கள் ஆலாஸ்ய மகாத்மியம் என்ற வடமொழி நூலின் தழுவல்கள் ஆகும்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**இறைவனிடம் தருமி வேண்டல்:**

ஐய யாவையும் அறிதி யேகொலாம்
வையை நாடவன் மனக்க ருத்துணர்ந்(து)
உய்ய வோர்கவி யுரைத்தெ னக்கருள்
செய்ய வேண்டுமென் றிரந்து செப்பினான்.

**இறையனாரும் நக்கீரரும்:**

ஆரவை குறுகி நேர்நின் றங்கிருந் தவரை நோக்கி
யாரைநம் கவிக்குக் குற்றம் இயம்பினார் என்னா முன்னம்
கீரனஞ் சாது நானே கிளத்தினேன் என்றான் நின்ற
சீரணி புலவன் குற்றம் யாதெனத் தேராக் கீரன்.

**நெற்றிக்கண் காட்டினும் குற்றம் குற்றமே:**

கற்றைவார் சடையான் நெற்றிக் கண்ணினைச் சிறிதே காட்டப்
பற்றுவான் இன்னும் அஞ்சான் உம்பரார் பதிபோல் ஆகம்
முற்றுநீர் கண்ணா னாலும் மொழிந்தநும் பாடல் குற்றம்
குற்றமே யென்றான் தன்பால் ஆகிய குற்றம் தேரான்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

# தமிழ்நாடு அரசு

# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)**

**பாடம் : தமிழ்**

**பகுதி : சிற்றிலக்கியங்கள்**

**©காப்புரிமை :**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)** க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

## சிற்றிலக்கியங்கள்

## குறவஞ்சி

### திருக்குற்றாலக் குறவஞ்சி

"வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப்பர்
கவனசித்தர் வந்து வந்து காயசித்தி விளைப்பர்
தேனருவித்திரை எழும்பி வானின்வழி ஒழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்
கூனல் இளம்பிறைமுடித்த வேணியலங்காரர்
குற்றாலத் திரிகூடமலை எங்கள் மலையே!"

ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்
ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்
வாடக் காண்பது மின்னார் மருங்கு
வருந்தக் காண்பது சூலுளை சங்கு
போடக் காண்பது பூமியில் வித்து
புலம்பக் காண்பது கிண்கிணிக் கொத்து
தேடக் காண்பது நல்லறம் கீர்த்தி
திருக்குற் றாலர்தென் ஆரிய நாடே

நூல் குறிப்பு :

திருக்குற்றாலக் குறவஞ்சி தமிழ்ச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று. தமிழ்நாட்டின் தென்கோடியில் தென்காசிக்கு அருகில் அமைந்திருக்கும் குற்றாலம் எனும் ஊரின் சிறப்பைப் புகழ்ந்து அங்குள்ள ஈசரான குற்றாலநாதரைப் போற்றி, தெய்வக் காதல் பற்றிய கற்பனையை அமைத்துப் பாடப்பெற்ற நூல் ஆகும்.

குறவஞ்சி நாடகம் என்று போற்றப்படும் இந்நூல் வடகரை அரசனான சின்னணஞ்சாத் தேவரின் அவைப்புலவராக விளங்கிய திரிகூடராசப்பக் கவிராயர் என்பவரால் இயற்றப்பட்டது. இவர் திருநெல்வேலி மாவட்டம் தென்காசிக்கு அருகில் உள்ள மேலகரம் என்னும் ஊரைச் சார்ந்தவர் (இவர் திருவாவடுதுறை ஆதினத் தலைவராக விளங்கிய சுப்பிரமணிய தேசிகரின் சகோதரர் ஆவார்). திருக்குற்றாலநாதாரின் முன்னிலையில் அரங்கேற்றப்பட்ட



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

இந்நூல் அன்றைய மதுரை மன்னனான முத்துவிஜரங்க சொக்கநாத நாயக்கரின் பாராட்டையும் பரிசையும் பெற்றது.

சொற்பொருள்:

வானரங்கள் - ஆண் குரங்குகள்

மந்தி - பெண் குரங்குகள்

வான்கவிகள் - தேவர்கள்

காயசித்தி - இறப்பை நீக்கும் மூலிகை

பரிக்கால் - குதிரை

வேணி - சடை

மின்னார் - பெண்கள்

மருங்கு - இடை

*அம்மானை*

## ஆசிரியர் குறிப்பு

- திருச்செந்திற்கலம்பகம் என்னும் இந்நூலை இயற்றியவர் ஈசான தேசிகர் என்னும் சுவாமிநாத தேசிகர் ஆவார்.
- ஈசான தேசிகர் என்பது அவரது சிறப்புப் பெயராகும்
- தாண்டவமூர்த்தி என்பவர்க்கு மகனாக பிறந்தார்.
- இவர் மயிலேறும் பெருமாள் என்பாரிடம் கல்வி கற்றார்.
- இவர் திருவாடுதுஜற ஞானதேசிகராகிய அம்பலவாண தேசிக மூர்த்திக்கு தொண்டராய் இருந்தார்.
- ஏறத்தாழ நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர்.

## நூல் குறிப்பு

- திருச்செந்திற்கலம்பகம் என்னும் இந்நூல் தொண்ணூற்றாறு சிற்றிலக்கியங்களுள் ஒன்று.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- கலம்பகம் - கலம் + பகம் எனப் பிரியும், கலம் - பன்னிரண்டு, பகம் - ஆறு ஆக பதினெட்டு உறுப்புகளைக் கொண்டது.
- பல்வகையான பா வகைகளும் கலந்திருந்தலால் இந்நூல் கலம்பகம் எனவும் பெயர் பெற்றது.
- பதினெண் உறுப்புகளில் ஒன்றாகிய அம்மானை என்னும் பகுதி ஈண்டு பாடப்பகுதியாக இடம் பெற்றுள்ளது.

### அம்மானை

வீரன்நெடு வெள்வேல் வியன்செந்தில் எம்பெருமான்
பாரில்உயி ரெல்லாம் படைத்தனன்காண் அம்மானை
பாரில்உயி ரெல்லாம் படைத்தனனே யாமாகில்
ஆரணங்கள் நான்கும் அறிவனோ அம்மானை
அறிந்து சிறைஅயனுக் காக்கினன்காண் அம்மானை. - சுவாமிநாத தேசிகர்

### கலிங்கத்துப்பரணி

தீயின் வாயினீர் பெறினு முண்பதோர்
சிந்தை கூரவாய் வெந்து லர்ந்துசெந்
நாயின் வாயினீர் தன்னை நீரெனா
நவ்வி நாவினால் நக்கி விக்குமே. - சயங்கொண்டார்

**சொற்பொருள்:**

- தீயின்வாய் - நெருப்பில்
- சிந்தை - எண்ணம்
- கூர - மிக
- நவ்வி - மான்
- முகில் - மேகம்
- மதி - நிலவு
- உகு - சொரிந்த(பொழிந்த)

**இலக்கணக்குறிப்பு:**

- வெந்து, உலர்ந்து, எனா, கூர - வினையெச்சம்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- செந்நாய் - பண்புத்தொகை
- கருமுகிலும் வெண்மதியும் - எண்ணும்மை
- கருமுகில், வெண்மதி - பண்புத்தொகை
- கடக்க, ஓடி, இளைத்து - வினையெச்சம்

**பிரித்தறிதல்:**

- வாயினீர் = வாயின் + நீர்
- வெந்துலர்ந்து = வெந்து + உலர்ந்து
- காடிதனை = காடு + இதனை
- கருமுகில் = கருமை + முகில்
- வெண்மதி = வெண்மை + மதி

**ஆசிரியர் குறிப்பு:**

- கலிங்கத்துப்பரணியை இயற்றியவர் செயங்கொண்டார்.
- இவர் திருவாரூர் மாவட்டம் தீபங்குடியில் பிறந்தவர்.
- இவர் முதல் குலோத்துங்கசோழனின் அரசவைப் புலவர்.
- "பரணிக்கோர் சயங்கொண்டார்" எனப் பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் பாராட்டியுள்ளார்.
- இசையாயிரம், உலா, மடல் ஆகிய நூல்களையும் இயற்றி உள்ளார்.
- இவரது காலம் கி.பி.பனிரெண்டாம் நூற்றாண்டு.

**நூல் குறிப்பு:**

- ஆயிரக்கணக்கான யானைகளைப் போரில் கொன்ற வீரனைப் புகழ்ந்து பாடும் இலக்கியத்திற்கு பரணி என்று பெயர்.
- இது 96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று.
- தமிழி தோன்றிய முதல் பரணி = கலிங்கத்துப்பரணி
- கலிங்க மன்னன் ஆனந்தபத்மன் மீது முதல் குலோத்துங்கச் சோழன் போர்தொடுத்து வெற்றி பெற்றான். அவ்வெற்றியை பாராட்டி எழுதப்பட்ட நூல் இது.
- இந்நூலில் 599 தாழிசைகள் உள்ளன.
- ஒட்டக்கூத்தர் இந்நூலைத் "தென்தமிழ்த் தெய்வப்பரணி" எனப் புகழ்ந்துள்ளார்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

ஆயிரம் யானை அமரிடை வென்ற
மாணவ னுக்கு வகுப்பது பரணி
- பன்னிரு பாட்டியல்

- பேரறிஞர் அண்ணா, "எனக்கு மிக விருப்பமான இலக்கியம் ஒன்று உண்டென்றால் அது கலிங்கத்துப்பரணியே" என்றார்.

**பரணி நூல்கள்:**

| | |
|---|---|
| கலிங்கத்துப்பரணி | செயங்கொண்டார் |
| தக்கயாகப் பரணி | ஒட்டக்கூத்தர் |
| அஞ்ஞுவதைப் பரணி | தத்துவராயர் |
| பாசவதைப் பரணி | வைத்திய நாத தேசிகர் |

## முத்தொள்ளாயிரம்

**சேரன்**

**பல்யானை மன்னீர் படுதிறை தந்துய்ம்மின்**

**மல்லல் நெடுமதில் வாங்குவில் பூட்டுமின்**

**வள்ளிதழ் வாடாத வானோரும் வானவன்**

**வில்லெழுதி வாழ்வார் விசும்பு.**

**பொருள்:**

பல யானைகளை கொண்டுள்ள அரசர்களே ! உங்களுக்கு கிடைக்கும் பொருளை சேர மன்னனுக்கு திறையாக அளித்து பிழைத்து கொள்ளுங்கள் . உங்களின் வளமிக்க நெடிய மதில்கள் மீது வில் சின்னத்தை பொறித்து வையுங்கள். ஏனெனில், வாடாத மாலையணிந்த வானவர்களும் சேரனின் வில் வடிவத்தை எழுதி வைத்தே வானுலகில் வாழ்கின்றார்கள்.

அணி: தற்குறிப்பேற்ற அணி



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**சோழன்**

**சேர்ந்த புறவின் நிறைதன் திருமேனி**

**ஈர்த்திட் துயர்துலைதான் ஏறினான் - நேர்ந்த**

**கொடைவீர மோமெய்ந் நிறைகுறையா வன்கட்**

**படைவீர மோசென்னி பண்பு.**

**பொருள்:**

சோழ மன்னன், தன்னிடம் அடைக்கலமான புறாவினை காக்க, தன் தசையை அறுத்துக் கொடுத்தான் . அத்தசை ஈடாகாத காரணத்தால் ,தானே துலாக்கோலில் ஏறினான். இப்படி செய்ய துணிந்தமைக்கு அவனது கோடை நேரமோ மெய்யோழுக்கம் குறையாத படைவீரமோ காரணம் அன்று ; அது சோழனின் நற்பண்பு.

**பாண்டியன்**

**மருப்பூசி யாக மரங்கனல்வேல் மன்னர்**

**உருத்தகு மார்ப்போலை யாகத் - திருத்தக்க**

**வையக மெல்லா மெமதென் றெழுதுமே**

**மொய்யிலைவேல் மாறன் களிறு.**

**பொருள்:**

நெருங்கி அமைந்த இலை போன்ற வடிவிலான வேலை உடையவன் பாண்டிய மன்னன். மன்னனின் யானை, தன் தந்தங்களை எழுத்தாணியாகவும் வீரம் செறிந்த வேற்படையுடைய பகை மன்னரின் அகன்ற மார்புகளை ஓலையாகவும் கொண்டு 'செல்வம் நிலைத்த உலகமெல்லாம் எம் பாண்டியருக்குரியது' என எழுதும்.

அணி: உருவக அணி



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**சொற்பொருள்:**

- உய்ம்மின் - பிழைத்துக் கொள்ளுங்கள்
- மலை - வளமை
- வள் - நெருக்கம்
- விசும்பு - வானம்
- புரவு - புறா
- நிறை - எடை
- ஈர்த்து - அறுத்து
- துலை - துலாக்கோல்(தராசு)
- நிறை - ஒழுக்கம்
- மேனி - உடல்
- மறுப்பு - தந்தம்
- ஊசி - எழுத்தாணி
- மறம் - வீரம்
- கனல் - நெருப்பு
- மாறன் - பாண்டியன்
- களிறு - யானை

**இலக்கணக்குறிப்பு:**

- மாமலை -உரிச்சொற்றொடர்
- நெடுமதில் - பண்புத்தொகை
- வாங்குவில் - வினைத்தொகை
- உயர்துலை - வினைத்தொகை
- குறையா - ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்
- இலைவேல் - உவமைத்தொகை
- மருப்பூசி, மார்போலை - உருவகம்
- மாறன்களிறு - ஆறாம் வேற்றுமைத் தொகை

**பிரித்தறிதல்:**

- தந்துய்ம்மின் = தந்து +உய்ம்மின்
- வில்லெழுதி = வில் + எழுதி



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- பூட்டுமின் = பூட்டு + மின்
- மருப்பூசி = மறுப்பு + ஊசி
- எமதென்று = எமது + என்று
- மொய்யிலை = மொய் + இலை

**நூல் குறிப்பு:**

- முத்தொள்ளாயிரம் மூவேந்தர்களைப் பற்றிய 900 பாடல்களைக் கொண்டது.
- ஆயினும் இந்நூல் முழுமையாக கிடைக்கவில்லை.
- "புறத்திரட்டு" என்னும் நூல் வழியாக 108 வெண்பாக்களும், பழைய உரை நூல்களில் மேற்கோளாக 22 வெண்பாக்களும் கிடைத்துள்ளன.
- மூவேந்தர்களின் ஆட்சிச்சிறப்பு, படைச்சிறப்பு, போர்த்திறன், கொடை முதலிய செய்திகளை இப்பாடல்கள் விளக்குகின்றன.
- இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை.
- சேரர் பற்றி 23 பாடல்களும், சோழர் பற்றி 46 பாடல்களும், பாண்டியர் பற்றி 61 பாடல்கள் என மொத்தம் 130 பாடல்கள் கிடைத்துள்ளன.
- இதில் அகப்பாடல்கள் 75, புறப்பாடல்கள் 55 உள்ளன

**தூது**

- தன் கருத்தைப் பிறிதொருவருக்கு தெரிவிக்குமாறு இடையில் ஒருவரைத் தன் சார்பாக அனுப்புவதே தூது.
- தூது இரு வகைப்படும் = அகத்தூது, புறத்தூது
- "காமம் மிக்க கழிபடர் கிளவி" என்ற தொல்காப்பிய அடியின் அடிப்படையில் தோன்றிய இலக்கியம் தூது
- "தொடை(மாலை) வாங்கி வா" என்று கூறும் இலக்கியம் தூது
- தூது கலிவெண்பாவால் பாடப்படுவது
- முதல் தூது நூல் = நெஞ்சு விடு தூது(உமாபதி சிவம்)
- தூதின் இலக்கணம் கூறும் நூல் = இலக்கண விளக்கப் பாட்டியல்
- தூதாக அனுப்பப்படுபவை = அன்னம், மயில், கிளி, குயில், வண்டு, நெஞ்சம், முகில், தென்றல், மான், தமிழ்
- இப்பத்தும் தூதாக அனுப்பி பாடியவர் = மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை(தச விடு தூது



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

*தமிழ்விடு தூது*

1. கலிவெண்பாவில் உயர்திணைப் பொருளையோ அஃறிணைப் பொருளையோ தூது அனுப்புவதாகப் பாடுவது தூது இலக்கியம்.

2. மதுரையில் கோவில் கொண்டிருக்கும் சொக்க நாதர் மேல் காதல் கொண்ட பெண்ணொருத்தி, தன் காதலைக் கூறி வருமாறு தமிழ்மொழியைத் தூது விடுவதாகப் பொருளமைந்தது தமிழ்விடு தூது.

3. இதனை இயற்றியவர் பெயர் அறிய இயலவில்லை.

4. தமிழ்விடு தூது எனும் பெயரால் இரு நூல்கள் உள்ளன (18-ம் நூற்றாண்டு). பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் அமிர்தம் பிள்ளை எழுதியதொன்று முன்னைய நூலினை எழுதியவர் பெயர் தெரிந்திலது.

5. முந்தைய தமிழ்விடு தூது நூலில் தமிழின் பெருமை, இலக்கிய வரலாறு போல நிரல்பட விரித்துரைக்கப்படுகிறது என்பார் தமிழண்ணல்.

6. இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன். என்ற சொற்கள் ஒவ்வொரு தமிழனின் நெஞ்சத்து எதிரொலியாக ஒலிக்கக் காணலாம்.

## தமிழ்விடு தூது

அரியா சனமுனக்கே யானால் உனக்குச்
சரியாரும் உண்டோ தமிழே - விரிவார்

திகழ்பா ஒருநான்குஞ் செய்யுள்வரம் பாகப்
புகழ்பா வினங்கள்மமடைப் போக்கா - நிகழவே

நல்லேரி னால்செய்யுள் நாற்கரணத் தேர்பூட்டிச்
சொல்லேர் உழவர் தொகுத்தீண்டி - நல்லநெறி

**அழகர் கிள்ளைவிடு தூது**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

1. திருமாலிருஞ்சோலை அழகர் மலையில் அமைந்துள்ள இறைவன் அழகரிடம் பலபட்டடைச் சொக்கநாத புலவர் கிளியைத் தூதுவிடுவதாக அமைத்து பாடியிருப்பது அழகர் கிள்ளைவிடுதூது.

2. அழகர் கிள்ளைவிடுதூது காப்பு வெண்பா ஒன்றையும் 239 கண்ணிகளையும் உடையது.

3. அழகர் கிள்ளைவிடு தூதுவை இயற்றியவர் : பலபட்டடைச் சொக்கநாத புலவர்

4. இவரின் பிற நூல்கள்: மும்மணிக்கோவை, யமகவந்தாதி, தென்றல் விடு தூது

- 18 ஆம் நூற்றாண்டினர்; மதுரையைச் சேர்ந்தவர்.
- சைவரான சொக்கநாதப்பிள்ளை வைணவக் கடவுள் மீது பாடிய நூல்
- கிளியின் பெருமை - அழகரின் பெருமை - அழகர் உலா வருதல் - தசாங்கம் - ஊர்த்திருவிழா - தலைவிநிலை - கிளியை வேண்டுதல் - கோயில் பணியாளர் - தூது உரைக்கும் முறை - தூதுச் செய்தி - மாலை வாங்கிவா என இதன் பொருள் அமைப்பு உள்ளது.

"வேளாண்மை எனும் விளைவிற்கு நின் வார்த்தை
கேளாதவர்காண் கிள்ளையே".
"மாலினைப்போல மகிதலத்தோர்வாட்டமற
பால் அ(ன்)னத்தாலே பசி தீர்ப்பாய்"

www.Padasalai.Net

<u>தூது கூடுதல் குறிப்புகள்</u>

1. அன்னம், மயில், கிளி, மேகம், பூவை, தோழி, குயில், நெஞ்சு, தென்றல், வண்டு ஆகிய பத்து மட்டுமே தூது விடுதற்குரியவை என்று ரத்தினச்சுறுக்கம் என்னும் நூல் கூறுகிறது.

2. பின்பு பணம், தமிழ், புகையிலை, காக்கை என தூதுவிடும் பொருள்கள் பெருகின.

3. இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது வெள்ளைவாரணார் இயற்றிய 'இராசகோபாலாச்சாரியாருக்கு காக்கை விடு தூது' என்ற நூல் குறிப்பிடத்தக்கது.

**சொற்பொருள்:**

- அரியாசனம் – சிங்காதனம்
- பா ஒரு நான்கு – வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா
- வரம்பு – வரப்பு
- ஏர் – அழகு
- நார்கரணம் – மனம், புத்தி, சித்தம், அகங்காரம்.
- நெறிநாலு – வைதருப்பம்(ஆசுகவி),கௌடம்(மதுரகவி),பாஞ்சாலம்(சித்திரகவி),மாகதம்(வித்தாரகவி)
- நாற்பொருள் – அறம், பொருள், இன்பம், வீடு
- சீத்தையர் – கீழானவர், போலிப்புலவர்
- நாளிகேரம் – தென்னை

**இலக்கணக்குறிப்பு:**

- செவியறுத்து – இரண்டாம் வேற்றுமைத்தொகை

**பிரித்தறிதல்:**

- நாற்கரணம் = நான்கு + கரணம்
- காரணத்தேர் = கரணத்து + ஏர்
- நாற்பொருள் = நான்கு + பொருள்
- இளங்கனி = இளமை + கனி
- விண்ணப்பமுண்டு = விண்ணப்பம் + உண்டு

## அந்தாதி

- அந்தாதி 96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று.
- அந்தம் = இறுதி, ஆதி = முதல்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- ஒவ்வொரு பாடலிலும் உள்ள இறுதி எழுத்தோ, அசையா, சீரோ அடியோ அதற்கு அடுத்து வரும் பாடலின் முதலாக வரும்படி அமைத்துப் பாடுவது அந்தாதி எனப்படும்.
- இதனை "சொற்றொடர்நிலை" எனவும் கூறுவர்.
- முதல் அந்தாதி நூல் = காரைக்கால் அம்மையாரின் "அற்புதத் திருவந்தாதி'

**அந்தாதி வகைகள்:**

- பதிற்றுப் பத்தந்தாதி
- யமாக அந்தாதி
- திரிபந்தாதி
- நீரோட்டக யமாக அந்தாதி

**அந்தாதி நூல்கள்:**

| | |
|---|---|
| அற்புதத் திருவந்தாதி(முதல் நூல்) | காரைக்கால் அம்மையார் |
| சரஸ்வதி அந்தாதி, சடகோபர் அந்தாதி | கம்பர் |
| திருவேங்கடத்தந்தாதி | பிள்ளை பெருமாள் ஐயங்கார் |
| திருக்கருவை பதிற்றுப்பத்தந்தாதி(குட்டித் திருவாசகம் எனப்படும்) | அதிவீரராம பாண்டியன் |
| வீரை அந்தாதி, கோமதி அந்தாதி | காவடிசிந்து அண்ணாமலையார் |

**அற்புதத் திருவந்தாதி:**

- இந்நூலின் ஆசிரியர் = காரைக்கால் அம்மையார்
- இவரின் இயற்பெயர் = புனிதவதி
- இறைவனால் "அம்மையே" என அழைக்கப்பட்டவர்
- 63 நாயன்மார்களில் கோவிலில் நின்றிருக்க இவர் மட்டுமே அமர்ந்த நிலையில் இருக்கும் பெருமை பெற்றவர்.
- இவரின் பாடல்கள் மட்டும் "மூத்த திருப்பதிகம்" எனப் போற்றப்படும்
- கட்டளை கலித்துறை, அந்தாதி, மாலை என்னும் சிற்றிலக்கிய வகைகளை தொடங்கி வைத்தவர்.
- ஒரு பொருளை பல பொருளில் பாடும் பதிக மரபை தொடங்கி வைத்தவர்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

## திருவேங்கடத்தந்தாதி

**அந்தாதி:**

- அந்தாதி 96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று.
- அந்தம் = இறுதி, ஆதி = முதல்
- ஒவ்வொரு பாடலிலும் உள்ள இறுதி எழுத்தோ, அசையோ, சீரோ அடியோ அதற்கு அடுத்து வரும் பாடலின் முதலாக வரும்படி அமைத்துப் பாடுவது அந்தாதி எனப்படும்.
- இதனை "சொற்றொடர்நிலை" எனவும் கூறுவர்.

**பிள்ளை பெருமாள் ஐயங்கார்:**

- இவர், "அழகிய மணவாளதாசர், திவ்வியக்கவி" எனவும் அழைக்கப்படுவார்.
- இவர் இயற்றிய எட்டு நூல்களின் தொகுதியை "அஷ்டப்பிரபந்தம்" என்று அழைப்பர்.
- "அஷ்டப்பிரபந்தம் கற்றவன் அரைப் பண்டிதன்" என்னும் பழமொழி இந்நூலின் உயர்வைப் வெளிப்படுத்தும்.
- இவர் 1623 முதல் 1659 வரை மதுரையை ஆண்ட திருமலை நாயக்க மன்னரின் அவையில் ஓர் அலுவலராய் அமர்ந்து வாழ்க்கை நடத்தி வந்தார்.

**சொற்பொருள்:**

- கழல் - திருவடி
- பத்தி - ஊர்
- குஞ்சி - தலைமயிர்
- போதன் - பிரமன்
- வாசவன் - இந்திரன்
- அந்தி - மாலை
- வேலை - கடல்
- இருக்கு ஆரணம் - இருக்கு வேதம்
- கஞ்சம் - தாமரை மலர்
- அணங்கு - திருமகள்



www.Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- பொழில் - சோலை

**இலக்கணக்குறிப்பு:**

- சிற்றன்னை - பண்புத்தொகை
- தாழ்பிறப்பு - வினைத்தொகை
- மால் கழல் - ஆறாம் வேற்றுமைத்தொகை
- கழல் - தானியாகு பெயர்
- அந்தி காளை - உம்மைத்தொகை
- வேங்கடம் - வினைத்தொகை
- மதிவிளக்கு - உருவகம்
- சேவடி - பண்புத்தொகை
- இருக்கு ஆரணம் - இருபெயரொட்டுப் பண்புத்தொகை
- நற்றாய் - பண்புத்தொகை

**கலம்பகம்**

- பல்வகை வண்ணமும், மனமும் கொண்ட மலர்களால் கட்டப்பட்டக் கதம்பம் போன்று பல்வகை உறுப்புகளைக் கொண்டு அகம், புறமாகிய பொருட்கூறுகள் கலந்து வர பல்வகைச் சுவைகள் பொருந்தி வருவதால் 'கலம்பகம்" எனப் பெயர் பெற்றது.
- கலம் + பகம் = கலம்பகம்
- கலம் = 12
- பகம் = 6
- கலம்பகம் 18 உறுப்புகளைக் கொண்டது.
- கலம்பகத்தின் இலக்கணம் கூறும் நூல் = பன்னிரு பாட்டியல்முதல்
  கலம்பக நூல் = நந்திக் கலம்பகம்(ஆசிரியர் பெயர் தெரியவில்லை)
  "கன்பாய கலபகத்திற்கு இரட்டையர்கள்" எனக் கூறப்படும்
  அந்தாதி தொடை அமையப் பாடப்படும் சிற்றிலக்கியம் கலம்பகம்
  அகப்பொருளும் புறப்பொருளும் கலந்து பாடப்படும்
  கதம்பம் என்பது கலம்பகம் என்று திரிந்ததாக கூறுவார் உ.வே.சா

**நந்திக் கலம்பகம்**

**ஆசிரியர் குறிப்பு:**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

தமிழ் கூறும் நல்லுலகத்துக்கு இந்நூலை வழங்கியவரின் பெயரும் ஊரும் அறியப் பெறவில்லை.

## நூற் குறிப்பு:

- மூன்றாம் நந்திவர்மனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பெற்ற கலம்பகம் . ஆதலின் நந்திக் கலம்பகம் எனப் பெயர் பெற்றது.
- இந்நூலின் காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு
- கலம்பகம் என்பது தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று.
- கலம்+பகம் - கலம்பகம். கலம் - பன்னிரண்டு பகம் - ஆறு, பதினெட்டு உறுப்புகளைக் கொண்டதால் கலம்பகம் என்னும் பெயர் வந்தது எனவும் கூறுவர்.

## நந்திமன்னன் வீரம்:

பதிதொறு புயல்பொழி தருமணி பணைதரு
பருமணி பகராநெற்
கதிர்தொகு வருபுனல் கரைபொரு திழிதரு
காவிரி வளநாடா
நிதிதரு கவகையும் நிலமகள் உரிமையும்
இவையிவை யுடைநந்தி
முதியிலி அரசர்நின் மலரடி பணிகிலர்
வானகம் ஆள்வாரே.

*அம்மானை*

## ஆசிரியர் குறிப்பு

- திருச்செந்திற்கலம்பகம் என்னும் இந்நூலை இயற்றியவர் ஈசான தேசிகர் என்னும் சுவாமிநாத தேசிகர் ஆவார்.
- ஈசான தேசிகர் என்பது அவரது சிறப்புப் பெயராகும்
- தாண்டவமூர்த்தி என்பவர்க்கு மகனாக பிறந்தார்.
- இவர் மயிலேறும் பெருமாள் என்பாரிடம் கல்வி கற்றார்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- இவர் திருவாடுதுஜற ஞானதேசிகராகிய அம்பலவாண தேசிக மூர்த்திக்கு தொண்டராய் இருந்தார்.
- ஏறத்தாழ நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர்.

## நூல் குறிப்பு

- திருச்செந்திற்கலம்பகம் என்னும் இந்நூல் தொண்ணூற்றாறு சிற்றிலக்கியங்களுள் ஒன்று.
- கலம்பகம் - கலம் + பகம் எனப் பிரியும், கலம் - பன்னிரண்டு, பகம் - ஆறு ஆக பதினெட்டு உறுப்புகளைக் கொண்டது.
- பல்வகையான பா வகைகளும் கலந்திருந்தலால் இந்நூல் கலம்பகம் எனவும் பெயர் பெற்றது.
- பதினெண் உறுப்புகளில் ஒன்றாகிய அம்மானை என்னும் பகுதி ஈண்டு பாடப்பகுதியாக இடம் பெற்றுள்ளது.

## அம்மானை

வீரன்நெடு வெள்வேல் வியன்செந்தில் எம்பெருமான்
பாரில்உயி ரெல்லாம் படைத்தனன்காண் அம்மானை
பாரில்உயி ரெல்லாம் படைத்தனனே யாமாகில்
ஆரணங்கள் நான்கும் அறிவனோ அம்மானை
அறிந்து சிறைஅயனுக் காக்கினன்காண் அம்மானை. - சுவாமிநாத தேசிகர்

## உலா

- உலா என்பது சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று.
- உலா என்பதற்கு "பவனி வருதல்" என்பது பொருள்.
- தலைவன் வீதியில் உலா வர அவனைப் பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்னும் ஏழு வகைப் பருவ மகளிரும் காதல் கொள்வதாக அமைத்து பாடுவது உலா ஆகும்.
- இது கலிவெண்பாவால் இயற்றப்படும்.
- இதில் பாட்டுடைத் தலைவனின் சிறப்பு, நீராடல், ஒப்பனை செய்தல், பரிவாரங்கள் புடைசூழத் தன் ஊர்தியில் ஏறி வரல் ஆகியவற்றை உலாவின் முன்னிலை என்பர்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- உலாவரும் தலைவனைக் கண்டு காதல் கொண்ட ஏழு பருவ மகளிர் தனித்தனியாக கூறுவன உலாவின் பின்னிலை எனப்படும்
- ஏழு பருவப் பெண்களின் வயது = பேதை(5-7), பெதும்பை(8-11), மங்கை(12-13), மடந்தை(14-19), அரிவை(20-25), தெரிவை(26-32), பேரிளம்பெண்(33-40).

**முன்னிலைப் பகுதி:**

- முன்னிலைப் பகுதியில் தலைவனின் சிறப்புக் கூறப்படும்
- ஏழு வகைப் பருவ ஆண்கள் கூறப்படுவர்
- பாலன் = 1-7 வயது
- மீளி = 8-10 வயது
- மறவோன் = 11-14 வயது
- திறலோன் = 15 வயது
- காளை = 16 வயது
- விடலை = 17-30 வயது
- முதுமகன் = 30 வயதிற்கு மேல்

**பின்னிலைப் பகுதி:**

- பின்னிலைப் பகுதியில் ஏழு பருவப் பெண்களின் காமம் கூறப்படும்
- ஏழு வகைப் பருவ மகளிர்
- பேதை = 5-7 வயது
- பெதும்பை = 8-11 வயது
- மங்கை = 12-13 வயது
- மடந்தை = 14-19 வயது
- அரிவை = 20-25 வயது
- தெரிவை = 26-32 வயது
- பேரிளம் பெண் = 33-40 வயது

**உலாவின் நூல்கள்:**

| | |
|---|---|
| திருக்கைலாய ஞான உலா | சேரமான் பெருமாள் நாயனார் |
| மூவருலா | ஒட்டக்கூத்தர் |
| ஆளுடைய பிள்ளை திரு உலா மாலை | நம்பியாண்டார் நம்பி |



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| | |
|---|---|
| ஏகாம்பரநாதர் உலா | இரட்டையர்கள் |
| திருவாரூர் உலா | அந்தக்கவி வீரராகவர் |
| திருக்கழுகுன்ற உலா | அந்தக்கவி வீரராகவர் |
| திருகுற்றாலனாதர் உலா | திரிகூட ராசப்ப கவிராயர் |
| தில்லை உலா | ஒட்டக்கூத்தர் |
| சிவந்த்தெழுந்த பல்லவராயன் உலா | படிக்காசுப் புலவர் |

**இராசராச சோழன் உலா**

**நூற்செய்திகள்**

- சோழமன்னர்களின் வழிமுறை செய்த போர்கள் , அடைந்த வெற்றி, அளித்த கொடை பற்றிக் கூறுகிறது.
- இராஜராஜன் கருநிறத்தவன் அவன் பட்டத்து அரசி புவனமுழுதுடையாள்.
- இராஜராஜனுக்கு வரராசன் , கண்டன், சனநாதன் என்ற பட்டப் பெயர்களும் விளங்கின.
- அரசன் பெரும்பாலும் பாசறையிலேயே இருந்தால் "அயிற்படை வீரன்" எனச் சிறப்பிக்கப்படுகிறான்.

**ஒட்டக்கூத்தர்:**

- இராசராசசோழன் உலாவை பாடியவர் ஒட்டக்கூத்தர்.
- இவர், "கவிச்சக்ரவர்த்தி, கவிராட்சசன்" என்றெல்லாம் புகழப்படுவார்.
- இவர், விக்ரமசோழன், இரண்டாம் குலோத்துங்கச் சோழன், இரண்டாம் ராசராசன் ஆகிய மூன்று மன்னர்களின் அவையிலும் செல்வாக்கோடு இருந்தவர்.
- இம்மூவரைப் பற்றி ஒட்டக்க்கூத்தர் பாடியதே, "மூவருலா"
- இவரின் இயற் பெயர் = கூத்தர்
- ஓட்டம்(பந்தயம்) வைத்துப் பாடுவதில் வல்லவர் ஆதலால் இவர் ஒட்டக்க்கூத்தர் எனப்பட்டார்.

**சொற்பொருள்:**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

சூளிகை - நிலாமுற்றம்
தெற்றி - திண்ணை
பிணங்கி - நெருங்கி
கோடி - வளைந்து
மகோததி - கடல்
சரதம் - வாய்மை
மூவெழுகால் - 21 தலைமுறை
பெருமாள் - அரசர்
சாளரம் - பலகணி
பாங்கரும் - பக்கத்தில் உள்ள இடங்கள்
மறுகு - தெரு
சதகோடி - நூறுகோடி
உதியர் - சேரர்
பவித்ரம் - தூய்மை
அவனி - நாடு
கூடல் - காவிரிப்பூம்பட்டினம்

**இலக்கணக்குறிப்பு:**

வாயிலும் மாளிகையும் - எண்ணும்மை
மாடமும் ஆடரங்கும் - எண்ணும்மை
ஆடரங்கு - வினைத்தொகை
மயங்கி, வணங்கி - வினையெச்சம்
காணீர் - ஏவல் வினைமுற்று
மதயெறிது - இரண்டாம் வேற்றுமைத்தொகை
ஓங்கியுயர் - ஒருபொருட்பன்மொழி
எம்மருங்கும் - முற்றும்மை
செய்குன்று - வினைத்தொகை
சுற்றிய பாங்கர் - பெயரெச்சம்
செற்ற சிலை - பெயரெச்சம்
விட்டவள் - பெயரெச்சம்
முத்து முரசம் - பண்புத்தொகை
உயரண்டம் - வினைத்தொகை

**விக்கிரமசோழன் உலா:**

- ஒட்டக்கூத்தர் எழுதிய மூவர் உலாவில் ஒன்று.
- முதற்குலோத்துங்கனின் நான்காவது மகன் விக்கிரமசோழன் . இவன் தாய் மதுராந்தகி ஆவார்.
- 12 ஆம் நூற்றாண்டு
- விக்கிரம சோழனின் முன்னோர்களைப் பட்டியலிட்டுக் கூறும் வரலாற்று ஆவணநூல்.
- குடகுமலையை ஊடறுத்துக் காவிரியாற்றைக் கொணர்ந்தவன் கவேரன்.
- மேருமலையின் உச்சியில் புலிக்கொடி நாட்டியவன் கரிகாலன்.
- காவிரியின் கரைகளை உயர்த்தின் கட்டியவன் கரிகாலன்.
- பொய்கையாரின் களவழி நாற்பதிற்காகச் சேரமான் கணைக்கால் இரும்பொறையை
- விடுதலை செய்தவன் செங்கணான்.
- போரில் 96 விழுப்புண்களைப் பெற்றவன் விஜயாலயன்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

### விக்கிரமசோழன் உலா

1. கொள்ளும் குடகக் குவடூ டறுத்திழியத்
தள்ளும் திரைப்பொன்னி தந்தோனும் - தெள்ளருவிச்

சென்னிப் புலியே றிருத்திக் கிரிதிரித்துப்
பொன்னிக் கரைகண்ட பூபதியும் - இன்னருளின்

மேதக்க பொய்கை கவிகொண்டு வில்லவனைப்
பாதத் தளைவிட்ட பார்த்திவனும் - மீதெலாம்

எண்கொண்ட தொண்ணூற்றின் மேலும் இருமூன்றும்
புண்கொண்ட வென்றிப் புரவலனும் - கண்கொண்ட

கோதிலாத் தேறல் குனிக்கும் திருமன்றம்
காதலால் பொன்வேய்ந்த காவலனும் - தூதற்காப்

பண்டு பகலொன்றில் ஈரொன் பதுசுரமும்
கொண்டு மலைநாடு கொண்டோனும் - தண்டேவிக்

கங்கா நதியும் கடாரமும் கைக்கொண்டு
சிங்கா தனத்திருந்த செம்பியனும் - வங்கத்தை

முற்று முரணடக்கி மும்முடிபோய்க் கல்யாணி
செற்ற தனியாண்மைச் சேவகனுமம் - பற்றலரை

வெப்பத் தடுகளத்து வேழங்கள் ஆயிரமும்
கொப்பத் தொருகளிற்றால் கொண்டோனும்-
அப்பழநூல்

பாடரவத் தென்னரங்க மேயாற்குப் பன்மணியால்
ஆடரவப் பாயல் அமைத்தோனும்.- ஒட்டக் கூத்தர்

### பிள்ளைத் தமிழ்

1. தொண்ணூற்றாறு சிற்றிலக்கியங்களுள் ஒன்று பிள்ளைத் தமிழ்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

2. இறைவனையோ, அரசரையோ குழந்தையாகப் பாவித்து, அவரின் குழந்தைப் பருவத்தைப் பத்துப் பருவங்களாகப் பகுத்து, பருவத்துக்குப் பத்து ஆசிரிய விருத்தங்கள் என நூல் பாடல்களைக் கொண்டது பிள்ளைத் தமிழ்.

3. இதனை பிள்ளைக்கவி என வெண்பாபாட்டியலும் பிள்ளைப்பாட்டு எனப் பன்னிருப்பாட்டியலும் கூறுகின்றன.

**பிள்ளைத் தமிழ் வகைகள்:**

1.ஆண்பாற் பிள்ளைத் தமிழ்
2.பெண்பாற் பிள்ளைத் தமிழ்

4. பத்துப் பருவங்களில் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி ஆகிய ஏழு பருவங்களும் இருபாற் பிள்ளை தமிழுக்கும் பொதுவானவை.

5. இறுதி மூன்று பருவங்களான சிற்றில், சிறுபறை, சிறுதேர் ஆண்பாலுக்கும், அம்மானை, கழங்கு(நீராடல்) ஊசல் என்பன பெண்பாலுக்கும் உரியன.

6. பருவத்திற்கு 10 பாடல்கள் வீதம் 100 பாடல்கள் பாடப்படும்.
பிள்ளைத்தமிழ் நூல்களில் சில:

7. குலோத்தங்கன் பிள்ளைத் தமிழே (ஒட்டக்கூத்தர் - 12 ம் நூற்றாண்டு) முதல் பிள்ளைத்தமிழ் நூல் ஆகும்.

8. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் - குமரகுருபரர் (7 ம் நூற்றாண்டு)

9. திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ் - பகழிக்கூத்தர் (பிள்ளைத் தமிழாயினும் பெரிய தமிழ் என்று பாராட்டப்படுகின்றது)

10. காந்தியம்மை பிள்ளைத்தமிழ்-அழகிய சொக்கநாதர் (19 ம் நூற்றாண்டு)- பெண்பாற் பிள்ளைத்தமிழ்

**பிள்ளைத்தமிழ் நூல்கள்:**

| | |
|---|---|
| குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்(முதல் நூல்) | ஒட்டக்கூத்தர் |



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| | |
|---|---|
| மீனாட்சியம்மன் பிள்ளைத்தமிழ் | குமரகுருபரர் |
| முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் | குமரகுருபரர் |
| திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ்(பெரிய தமிழ்) | பகழிக் கூத்தர் |
| காந்தியம்மை பிள்ளைத்தமிழ் | அழகிய சொக்கநாதர் |
| சேக்கிழார் பிள்ளைத்தமிழ் | மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை |
| சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ் | அந்தக்கவி வீரராகவர் |

**முத்துக்குமார சுவாமி பிள்ளைத் தமிழ்**

**சொற்பொருள்:**

மதி - அறிவு

அமுதகிரணம் - குளிர்ச்சியான ஒளி

உதயம் - கதிரவன்

மதுரம்- இனிமை

நறவம்- தேன்

கழுவு துகளர்- குற்றமற்றவர்

சலதி - கடல்

அலகு இல் - அளவில்லாத

புவனம்- உலகம்

மதலை- குழந்தை

பருதிபுரி - கதிரவன் வழிபட்ட இடம் (வைத்தீஸ்வரன் கோவில்)



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

## ஆசிரியர் குறிப்பு:

**பெயர்** : குமரகுருபர்

**பெற்றோர்**: சண்முகசிகாமணிக் கவிராயர், சிவகாம சுந்தரியம்மை

**ஊர்** : திருவைகுண்டம்

**இயற்றிய நூல்கள்**:

கந்தர் கலிவெண்பா , மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ் , மதுரை கலம்பகம் , சகலகலாவல்லி மாலை, திருவாரூர் மும்மணிக்கோவை, நீதிநெறிவிளக்கம்

**சிறப்பு** : தமிழ், வடமொழி,இந்துஸ்தானி ஆகிய மொழிகளில் புலமை பெற்றவர். திருப்பனந்தாளிலும் காசியிலும் தம்பெயரால் மடம் நிறுவி உள்ளார்.

**இறப்பு** : காசி

**காலம்** : 17ம் நூற்றாண்டு

**நூல் குறிப்பு**

96 சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று பிள்ளைத்தமிழ் . இறைவனையோ அல்லது நல்லாரையோ பட்டுடைத்தலைவனாகக் கொண்டு அவரைக் குழந்தையாகக் கருதி பாடப் பெறுவது பிள்ளைத் தமிழ் (10 பருவங்கள்- 1 பருவம் -10 பாடல்கள்- மொத்தம் 100 பாடல்கள்)

இது ஆண்பாற் பிள்ளைத் தமிழ் , பெண்பாற் பிள்ளைத் தமிழ் என இருவகைப்படும் .

**இருபாலுக்கு உரியவை** - காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம்,வருகை, அம்புலி

**ஆண் பாலுக்கு உரியவை** - சிற்றில்,சிறுபறை , சிறுதேர்,

**பெண்பாலுக்கு உரியவை** - அம்மனை, கழங்கு (நீராடல்), ஊசல்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

* புள்ளிருக்கு வேளூரில் (வைத்தீஸ்வரன் கோவில்) எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமானின் பெயர் முத்து குமாரசுவாமி.

* அவர் மீது பாடப்பட்டதால் இது முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் எனப் பெயர் பெற்றது .

* வருகை பருவம் குழந்தையின் 6-வது பருவமாகும். இது 13-ம் திங்களில் நிகழ்வது. தளர்நடையிட்டு வரும் குழந்தையின் சிறப்புகளை கூறி, அருகில் வருக,வருக என அழைப்பதாக அமையும்.

**காவடிச்சிந்து**

**சொற்பொருள்:**

- கலாபம் - தோகை
- விவேகன் - ஞானி
- கோல - அழகிய
- வாவி - பொய்கை
- மாதே - பெண்ணே

**ஆசிரியர் குறிப்பு:**

- பெயர் = அண்ணாமலையார்
- ஊர் = திருநெல்வேலி மாவட்டம் சென்னிகுளம்
- பெற்றோர் = சென்னவர் - ஓவுஅம்மாள்
- நூல்கள் = காவடிச்சிந்து, வீரை அந்தாதி, கோமதி அந்தாதி, வீரைப்பிள்ளைத்தமிழ்
- சிறப்பு = இளமையிலே நினைவாற்றலும் படைப்பாற்றலும் மிக்கவர்
- காலம் = 1861-1890

**நூல் குறிப்பு:**

- தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டிக்கு அருகிலுள்ள வளமான ஊர் கழுகுமலை.
- இங்கு கோவில் கொண்டுள்ள முருகனின் சிறப்பை எளிய இனிய இசைப்பாடல்களால் போற்றிப் பாடப் பெற்றது இந்நூல்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

## முக்கூடற்பள்ளு

**பள்ளு:**

- "பள்" என்பது பள்ளமான நன்செய் நிலங்களையும் அங்குச் செய்யப்படும் உழவினையும் குறிக்கும்.
- பள்ளு 96 வகை சிற்றிலக்கிய வகையுள் ஒன்று.
- தொல்காப்பியர் குறிப்பிடும் எட்டு வகைப்பிரிவில் ஒன்றான "புலன்" என்னும் இலக்கிய வகை "பள்ளு வகை" இலக்கியத்திற்கு பொருந்தும்.

**முக்கூடற்பள்ளு:**

- திருநெல்வேலிக்குச் சிறிது வடகிழக்கில் தண்பொருநை, சிற்றாறு, கோதண்டராம ஆறு ஆகிய மூன்று ஆறுகளும் கலக்கும் இடத்திற்கு வடக்கே உள்ள சிற்றூர் முக்கூடல்.
- அங்குள்ள இறைவனாகிய அழகர் மீது பாடப்பட்டது இந்நூல்.
- சைவ வைணவங்களை ஒருங்கிணைக்கும் இலட்சியங் கொண்ட நூல், "முக்கூடற்பள்ளு" ஆகும்.
- இந்நூலை இயற்றியவர் பெயர் தெரியவில்லை.
- இது சிந்தும் விருத்தமும் பரவிவர பாடப்பெறும்.

**இலக்கணக்குறிப்பு:**

- வெண்தயிர் - பண்புத்தொகை
- காய, மாய - பெயரெச்சம்
- நாழிகை வாரம் - உம்மைத்தொகை
- தாபதர் உள்ளம் - ஆறாம் வேற்றுமைத்தொகை
- செந்நெல் - பண்புத்தொகை
- சுழி வெள்ளம் - வினைத்தொகை

**முக்கூடற்பள்ளு -(நர்வளம் - இளைய பள்ளி)**

தத்தும் பாய்புனல் முத்தம் அடைக்கும்
சாலை வாய்க்கன்னல் ஆலை உடைக்கும்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

கத்தும் பேரிகைச் சத்தம் புடைக்கும்
கலிப்பு வேலை ஒலிப்பைத் துடைக்கும்

நித்தம் சாறயர் சித்ரம் படைக்கும்
நிதியெல் லாந்தன் பதியில் கிடைக்கும்

மத்தம் சூடும் மதோன்மத்த ரான
மருதசீர் மருதூர் எங்கள் ஊரே.

**சொற்பொருள்:**

- தத்தும் புனல் - அலையெறியும் நீரும்
- கலிப்புவேளை - கருமார், கொல்லர், தட்டார் முதலியோர் செய்யும் தொழில்கள்
- மதோன்மத்தர் - சிவபெருமான்

**நூல் குறிப்பு:**

- நீர் நிறைந்த பள்ளமான சேற்று நிலத்தில் தொழில் செய்யும் பள்ளர்களை பற்றியது.
- திருநெல்வேலியில் உள்ள "தன்பொருணை, சிற்றாறு, கோதண்டராம ஆறு" ஆகிய மூன்று ஆறுகளும் கூடும் இடம் "முக்கூடல்" ஆகும்.
- முக்கூடலை "ஆசூர் வடகரை நாடு" என்றும் அழைப்பர்.
- இதன் தென்பகுதியில் உள்ளது "சீவல மங்கைத் தென்கரை நாடு".
- தென்கரை நாட்டில் "மருதசீர்" வீற்றிருக்கும் ஊர் மருதூர்.
- முக்கூடலில் வாழும் பள்ளி மூத்த மனைவி, மருதூரில் வாழும் பள்ளி இளைய மனைவி.
- இருவரையும் மணந்து திண்டாடும் பள்ளனின், வாழ்க்கை வளத்தை கூறுகிறது இந்நூல்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)**

**பாடம் : தமிழ்**

**பகுதி : நாட்டுப்புற பாட்டு - சித்தர் பாடல்கள் தொடர்பான செய்திகள்**

www.Padasalai.Net

**©காப்புரிமை :**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)** க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

## நாட்டுப்புற பாட்டு - சித்தர் பாடல்கள் தொடர்பான செய்திகள்

- ஆங்கிலேயரின் தமிழ் ஆய்வால் தோன்றிய துறைகளில் ஒன்று நாட்டுப்புறவியல்
- இதற்கு நாட்டார் வழக்காற்றியல் என்று வேறு பெயரும் உண்டு.
- நாட்டுப் புறப்பாடல்கள், கதைகள், விளையாட்டுகள், கலைகள், சமயம், பழக்கவழக்கங்கள், அறிவியல் போன்றன நாட்டுப் புறவியலுள் அடங்கும்.

### நாட்டுப்புறப் பாடல்கள்

- நாட்டார் பாடல்கள் , கிராமியப் பாடல்கள் , நாடோடிப் பாடல்கள் , வாய்மொழி இலக்கியம் என்ற பெயர்களும் உண்டு.
- குடும்பம்,தொழில், விளையாட்டுச் சார்ந்த பாடல்கள் , விடுகதை, பழமொழி, இதிகாசங்கள், புராணங்கள் போன்றன இதில் அடங்கும்.

### நாட்டுப்புற பாடல்களின் இயல்புகள்:

1. பேச்சு வழக்குடையது
2. கொச்சை மொழி கொண்டது
3. கூறியது கூறல் வரும்
4. வாய்மொழியாகப் பரவுவது
5. வடிவம் மாறக் கூடியது
6. படைத்தவர் பெயர் தெரியாதது
7. மக்களின் பக்தி, நீதி, உளவியல், சமுதாயம் என அனைத்துக் கூறுகள்

### நாட்டுப்புற விளையாட்டுகள்:

சடுகுடு, கோலி, கல்லாங்காய், பல்லாங்குழி, கல்லாமண்ணா, கூட்டாஞ்சோறு, கண்ணாமூச்சு, நொண்டி, தாயம் போன்றன இதில் அடங்கும்.

### நாட்டுப்புறக் கலைகள்:

கரகாட்டம், காவடியாட்டம், தெருக்கூத்து, பொம்மலாட்டம், தோற்பாவை போன்ற நிகழ்த்துக் கலைகளும் . ஓவியம், சிற்பம், கதைச் சிற்பம் போன்ற பொருட் கலைகளும் இதில் அடங்கும்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**நாட்டுப்புறச் சமயமும் பழக்க வழக்கங்களும்:**

சிறு தெய்வ வழிபாடு , நடுகல் வழிபாடு, முன்னோர் வழிபாடு, குலதெய்வ வழிபாடு, இத்தெய்வங்களுக்கு எடுக்கும் விழாக்கள், இடும் பலிகள், அணியும் ஆடைகள், பயன்படுத்தும் பொருட்கள் போன்றன இதில் அடங்கும்.

**நாட்டுப்புற அறிவியல்:**

வானிலை, வேளாண்மை, கட்டடம், நிலவியல், கடலியல், படகு கட்டுதல், மருத்துவம், இசைக் கருவிகள் தயாரித்தல் போன்ற செய்திகள் இதில் அடங்கும்.

**நாட்டுப்புற இசைக் கருவிகள் :**

உடுக்கை, மிருதங்கம், தப்பு, தம்பட்டம், ஜால்ரா, கஞ்சிரா, உருமி, துந்தினா, கரடி வாத்தியம், குடுகுடுப்பை, பம்மை, பறை.

**நாட்டுப்புறப்பாடல்:**

**தொழிற்பாடல் (மீனவர் பாடல்)**

விடிவெள்ளி நம்விளக்கு - ஜலசா
விரிகடலே பள்ளிக்கூடம் - ஜலசா
அடிக்கும் அலையே நம்தோழன் - ஜலசா
அருமைமேகம் நமதுகுடை - ஜலசா
காயும் ரவிச்சுடர் கூரை - ஜலசா
கட்டுமரம் வாழும் வீடு - ஜலசா
பின்னல்வலை அரிச்சுவடி - ஜலசா
பிடிக்கும் மீன்கள் நம்பொருட்கள் - ஜலசா
மின்னல் இடிகாணும் கூத்து - ஜலசா
வெண்மணலே பஞ்சுமெத்தை - ஜலசா
முழுநிலாதான் கண்ணாடி - ஜலசா
மூச்சடக்கி நீந்தல் யோகம் - ஜலசா
தொழும் தலைவன் பெருவானம் - ஜலசா
தொண்டு தொழிலாளர் நாங்கள் - ஜலசா



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**பதினெண் சித்தர்கள்:**

- சித்தர் என்ற சொல் 'சித்' என்ற வடமொழிச் சொல்லிலிருந்து தோன்றியது.
- சித்' என்றால் அறிவு
- 18 சித்தர்கள் என்று சொல்வது மரபு. வரையறுத்துக் கூறினார் இல்லை.
  1. அகத்தியர்
  2. பட்டினத்தார்
  3. பத்திரகிரியர்
  4. சிவாக்கியர்
  5. பாம்பாட்டிச் சித்தர்
  6. இடைக்காட்டுச் சித்தர்
  7. அகப்பேய்ச் சித்தர்
  8. குதம்பைச் சித்தர்
  9. கடுவெளிச்சித்தர்
  10. அழுகுணிச் சித்தர்
  11. கொங்கணச் சித்தர்
  12. பீர் முகமது
  13. மதுரை வாலைசாமி
  14. சட்டைமுனி
  15. திருமூலர்
  16. உரோமரி
  17. கருவூரார்
  18. இராமலிங்க அடிகளார்

  மேலும் ஔவையார், ஏனாதி சித்தர், களைச் சித்தர் போன்றோரும் உண்டு.

**1. அகத்தியர்:**

- சித்தர்களின் தலைவர் அகத்தியர்
- சித்த மருத்துவ முறையை வகுத்தவர்
- ஆயுர்வேத சூத்திரங்களுக்கு விரிவுரை எழுதியவர்
- அவர் பா டிய சித்தர்பாடல்கள் 'ஞானப்பாமாலை' என்று வழங்கப்படுகிறது.
- அடக்கம் பெற்ற தலம் அனந்தசயனம் ஆகும்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

## 2. பட்டினத்தார்:

- இயற்பெயர் சுவேதாரண்யர்
- பெற்றோர் சிவநேச செட்டியார் - ஞானகலை ஆச்சி ஊர் காவிரிப்பூம் பட்டினம்
- பட்டினத்து வணிகர் ஆதலால் பட்டினத்தார் எனப்பட்டார்.
- இவருக்குத் திருவெண்காடர் என்ற பெயரும் உண்டு
- இவரின் சீடர் பத்திரகிரியார்
- அடக்கம் பெற்ற தலம் திருவொற்றியூர்

## 3. பத்திரகிரியார்:

- உஞ்சனை மாகாளபுரத்து அரசர்
- பட்டினத்தாரைக் குருவாக ஏற்றுக் கொண்டவர்
- சோற்றுச் சட்டியும் நாய்க் குட் ;டியையும் வைத்திருந்தால் பட்டினத்தாரால் சம்சாரி என்று கூறப்பட்டவர்
- இவர் பாடல் மெய்ஞ்ஞானப் புலம்பல் என்று அழைக்கப்படுகிறது
- 235 கண்ணிகள் உள்ளன.
- எல்லா கண்ணிகளும் 'எக்காலம்' என்னும் வினாவாகவே முடிகின்றன.

## 4. சிவவாக்கியர்:

- இயற்பெயர் தெரியவில்லை
- சித்தர்களில் மிகுந்த சீர்திருத்தவாதி
- இவர் பாடல்கள் சந்த ஓட்டம் உடையன
- சிவ வாக்கியரும் திருமழிசை ஆழ்வாரும் ஒருவரே என்று கருதுவாரும் உண்டு.

## 5. பாம்பாட்டிச் சித்தர்:

- இயற்பெயர் தெரியவில்லை
- செத்த பாம்பை ஆட வைத்ததால் அல்லது பாம்பை ஆடும்படித் தூண்டியதால்
- பாம்பாட்டிச் சித்தர் எனப் பெயர் பெற்றார் என்பர்
- பிறந்த ஊர் பாண்டி நாட்டுக் கோகர்ணம்
- வாழ்ந்த இடம் கொங்கு நாட்டு மருதமலை
- மொத்த பாடல் 129



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- அடக்கம் பெற்ற ஊர் விருத்தாசலம்

**6.இடைக்காட்டுச் சித்தர்:**

- இயற்பெயர் தெரியவில்லை
- பிறந்த ஊர் தொண்டை நாட்டு இடைக்காடு
- இடையர் குலம்
- கொங்கணச் சித்தரின் சீடர்
- மொத்தம் 130 பாடல்கள்
- இவரது பாடல்கள் இடையர்களின் பசுவைப் பார்த்தும் இடையர்களின் தலைவனைப் பார்த்தும் பாடுவதாக அமைத்துள்ளன.
- அடக்கம் பெற்ற ஊர் திருவண்ணாமலை

**7. அகப்பேய்ச் சித்தர்:**

- இயற்பெயர் தெரியவில்லை
- அகப்பைச் சித்தர் என்பது மரூஉ
- மொத்தம் 90 பாடல்கள்
- பேயாக அலையும் மனதை 'அகப்பேய்' என்று பெண்ணாக உருவகித்து முன்னிலைப்டுது;திப் பாடியதால் இப்பெயர் பெற்றார் என்று கூறுவர்.
- அடக்கம் பெற்ற ஊர் அழகர்மலை

**8. குதம்பைச் சித்தர்:**

- இயற்பெயர் தெரியவில்லை
- குதம்பை என்பது ஒருவகைக்காதணி . அதனை அணிந்த பெண்ணை முன்னிலைப்படுத்தி 'குதம்பை' என்று விளித்துப் பாடியதால் 'குதம்பை சித்தர்' எனப்பட்டார்.
- இடையர் குலத்தைச் சேர்ந்தவர்
- அடக்கம் பெற்ற ஊர் மாயூரம்
- 32 பாடல்கள் பாடியுள்ளார்

**9. கடுவெளிச் சித்தர்:**

- சித்தர் பாடல் - ஆசிரியர் - கடுவெளிச் சித்தர்
- நானூறு ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தின் காடு மலைகளில் வாழ்ந்தவர்கள் சித்தர்கள்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- பாம்பாட்டிச் சித்தர் , குதம்பைச் சித்தர் , அழுகுணிச் சித்தர் என்பன எல்லாமே காரணப் பெயர்கள்.
- கடுவெளிச் சித்தர் , உருவ வழிபாடு செய்யாமல் வெட்டவெளியையே கடவுளாக வழிப்பட்டவர்.
- எளிய சொற்களில் அறிவுரைகளைச் சொன்னவர்.
- இயற்பெயர் தெரியவில்லை.
- கடுவெளி என்றால் சுத்தவெளி அதா வது பிரமம் பிரமத்தைக் கடுவெளி என்றதால் 'கடுவெளிச் சித்தர்' எனப்பட்டார்.
- இவரது பாடல்களில் நீதிக் கருத்துகள் மிகுதி
- 34 பாடல்கள்

**10. அழுகுணிச் சித்தர்:**

- இயற்பெயர் தெரியவில்லை
- இவர் பாடல்களில் அழகும் அணியும் சேர்ந்திருப்பதால் அழுகுணிச்சித்தர் எனப் பெயரிடப்பட்டார்.
- அழுவது போன்ற சந்த யாப்பில் இவர் பாடல் உள்ளதால் இவரை அழுகுணிச் சித்தர்; என்றும் அழுகுணி சித்தர் என்றும் அழைப்பர்.
- இவர் பாடல்களின் எண்ணிக்கை 32
- இவர் பாடல் ஒவ்வொன்றிலும் 'கண்ணம்மா' என்ற விளிச்சொல் வருகிறது.

**11. கொங்கணச் சித்தர்:**

- இயற்பெயர் தெரியவில்லை
- கொங்கு நாட்டவராக இருக்கலாம்
- வாலைக் கும்மி அடித்தவர்
- ஆன்மாக்கள் கும்மி அடிப்பதாக உருவகித்துள்ளனர்.
- இவரின் சீடர் இடைக்காட்டுச் சித்தர்
- 111 பாடல்கள்
- மருத்துவ நூல் , யோக நூல் , இரசவாத நூல் , கடைக்காண்டம், திரிகாண்டம், கொங்கணர் ஞானம் , குணபாகம் ஆகிய நூல்களை இயற்றியவர்
- 'கொக்கென நினைத்தாயோ கொங்கணவா ' (வாசுகி) என்ற கதைக்குரியவர்

  அடைக்கலம் பெற்ற ஊர் திருப்பதி



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

### 12. பீர் முகமது:

- இஸ்லாம் சமயச் சித்தர்
- ஞானரத்தினக் குறவஞ்சி பாடியவர்
- 64 கண்ணிகள் பாடியுள்ளார்
- இவர் பாடல்கள் வினாவிடையாகச் செல்கிறது
- சிங்கன் கேள்வி கேட்பதாக வும் சிங்கி பதில் சொல்வதாகவும் அமைந்துள்ளது.

### 13. மதுரை வாலைச்சாமி:

- இயற்பெயர் தெரியவில்லை
- ஞானத்தைப் பெண்ணாக உருவகித்து,அவளை விளித்துப் பாடியுள்ளார்.
- கும்மியடி மெட்டில் பாடல் புனைந்தவருள் இவரும் ஒருவர்.

### 14. சட்டை முனி:

- இயற்பெயர் தெரியவில்லை
- போக முனிவரின் மாணவர்
- உரோமரியுடன் மாறுபாடு கொண்டவர்
- பூஜை விதிகளைப் பற்றி அதிகம் பாடியவர்
- இயற்றிய நூல்கள் சட்டை முனி ஞானம் , சடாட்சரக் கோவை, கல்பம் நூறு, ஞானநூறு, வாதநிகண்டு, சட்டைமுனி,1200 நவரத்தின வைப்பு.

### 15. திருமூலர்:

- திருமந்திரம்

1. "உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளத் தேனே".- திருமூலர்

### 16. உரோமரி:

- பசுண்ட மாமுனிவர் மாணவர்
- மானிடர் வயது நூறு என்றும் ஒரு நாளைக்குச் சுவாசம் 21600 என்றும் கணக்கிட்டுச் சொன்னவர்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

### 17. கருவூரார்:

- பூசை விதிகளைப் பாடியவர்
- தஞ்சை பெரிய கோயில் லிங்கத்திற்கு அஞ்டபந்தனம் செய்தவர்
- ஒன்பதாம் திருமுறையில் திருவிசைப்பா பாடியவர்
- இவரது பூஜைவிதிப் பாடல்கள் அந்தாதித் தொடையில் அமைந்துள்ளன.
- மொத்தம் 30 பாடல்கள்

### 18. இராமலிங்க அடிகளார்:

- திருவருட்பா
  "கண்ணில் கலந்தான் கருத்தில் கலந்தான்என்
  எண்ணில் கலந்தே இருக்கின்றான் - பண்ணில்
  கலந்தான்என் பாட்டில் கலந்தான் உயிரில்
  கலந்தான் கருணை கலந்து".- இராமலிங்க அடிகளார்

### சில செய்திகள்:

- சித்தர்களில் பெரும்பாலானோர் சைவர்கள் ; எனினும் இவர்கள் சாதி சமயங்களைக் கடந்தவர்கள்
- பக்தி செலுத்தி முக்தி அடைவதே பிறவாதிருக்க வழி என்பது பக்தர் கொள்கை; பருவுடலை நுண்உடல் ஆக்குவதே பிறவாதிருக்க வழி என்பது சித்தர் கொள்கை.
- கடவுளைக் காண முயல்பவர்கள் பக்தர்கள் ; கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள்' என்று தேவாரம் கூறுகிறது.

சித்தர்களில் பஞ்சமர் (ஐவர்) என்று குறிப்பிடப்படுபவர்கள்.

1. திருமூலவர்
2. சிவவாக்கியர்
3. பட்டினத்தார்
4. திருமாளிகைத் தேவர்
5. கருவூரார்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)**

**பாடம் : தமிழ்**

**பகுதி : சமய முன்னோடிகள்**

www.Padasalai.Net

**©காப்புரிமை :**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)** க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

# சமய முன்னோடிகள்

## 1. திருநாவுக்கரசர்(அ)அப்பர் :

### வாழ்க்கை குறிப்பு:

- இயற்பெயர் = மருள்நீக்கியார்
- பெற்றோர் = புகழனார், மாதினியார்
- ஊர் = தென்னாற்காடு மாவட்டம் திருவாமூர்
- சகோதரி = திலகவதி
- வாழ்ந்த காலம் = 81 ஆண்டுகள்
- மார்க்கம் = சரியை என்னும் தாச மார்க்கம்
- நெறி = தொண்டு நெறி
- இவரின் தமிழ் = கெஞ்சு தமிழ்
- இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட இடம் = திருவதிகை
- இறைவனடி சேர்ந்த இடம் = திருப்புகலூர்

### படைப்புகள்:

- இவர் அளித்தது 4,5,6 ஆம் திருமுறை
- 4 ஆம் திருமுறை = திருநேரிசை
- 5 ஆம் திருமுறை = திருக்குறுந்தொகை
- 6 ஆம் திருமுறை = திருந்தான்டகம்

### வேறு பெயர்கள்:

- மருள்நீக்கியார்(இயற் பெயர்)
- தருமசேனர்(சமண சமயத்தில் இருந்த பொழுது)
- அப்பர்(ஞானசம்பந்தர்)
- வாகீசர்
- தாண்டகவேந்தர்
- ஆளுடைய அரசு
- திருநாவுக்கரசர்(இறைவன் அளித்த பெயர்)
- சைவ உலகின் செஞ்ஞாயிறு



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

### செய்த அற்புதங்கள்:

- "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் கொள்கையில் நின்று உழவாரப்பணி மேற்கொண்டார்.
- "மகேந்திரவர்மப் பல்லவனை" சைவராக்கினார்.
- திருமறைக்காட்டில் பாடியே கதவை திறக்கச் செய்தார்.
- பாம்பு தீண்டி இறந்த அப்பூதியடிகளின் மகனை உயிர் பெற்று எழச் செய்தார்.
- திருவையாற்றில் மூழ்கி எழுந்து, கயிலாயக் காட்சியை கண்டார்.
- மகேந்திரவர்மப் பல்லவன் இவரை கல்லில் கட்டி கடலில் வீசிய போதும், "கடலில் பாய்ச்சினும் நல்துணை ஆவது நமச்சி வாயவே" எனப் பாடி கடலில் கல்லுடன் மிதந்து கரை சேர்ந்தார்.

### சிறப்பு:

- சிவபெருமானே இவரை "நாவுக்கரசர்" எனப் பெயர் இட்டு அழைத்தார்.
- "உழவாரப்படை" கொண்டு கோயில் தோறும் உழவாரப்பணி(புல் செதுக்கி சுத்தம் செய்தல்) மேற்கொண்டார்.
- திருஞானசம்பந்தரை தன் தோலில் சுமந்து பல தலங்கள் சென்றுள்ளார்.
- "என் தவம் பணி செய்து கிடப்பதே" என்னும் கொள்கையில் நின்று உழவாரப்பணி மேற்கொண்டார்.
- இறைவனை கணவனாகவும், ஆன்மாவை மனைவியாகவும் உருவகித்து பாடியவர்.

### குறிப்பு:

- இவர் சமண சமயத்தில் இருந்து தன் சகோதரியின் மூலம் சைவ சமயத்திற்கு மாறினார்.
- இவர் சமண சமயத்தில் இருந்த பொது இவரின் பெயர் = தருமசேனர்
- இவர் 4900 பதிகங்கள் பாடியதாக கூறப்படுகிறது.
- ஆனால் இன்று கிடைத்ததோ 313 பதிகங்கள் மட்டுமே.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- சங்கம் என்னும் வார்த்தை முதன் முதலில் இவரது திருப்பத்தூர்த் தேவாரத்தில், "நன் பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி நற்கனகக்கிழி தருமிக் கருளினோன் காண்" என்ற பாடலில் வருகிறது.

மேற்கோள்:

- மாசில் வீணையும் மாலை மதியமும்
  வீசு தென்றலும் வீங்குஇள வேனிலும்

- கல்துணைப் பூட்டிஓர் கடலில் பாய்ச்சினும்
  நல்துணை ஆவது நமச்சி வாயவே

- நமார்ர்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
  நரகத்தில் இடர்ப்போம் நடலை இல்லோம்
  ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்
  இன்பமே எந்நாளும் துன்பமில்லை
  குனித புருவமும் கொவ்வைச் செவ்
  வாயிற்குமிண் சிரிப்பும்
  பனித்த சடையும் பவளம்போல் மேனியிற்
  சாத்தி ரம்பல பேசும் சழக்கர்காள்
  கோத்திரமும் குளமும் கொண்டு என் செய்வீர்?
  முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்

- என் கடன் பணி செய்து கிடப்பதே



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

## 2. திருஞானசம்பந்தர்

### வாழ்க்கை குறிப்பு:

- இயற்பெயர் = ஆளுடையபிள்ளை
- பெற்றோர் = சிவபாத இருதயார், பகவதி அம்மையார்
- ஊர் = சீர்காழி(தோணிபுரம், பிரம்மபுரம், வேணுபுரம்)
- மனைவி = சொக்கியார்
- வாழ்ந்த காலம் = 16 ஆண்டுகள்
- மார்க்கம் = கிரியை என்னும் சத்புத்திர மார்க்கம்
- நெறி = மகன்மை நெறி
- இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட இடம் = சீர்காழி
- இறைவனடி சேர்ந்த இடம் = பெருமண நல்லூர்
- இவரின் தமிழ் = கொஞ்சு தமிழ்

### படைப்புகள்:

- 1,2,3 ஆம் திருமுறைகள்
- முதல் மூன்று திருமுறைகள் ="திருகடைகாப்பு" எனப் போற்றுவர்

### வேறு பெயர்கள்:

- ஆளுடையபிள்ளை(இயற்பெயர்)
- திருஞானம் பெற்ற பிள்ளை
- காழிநாடுடைய பிள்ளை
- ஆணைநமதென்ற பெருமான்
- பரசமயகோளரி
- நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தம்(சுந்தரர்)



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- திராவிட சிசு(ஆதிசங்கரர் தம்முடைய சௌந்தர்ய லகரி என்னும் நூலில்)
- இன்தமிழ் ஏசுநாதர்
- சத்புத்திரன்
- காழி வள்ளல்
- முருகனின் அவதாரம்
- கல்லாமல் கற்றவன்(சுந்தரர்)

## நிகழ்த்திய அற்புதங்கள்:

- திருமறைக்காடு = மூடிய கோயில் கதவுகளை பாடித் திறக்க செய்தார்.
- திருப்பாச்சிலாச்சிரமம் = மழவன் மகளின் முயலகன் நோய் நீக்கினார்
- திருமருகல் = பாம்பு தீண்டிய வணிகனின் விடம் நீக்கினார்
- திருவோத்தூர் = ஆண்பனையை பெண்பனை ஆக்கினார்
- மதுரை = தான் தங்கியிருந்த மடத்திற்குக் கூன்பாண்டியன் வைத்த நெருப்பை அவனுக்கே வெப்பு நோயாகப் பற்றச் செய்தார்.
- அவன் மனைவி மங்கையர்க்கரசியும், அமைச்சர் குலச்சிறையாரும் வேண்ட, நீறு பூசி அவனின் வெப்பு நோய் நீக்கி, அவனின் கூன் நீக்கச் செய்து அவனை "நின்றசீர் நெடுமாறன்" ஆகினார்.
- மதுரை = வாதத்துக்கு அழைத்த புத்தநந்தியின் தலை துண்டாகுமாறு செய்தார்.
- மயிலாப்பூர் = குடத்தில் சாம்பலாக இருந்த பூம்பாவை என்னும் பெண்ணை உயிருடன் வரச் செய்தார்.
- திருஏடகம் = வைகையாற்றில் இட்ட ஏடு கரை ஏறியது.
- திருப்பூந்துருத்தி = நாவுக்கரசர் இவரை சுமந்த இடம்.

## இறைவனிடமிருந்து பெற்றவை:

- திருகோலக்காவில் = பொற்றாளம்
- திருவாடுதுறை = பொற்கிழி
- திருவீழிமிழலை = படிகாசு
- திருவாயிலறத்துறை = முத்துச்சிவிகை



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- பட்டீஸ்வரம் = முத்துப்பந்தல்

## குறிப்பு:

- மூன்று வயதில் இவருக்கு உமையம்மையே நேரில் வந்து இவருக்கு "ஞானப்பால்" ஊட்டினார். அன்று முதல் இவர் "ஞானசம்பந்தன்" எனப் பெயர் பெற்றார்.
- இவர் தந்தையாரின் தோளில் அமர்ந்தவாறே சிவத்தலங்கள் சென்று பாடினார்.
- இவரின் அனைத்துப் பதிகங்களிலும்
    - எட்டாவது பாடல் "இராவணன்" பற்றியும்,
    - ஒன்பதாவது பாடல் "மாலும் அயனும்" காண இயலாத சிவபெருமானின் பெருமையும்,
    - பத்தாவது பாடல் "சமண பௌத்த சமயங்கள்" துன்பம் தரும் தீங்கினை உடையன என்றும் பாடும் பாங்கினை கொண்டுள்ளன.
- 16 ஆண்டுகள் மட்டுமே இவர் உயிருடன் வாழ்ந்தார்.
- அந்தணரான சம்பந்தர் தாம் செல்லும் இடங்களுக்கு எல்லாம் பாணர் குளத்தை சேர்ந்த திருநீலகண்ட யாழ்பாணரை அழைத்து செல்வார்.
- இவர் தன்னை தானே "தமிழ் ஞானசம்பந்தன்" என அழைத்துக்கொண்டார்.
- மதுரையில் அனல்வாதம், புனல்வாதம் செய்து சமணர்களை தோற்கடித்தார். தோல்வி தாங்காமல் 8000 சமண முனிவர்கள் தற்கொலை செய்துக்கொண்டனர்.
- 220 திருத்தலங்களுக்கு சென்று பாடியுள்ளார்.
- சம்பந்தரும் நாவுக்கரசரும் சந்தித்த இடம் = திருப்புகலூர்

## சிறப்பு:

- தந்தை இல்லாமல் சென்ற இடங்களில் சிறுவனான இவரை, திருநாவுக்கரசர் தம் தோளில் சுமந்து சென்றுள்ளார்.
  (இடம் = திருப்பூந்துருத்தி)



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- திருநாவுக்கரசரை "அப்பர்" எனப் பெயர் இட்டு அழைத்தார்.
- இவரின் நெறி = மகன்மை நெறி
- இவரின் மார்க்கம் = சத்புத்திர மார்க்கம்
- சேக்கிழார் தமது பெரியபுராணத்தில், "வேதநெறி தழைத்தோங்க, மிகு சைவத்துறை விளங்க இவர் தோன்றினார்" எனப் பாராட்டினார்.
- தம் பாடல்களில் 23 பண் அமைத்துப் பாடியுள்ளார்.
- ஏறத்தாழ 110 சந்தங்களை தன் பாடல்களில் அமைத்துப் பாடியுள்ளார்.
- எனவே இவரை, "சந்தத்தின் தந்தை" என்று கூறுவர்.
- யமகம், மடக்கு முதலிய சொல்லணிகட்கும், சித்திர கவிக்கும் முதன் முதலில் தொடங்கி வைத்தவர் சம்பந்தரே ஆவார்.
- சேக்கிழார் பெரியபுராணத்தில் ஏறக்குறைய பாதிக்கு பாதி சம்பந்தர் வரலாறு இடம் பெறுவதால் "பிள்ளை பாதி புராணம் பாதி" எனப் போற்றப்படுகிறது.
- இவர் "முருகனின் அவதாரமாகவே" கருதப்பட்டார்.
- யாழ முறி இவருக்கு மட்டுமே உரியது.

**மேற்கோள்:**

- காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
  ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது
  வேத நான்கினும் மெய்ப்பொருளாவது
  நாதனாம நமச்சிவாயமே

- சிறையாரும் மடக்கிளியே இங்கே வா தேனொடுபால்
  ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
  சனி பாம்பி ரண்டு முடனே
  ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
  அடியார வர்க்கு மிகவே



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

## 3. சுந்தரர்

### வாழ்க்கை குறிப்பு:

- இயற்பெயர் = நம்பி ஆரூரர்
- பெற்றோர் = சடையனார், இசைஞானியார்
- ஊர் = திருமுனைப்பாடி நாடு திருநாவலூர்
- மனைவி = பரவையார், சங்கிலியார்
- வாழ்ந்த காலம் = 18 ஆண்டுகள்
- மார்க்கம் = யோகம் என்னும் சக மார்க்கம்
- நெறி = யோகம் அல்லது தோழமை நெறி
- இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட இடம் = திருவெண்ணெய் நல்லூர்
- இறைவனடி சேர்ந்த இடம் = கைலாயம்
- இவரின் தமிழ் = மிஞ்சு தமிழ்

### படைப்புகள்:

- 7ஆம் திருமுறை. இதனை "திருப்பாட்டு" என்பர்.
- திருதொண்டத்தொகை

### வேறு பெயர்:

- வன்தொண்டர்
- தம்பிரான் தோழர்
- சேரமான் தோழர்
- திருநாவலூறார்
- ஆலாலசுந்தரர்
- ஆளுடைய நம்பி

### நிகழ்த்திய அற்புதங்கள்:

- 12000 பொன்னை மணிமுத்தாற்றில் போட்டு கமலாலயத்தில் எடுத்தார்.
- இவர் பொருட்டு காவிரி ஆறு இரண்டு கூறாகப் பிளந்து நின்றது.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- செங்கல்லை தங்கக் கல்லாக மாற்றினார்.
- வாழ்நாள் முழுவதும் மணக்கோலத்துடன் வாழ்ந்தவர்.
- பரவையார் மீது இவர் கொண்ட காதலுக்கு சிவபெருமான் உதவி புரிந்தார்.
- இரு கண்ணையும் இழந்தவரை, காஞ்சியில் ஒரு கண்ணையும் திருவாரூரில் ஒரு கண்ணையும் பெற வைத்தார்.
- முதலை உண்ட பாலகனை உயிரோடு மீட்டார்.

### சிறப்பு:

- இவரின் திருமணத்தன்று இறைவனே நேரில் வந்து அடிமை ஓலை காட்டி, சுந்தரர் தனது அடிமை என நிறுவினார்.
- தன்னை அடிமை என்று கூறிய இறைவனைப் "பித்தா" எனக் கோபித்துப் பேசினார்.
- இறைவன் சுந்தரரை ஆட்கொண்டப்பின் "பித்தாபிறை சூடி" என்ற பாடலை பாடினார்.
- சேரமான் பெருமாள் நாயனாரோடு "வெள்ளையானை மீது" அமர்ந்து கயிலை சென்றார்.
- மனைவியின் ஊடலை தவிர்க்க இறைவனையே தூதாக அனுப்பினார்

### குறிப்பு:

- இவரை திருமுனைப்பாடி நாட்டை ஆண்ட நரசிங்கமுனையர் என்ற மன்னனால் தத்து எடுத்து வளர்க்கப்பட்டவர்.
- இவர் 38000 பதிகங்கள் பாடியதாக கூறப்படிகிறது, ஆனால் கிடைத்தவை 100 மட்டுமே.
- "வித்தகம் பேச வேண்டா விரைந்து பணி செய்ய வேண்டும்" என்று இறைவன் இவரிடம் கூறினார்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

மேற்கோள்:

- பித்தா பிறை சூடி பெருமானே அருளாளா
- பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
- தம்மானை அறியாத சாதியாரும் உளரோ

## 4. மாணிக்கவாசகர்

வாழ்க்கை குறிப்பு:

- இயற்பெயர் = தெரியவில்லை
- பெற்றோர் = சம்பு பாதசாரியார், சிவஞானவதியார்
- ஊர் = பாண்டி நாட்டு திருவாதவூர்
- வாழ்ந்த காலம் = 32 ஆண்டுகள்
- மார்க்கம் = ஞானம் என்னும் சன் மார்க்கம்
- நெறி = ஞானம் நெறி
- இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட இடம் = திருப்பெருந்துறை
- இறைவனடி சேர்ந்த இடம் = சிதம்பரம்

படைப்புகள்:

- 8ஆம் திருமுறை = திருவாசகம், திருக்கோவையார்
- திருவெம்பாவை
- போற்றித் திருவகவல்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

### திருவாசகம்: வேறுபெயர்

- தமிழ் வேதம்
- சைவ வேதம்

### திருக்கோவையார்: வேறுபெயர்

- திருசிற்றம்பலக்கோவை
- ஆரணம்
- ஏரணம்
- காமநூல்
- எழுத்து

### மாணிக்கவாசகரின் வேறு பெயர்கள்:

- திருவாதவூரார்
- தென்னவன் பிரம்மராயன்
- அழுது அடியடைந்த அன்பர்
- வாதவூர் அடிகள்
- பெருந்துறைப் பிள்ளை
- அருள் வாசகர்
- மணிவாசகர்

### சிறப்பு:

- மன்னனக்காக குதிரை வாங்க சென்ற பொது திருப்பெருந்துறை இறைவனால் ஆட்கொள்ளப்பட்டார்.
- இவருக்காக இறைவன் நரியை பரியக்கினார்.(பரி=குதிரை)
- பாண்டியன் மாணிக்கவாசகரை "கல்லைக்கட்டி வைகையில்" இட்ட பொது, கோபமுற்று வைகையில் வெள்ளப் பெருக்கை ஏற்படுத்தினான்.
- திருவாசகத்தை ஜி.யு.போப் ஆங்கிலத்தில் மொழிப் பெயர்த்துள்ளார்.
- இராமலிங்க அடிகள், திருவாசகத்தின் இனிமையை போற்றுகிறார்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவைகலந்து ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே
- இவருக்காக வந்தி என்ற கிழவியின் கூலி ஆளாய் இறைவன் பிட்டுக்கு மண் சுமந்தார்.
- பாடல்களை இவர் சொல்ல இறைவனே எழுதினார்.
- புத்தர்களை ஊமையாக்கியது, புத்த அரசனின் ஊமை மகளைப் பேசவைத்தது போன்ற அற்புதங்களை செய்துள்ளார்.
- "திருவாசகம் ஒருகால் ஓதின் கருங்கல் மனமும் கரைந்துருகும்" - நால்வர் நான்மணிமாலை
- "திருவாசகத்திற்கு உருகார் ஒருவாசகத்திற்கும் உருகார்" என்ற பழமொழி உண்டாயிற்று.
- 51 தலைப்புகளில் 659 பாடல்கள் உள்ளன.

## திருக்கோவையார்:

- "பாவை பாடிய வாயால் கோவை பாடுக" என இறைவன் கேட்க மாணிக்கவாசகர் திருக்கோவையாரை பாடினார்.
- திருக்கோவையாரை, "திருசிற்றம்பலக்கோவை" எனவும் அழைப்பர்
- இந்நூலின் வேறு பெயர்கள் - ஆரணம், ஏரணம், காமநூல், எழுத்து
- இந்நூல் கட்டளை கலித்துறையால் பாடப்பட்டது.
- 400 பாடல்களைக் கொண்டது.
- கோவை நூல்களுள் காலத்தால் முற்பட்டது

## குறிப்புகள்:

- அரிமர்த்த பாண்டியனிடம் அமைச்சராக இருந்தவர்.
- மன்னனிடம் "தென்னவன் பிரம்மராயன்" என்னும் பட்டம் பெற்றார்.
- மாணிக்கவாசகர் சிவபெருமானைத் தலைவனாகக் கொண்டு 20
- பாடல்களில் திருவெம்பாவை பாடினார்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

மேற்கோள்:

- நமச்சிவாயம் வாழ்க நாதம் தாள்வாழ்க
- ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்சோதி
- தென்னாடுடைய சிவனே போற்றி
  எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி
- வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
- உற்றாரை யார்வேண்டேன் ஊர் வேண்டேன் பேர்வேண்டேன்
- அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
- புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
  பல்மிருகமாகிப் பறவையாய் பாம்பாகி

## 5. திருமூலர் :

- பெயர்: திருமூலர்
- குலம்: இடையர்
- பூசை நாள்: ஐப்பசி அசுவினி
- அவதாரத் தலம்: சாத்தனூர்
- முக்தித் தலம்: திருவாவடுதுறை\

முக்கிய சொற்றொடர்கள்:

- ஒன்றே குலம் ஒருவனே தேவன்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net

- ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
  நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந்தான் ஐந்து
  வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்
  சென்றனன் தானிருந் தானுணர்ந் தேட்டே
- அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
  அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
  அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
  அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே

- திருமூலர் அல்லது திருமூல நாயனார் சேக்கிழார் சுவாமிகளால் புகழ்ந்து பேசப்பட்ட 63 நாயன்மார்களுள் ஒருவரும், பதினெண் சித்தர்களுள் ஒருவரும் ஆவார்.
- இவர் சிறந்த ஞானியாய் விளங்கியவர்.
- திருமூலர் வரலாற்றை நம்பியாண்டார் நம்பிகள் திருத்தொண்டர் திருவந்தாதியில் சுருக்கமாய்க் கூறுகிறார்.
- இவர் வாழ்ந்த காலம் ஐந்தாவது நூற்றாண்டு.
- இவர் அருளிச்செய்த நூல் திருமந்திரமாலையாகும்.
- இது 3000 பாடல்களைக் கொண்டது இதனைச் சைவத்திருமுறை பன்னிரண்டினுள் பத்தாவது திருமுறையாய்த் தொகுத்துள்ளனர்.

www.Padasalai.Net

## நூல்கள்

- திருமூலர் காவியம் 8000
- சிற்பநூல் 1000
- சோதிடம் 300
- மாந்திரீகம் 600
- வைத்தியச் சுருக்கம் 200
- சூக்கும ஞானம் 100
- சல்லியம் 1000
- பெருங்காவியம் 1500



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- யோக ஞானம் 16
- காவியம் 1000
- தீட்சை விதி 100
- ஆறாதாரம் 64
- கருங்கிடை 600
- கோர்வை விதி 16
- பச்சை நூல் 24
- விதி நூல் 24
- தீட்சை விதி 18
- திருமந்திரம் 3000

## 6. குலசேகர ஆழ்வார்

குறிப்பு:

- இவர் சேரநாட்டுத் திருவஞ்சிக் களத்தில் தோன்றியவர்.
- இவர் எழுதிய பாடல்கள் பெருமாள் திருமொழி எனப்படும்.
- அவை மொத்தம் 105 பாடல்கள் ஆகும்.
- இவர் கௌத்துவ மணியின் அம்சமாகப் பிறந்தவர்
- இவர் வடமொழியில் "முகுந்த மாலை" என்னும் நூலினை எழுதியுள்ளார்
- இவர் இராமனுக்கு தாலாட்டு பாடியவர்
- ஒவ்வொரு வைணவத் திருக்கோயிலிலும் இறைவனின் கருவறைக்கு முன் உள்ள படி "குலசேகரன் படி" என்ற பெயரில் வழங்கப்படும்
- திருவரங்கத்தின் மூன்றாம் மதிலை இவர் கட்டினார்

www.Padasalai.Net



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

### வேறு பெயர்கள்:

- கொல்லிக் காவலன்
- கூடல் நாயகன்
- கோழிக்கோ

**படைப்பு:**

- பெருமாள் திருமொழி

**மேற்கோள்:**

- ஆனாத செல்வத் தரம்பையர்கள் தற்சூழ
  வானாளுஞ் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்
  தேனார்பூஞ் சோலைத் திருவேங் கடச்சுனையில்
  மீனாய்ப் பிறக்கும் விதியுடைய னாவேனே
  மீன்னோக்கும் நீள்வயல்சூழ் வித்துவக்கோட் டம்மாஎன்
  பானோக்கா யாகிலுமுன் பற்றல்லால் பற்றில்லேன்
  தானோக்கா தெத்துயரம் செய்திடினும் தார்வேந்தன்
  கோனோக்கி வாழுங் குடிபோன் றிருந்தேனே

## 7. ஆண்டாள்

### குறிப்பு:

- பிறந்த ஊர் = ஸ்ரீவில்லிபுத்தூர்
- பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள்
- இவர் பூமகள் அம்சமாகப் பிறந்தவர்
- இவர் துளசி வனத்தில் கண்டெடுக்கப்பட்டார்
- இவருக்கு பெரியாழ்வார் இட்ட பெயர் = கோதை இறைவனுக்கும்
- ஆண்டாளுக்கும் திருமணம் நடைபெற்ற இடம் = திருவரங்கம்
- இவரின் பாடல்களைப் "பள்ளமடை" என்றும், பிற ஆழ்வார்களின் பாடல்களை "மேட்டுமடை" என்றும் குறிப்பிடுவர்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

### திருப்பாவை:

- திருப்பாவையை "வேதம் அனைத்திற்கும் வித்து" என்றவர் = இராமானுஜர்
- நாலாயிர திவ்வியப் பிரபந்தத் தொகுப்பில் மூன்றாவது பிரபந்தமாக வைக்கப்பட்டிருப்பது திருப்பாவை.
- பாவை என்பது சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று.
- பாவை என்பது இருமடியாகு பெயர்.
- திருப்பாவை பாக்கள் முப்பதும் வெண்டளையால் வந்த எட்டடி நாற்சீர் கொச்சகக் கலிப்பா வகையை சார்ந்தவை.
- இவரின் திருப்பாவை, பாவை நூல்களில் காலத்தால் முற்பட்டது. திருப்பாவைக்கு ஆண்டாள் இட்ட பெயர் = சங்கத் தமிழ் மாலை முப்பது

### சிறப்பு பெயர்:

- கோதை(பெரியாழ்வார் இட்ட பெயர்)
- சூடிக்கொடுத்த சுடர்க்கொடி
- நாச்சியார்
- ஆண்டாள்

### படைப்புகள்:

- திருப்பாவை
- நாச்சியார் திருமொழி

### மேற்கோள்:

- கற்பூரம் நாறுமோ! கமலப்பூ நாறுமோ?
  திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்து இருக்குமோ?
  மறுப்பு ஒசித்த மாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும்
  விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல் ஆழிவெண்சங்கே!
  வாரணம் ஆயிரம் சூழ வளஞ்செய்து
  நாரணன் நம்பி நடக்கின்றான் என்று



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

மானிடவர்க்கு என்று பேச்சுப் படின்
வாழகில்லேன் கண்டாய் மன்மதனே
நாராயணனே நமக்கே பறைதருவான்

## 8. சீத்தலைச் சாத்தனார்

- இவர் பௌத்தர் என்பதை இவரது பெயரே விளக்குகிறது.
- புத்தருக்குரிய பெயர்களுள் சாஸ்தா என்பதும் ஒன்று.
- இச்சொல் திரிந்து தமிழில் 'சாத்தன்' என்று வழங்குகின்றது
- 'சீத்தலை' என்னும் அடைமொழிகொண்டு சீ வழிந்தோடும் புண்ணுடைய தலையார் இவர் என்றும், பிறர் பாடும் பாட்டுக்களிற் குற்றங்கண்டால் அக்குற்றத்தைப் பொறாமல், எழுத்தாணியால் தமது தலையைக் குத்திக்கொள்ள அதனால் எப்போதும் இவர் தலையில் புண் இருந்து சீப்பிடித்திருந்தது என்றும் பொருந்தாக் கதைகளைக் கூறுவர்.
- சீத்தலை என்னும் ஊரைச் சேர்ந்தவராகையால் இவருக்குச் 'சீத்தலை' என்னும் அடைமொழி கொடுக்கப்பட்டதென்று கூறுவர்.
- மதுரைமாநகரில் இவர் கூலவாணிகஞ் செய்திருந்தமைபற்றி இவரை மதுரைக் கூலவாணிகர் சாத்தனார் என்றும் கூறுவர்.
- செங்குட்டுவனுக்கும், அவர் தம்பியாராகிய இளங்கோவடிகளுக்கும் இவர் உற்ற நண்பர்.
- இவர் காலத்தில் தான் கோவலன் பாண்டி நாட்டில் கொலையுண்டான்.
- கோவலன், கண்ணகி இவர்களின் செய்தியை இவர் செங்குட்டுவனுக்கும் இளங்கோவடிகளுக்கும் சொல்ல, அதைக் கேட்ட செங்குட்டுவன் கண்ணகியின் கற்பினைப் பாராட்டி, அவளுக்குக் கோயில் அமைத்தான்.
- இளங்கோ அடிகள் அவ்வரலாற்றினைச் சிலப்பதிகாரம் என்னும் காப்பியமாக இயற்றி, இவர் முன்னிலையில் அரங்கேற்றினார்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியாக 'மணிமேகலை' என்னும் காப்பியத்தை இவர் இயற்றி, இளங்கோ அடிகள் முன்னர் அரங்கேற்றினார்.
- மணிமேகலையை இயற்றியது மன்றி, வேறு சில செய்யுள்களையும் இவர் இயற்றியிருக்கின்றார்.
- அவை சங்கநூல்களுள் தொகுக்கப்பட்டுள்ளன.
    - நற்றிணையில் மூன்று,
    - குறுந்தொகையில் ஒன்று,
    - புறநானூற்றில் ஒன்று,
    - அகநானூற்றில் ஐந்து.
- இவர் பாடலில்,

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்" (மணிமேகலை 22-060)

என்று திருக்குறளை மேற்கோள் காட்டித் திருவள்ளுவரைப் புகழ்கின்றபடியால், இவர் திருவள்ளுவருக்குப் பிற்காலத்தவராவர்.

- இவரது காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

## 9. எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை:

### நூலாசிரியர்

- தமிழ் இலக்கியத்தை வளப்படுத்தியதில் ஐரோப்பியக் கிறித்துவச் சமயத் தொண்டர்களுக்குப் பெரும் பங்குண்டு.
- ஐரோப்பியக் கிறித்துவத் தமிழ்த் தொண்டர்களைப் போல, தமிழ்க் கிறித்துவத் தொண்டர்களும் தம் படைப்புகளால் தமிழ் இலக்கியத்தை வளப்படுத்தினர்.
- அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை ஆவார்

### வாழ்க்கை வரலாறு:

### பிறப்பு

- தமிழகத்திலுள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் கரையிருப்பு என்னும் சிற்றூரில் 1827ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23ஆம் நாள் பிறந்தவர் கிருஷ்ணபிள்ளை.
- தந்தையார் சங்கர நாராயண பிள்ளை; தாயார் தெய்வநாயகி அம்மையார்.
- இவர்கள் வைணவ சமயத்தினர்.
- ஆழ்ந்த தமிழ்ப் புலமையும் கல்வியறிவும் மிக்கவர்.
- கிருஷ்ண பிள்ளையின் தந்தை கம்பராமாயணத்தைத் தொடர் சொற்பொழிவாக விளக்கியுரைக்கும் திறம் பெற்றவர்.
- தம் புதல்வருக்கும் தக்க ஆசிரியர்கள் வாயிலாகத் தமிழ்ப் பயிற்சியும் வடமொழிப் பயிற்சியும் கொடுத்தார்.

### கிறித்துவராதலும் பணிசெயலும்:

- சாயர்புரம் திருமறைக் கல்லூரியில் தமிழாசிரியராகக் கவிஞர் பணியாற்றினார்.
- அப்பொழுது, இயேசு பெருமானின் அறக்கருத்துகளினால் ஈர்க்கப்பெற்றுக் கிறித்துவராக மாறினார்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- தமது முப்பதாம் வயதில் சென்னையிலுள்ள தூய தாமசு ஆலயத்தில் திருமுழுக்குப் பெற்றார்.
- அது முதல் ஹென்றி ஆல்பிரடு கிருஷ்ணபிள்ளை என வழங்கப்பட்டார்.
- இவர் சென்னையில் தினவர்த்தமானி என்ற இதழின் துணையாசிரியராகவும், மாநில உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியராகவும் பணியாற்றினார்.
- பின்னர், பாளையங்கோட்டை சி.எம்.எஸ்.கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும், திருவனந்தபுரம் மகாராசர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராகவும் பணி செய்தார்.
- மேலும் கிறித்தவ இலக்கியச் சங்கத்தின் ஆசிரியராகவும் பணியாற்றினார்.

## சமகால அறிஞர்கள்

- தஞ்சை வேதநாயக சாஸ்திரியார்,
- மாயூரம் வேதநாயகம் பிள்ளை,
- மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை,
- பேராசிரியர் சுந்தரம் பிள்ளை

## படைப்புகள்

- இரட்சணிய யாத்திரிகம்
- இரட்சணிய மனோகரம்(கிருத்துவர்களின் தேவாரம்)
- போற்றித் திரு அகவல்,
- இரட்சணிய சரிதம்
- இலக்கண சூடாமணி (இலக்கண நூல்)
- இரட்சணிய குறள்,
- இரட்சணிய பால போதனை

## இறப்பு

தமது 73ஆம் வயதில் கி.பி. 1900ஆம் ஆண்டு, பிப்ரவரி 3ஆம் நாள் மறைந்தார்.

www.Padasalai.Net



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

## 10. உமறுப்புலவர்:

### ஆசிரியர் குறிப்பு:

- உமறுப்புலவர் எட்டயபுரம் கடிகை முத்துப் புலவரின் மாணவர்.
- செய்கு அப்துல் காதிர் மரைக்காயர் என்ற வள்ளல் சீதக்காதியின் வேண்டுகோளின் வண்ணமே உமறுப்புலவர் சீறாப்புராணத்தை எழுதினார்.
- நூல் முடிவுறும் முன்னரே சீதக்காதி மறைந்தார்.
- பின் அபுல் காசிம் என்ற வள்ளலின் உதவியால் சீறாப்புராணம் நிறைவு பெற்றது.
- உமறுப்புலவர் முதுமொழிமாலை என்ற என்பது பாக்களால் ஆன நூலையும் படைத்துள்ளார்.

### நூல் குறிப்பு:

- சீறா என்பதற்கு வாழ்க்கை என்பது பொருள், புராணம் என்பதற்கு வரலாறு என்பது பொருள்.
- சீறாப்புராணம் என்பதற்கு நபிகள் நாயகத்தின் வாழ்க்கை வரலாறு என்று பொருள்.
- இந்நூல்
    - விலாதத்துக் காண்டம்(பிறப்பியற் காண்டம்),
    - நுபுவ் வத்துக் காண்டம்(செம்பொருட் காண்டம்),
    - ஹிஜ்ரத்துக் காண்டம்(செலவியற் காண்டம்)

  என்ற மூன்று பெரும் பிரிவுகளை உடையது.
- இந்நூலில் 5027 விருதப்பாக்கள் உள்ளன.
- பெருமானார் பிறந்ததும் இளமை நிகழ்வுகளும் திருமணமும் விலாதத்துக் காண்டத்தில் கூறப்பட்டுள்ளது.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- வானவர் ஜிப்றாயில் மூலம் திருமுறை நபிகள் பெருமானார்க்கு அருளப்பட்டதும் அதன்பின் மக்கத்தில் நடந்தவையும் நுபுவ்வத்துக் காண்டத்தில் பேசப்படுகின்றன.
- மக்கத்தை விட்டுப் பெருமானார் மதீனம் சென்றதும் தீன் நிலை நிறுத்தற்காக நிகழ்ந்த போர்களும் பிறவும் ஹிஜ்றத்துக் காண்டத்தில் வரையப்பட்டுள்ளன.
- சீறாப்புரானத்தில் நபிகளின் வாழ்வு முற்றிலுமாகப் பாடி நிறைவு செய்யப்படவில்லை.
- எனவே பனூ அகமது மரைக்காயர் என்பவர் தாம் பெருமானாரின் தூய திருவாழ்வு முழுமையும் பாடி முடித்தார்.
- அது “சின்ன சீறா” என வழங்கப்படுகிறது.

www.Padasalai.Net



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)**

**பாடம் : தமிழ்**

**பகுதி : மனோன்மணியம், பாஞ்சாலி சபதம், இரட்டுறமொழிதல், குயில் பாட்டு**

**©காப்புரிமை :**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)** க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

www.Padasalai.Net



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**மனோன்மணியம்**

**நூல் குறிப்பு:**

- நாடகக் காப்பியங்களால் சிறப்புப் பெற்று விளங்கும் வடமொழிக்கு ஈடாக நடிப்புப் செவ்வியும் இலக்கியச் செவ்வியும் ஒருங்கே அமையப் பெற்றது இந்நாடகம்.
- இந்நாடகம் லிட்டன் பிரபு என்பார் ஆங்கிலத்தில் எழுதிய “இரகசிய வழி” என்ற நூலைத் தழுவி அமைந்தது.
- எனினும் இது வழிநூல் என்னாது முதல் நூல் எனவே கொள்ளப்பெறும் சீர்மையுடையது.
- அங்கங்களையும் காட்சிகளையும் அமைத்து எழுதுவது நாடக நன்னூல் மரபு.
- இந்நாடகம் 5 அங்கங்களையும் 20 காட்சிகளையும் கொண்டு விளங்குகிறது.
- இடையே சிவகாமி சரிதம் என்னும் துணைக் கதை ஒன்றும் இடம் பெற்றுள்ளது.

**ஆசிரியர் குறிப்பு:**

- பேராசிரியர் பெ.சுந்தரம்பிள்ளை, கேரள மாநிலம் ஆலப்புழையில் பிறந்தவர்.
- பெற்றோர் = பெருமாள் பிள்ளை, மாடத்தி அம்மையார்.
- இவர் திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் தத்துவப் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.
- இவர் இயற்றிய நூல்கள்
    - நூல் தொகை விளக்கம்,
    - திருஞானசம்பந்தர் கால ஆராய்ச்சி,
    - திருவிதாங்கூர்ப் பண்டை மன்னர் கால ஆராய்ச்சி
- அந்நாளைய சென்னை மாகாண அரசு இவருக்கு ராவ்பகதூர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.
- இவரது நீராருங்கடலுடுத்த என்ற தமிழ் வாழ்த்துப்பாடலே தமிழக அரசின் தமிழ்த்தாய் வாழ்த்தாக ஏற்கப்பட்டுள்ளது.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**கா.சு.பிள்ளை கூற்று:**

- 'தமிழ் இலக்கியத்தில் கால ஆராய்ச்சியைத் தொடங்கி வைத்த பெருமை இவருடையதே" என்கிறார்.

**மொழிப்பெயர்ப்பு நூல்கள்:**

- இவர் திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை, மதுரைக்காஞ்சி ஆகியவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்

**கதை:**

- மதுரையை ஆண்ட பாண்டிய மன்னன் ஜீவகன்.
- அமைச்சர் குடிலன் வஞ்சகம் மிக்கவன்.
- ஜீவகன் மதுரையை விட்டு திருநெல்வேலியில் கோட்டை அமைத்து அங்கு தங்கினான்.
- சுந்தர முனிவர் கோட்டையில் தனக்கு ஒரு அறை பெற்று அதில் சுரங்க வழியை அமைத்தார்.
- ஜீவகனின் மகள் மனோன்மணி.
- இவள் சேர நாட்டு அரசன் புருடோத்தமனை கனவில் கண்டு காதல் கொள்கிறாள்.
- அமைச்சன் குடிலனின் மகன் பலதேவனை, சேர அரசனிடம் தூது அனுப்பினான் மன்னன்.
- பலதேவனின் முறையற்ற பேச்சால் சினம் கொண்ட சேர அரசன் பாண்டிய நாடு மீது போர் தொடுத்தான்.

**சொற்பொருள்:**

- செந்தழல் - வேள்வியில் மூட்டுகிற நெருப்பு
- வானோர் - தேவர்கள்
- இந்தனம் - விறகு
- உகம் - யுகம்
- திருந்தலீர் - பகைவர்கள்
- செயமாது - வெற்றித் திருமகள்(விசயலட்சுமி)
- காயம் - உடம்பு



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**இலக்கணக்குறிப்பு:**

- செந்தழல் - பண்புத்தொகை
- ஆகுக - வியங்கோள் வினைமுற்று
- போர்க்குறி - ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
- கனங்கணம் - அடுக்குத்தொடர்

**பாஞ்சாலி சபதம்**

**நூல் குறிப்பு:**

- இந்த இதிகாச கதையை எளிய சொற்கள், எளிய நடை, எளிய சயந்தம், ஆகியவற்றுடன் கூடிய பெண்ணுரிமைக் காப்பியமாகத் தமிழில் பாரதி வடித்துத் தந்ததே பாஞ்சாலி சபதம்.
- பாஞ்சாலி சபதம் வியாசரின் பாரதத்தை தழுவி எழுதப் பெற்றது.
- பாஞ்சாலி சபதம் - 2 பாகம், 5 சருக்கம், 412 பாடல்கள்
- இது ஒரு குறுங் காப்பியம் ஆகும்.

**5 சறுக்கங்கள்:**

- ❖ சூழ்ச்சி சருக்கம்,
- ❖ சூதாட்டச் சருக்கம்,
- ❖ அடிமைச் சருக்கம்,
- ❖ துகிலுரிதல் சருக்கம்,
- ❖ சபதச் சருக்கம்

- தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை என்று கூறியவர் பாரதிதாசன்.

**சிறப்புப்பெயர்கள்:**

- ❖ பாரதி
- ❖ பாட்டுக்கொரு புலவன்,
- ❖ நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா,



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- ❖ தற்கால இலக்கியத்தின் விடிவெள்ளி,
- ❖ தேசியக்கவி,
- ❖ மாக்கவி
- ❖ மகாகவி
- ❖ மக்கள்கவி

- சுதேச மித்ரன், இந்தியா முதலிய இதழ்களின் ஆசிரியராக இருந்தார்.

**சூழ்ச்சி சருக்கம்**

- அத்தினாபுர மன்னன் துரியோதனன் பாஞ்சாலியின் நகைப்புக்கு ஆளாதனால் பாண்டவர் வாழ்வை எப்படியாவது அழிக்க வேண்டும் என்று எண்ணினான்.
- அதற்காகத் துரியோதனன் தன் மாமன் சகுனியை நாடினான். சகுனி, நாமும் ஒரு மண்டபம் அமைத்து , அதனைக் காண்பதற்கு பாண்டவர்களை அழைப்போம் . தருமனை சூதாட செய்து நாம் நினைத்ததை முடிப்போம் என்றான்.
- இத்திட்டத்திற்கு முதலில் துரியோதனனின் தந்தை திருதராட்டிரன் ஒப்புக்கொள்ளவில்லை. பின்னர் விதியின் வலிமையை எண்ணி ஒப்புக்கொண்டான்.
- மண்டபத்தைக் காண பாண்டவரை அழைத்து வருமாறு தம்பி விதுரனைத் தூது விட்டான்.
- விதுரனைத் தூது விடல் , தூது சென்ற விதுரன் பாண்டவரின் நாட்டு வளங் கண்டு மகிழ்தல் , பாண்டவர்கள் விதுரனை எதிர்கொண்டு வரவேற்றல் ஆகிய நிகழ்வுகள் இப்பாடப் பகுதியில் இடம் பெற்றுள்ளன.

**விதுரனை தூதுவிடல்**

**தம்பி விதுரனை மன்னன் அழைத்தான்**

**தக்க பரிசுகள் கொண்டினி தேகி**

**எம்பியின் மக்க ளிருந்தர சாளும்**

**இந்திர மாநகர் சார்ந்தவர் தம்பால்**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**"கொம்பினை யொத்த மடப்பிடி யோடும்**

**கூடியிங் கெய்தி விருந்து களிக்க**

**நம்பி அழைத்தனன் கௌரவர் கோமான்**

**நல்லதோர் நுந்தை" யெனவுரை செய்வாய்.**

**பொருள்:**

- மன்னன் திருதராட்டிரன் தன்தம்பி விதுரனை அரண்மனைக்கு அழைத்தான்.
- பாண்டுவின் மக்கள் ஆட்சி செய்யும் இந்திர மாநகருக்குத் தக்க பரிசுகளுடன் சென்று, பாஞ்சாலியோடு பாண்டவரைத் தாம் விருந்துக்கு அழைத்த செய்தியை அவர்களிடம் கூறி அழைத்து வருமாறு பணித்தான்.

**சொற்பொருள்:**

எம்பி - என் தம்பி

மடப்பிடி - பாஞ்சாலி

களிக்க - மகிழ

கோமான் - அரசன் (திருதராட்டிரன்)

நுந்தை - நும் தந்தை

**அண்ணனிடம் விடைபெற்று விதுரன் சென்றான்**

**அடவிமலை யாறெல்லாம் கடந்து போகித்**

**திண்ணமுறு தடந்தோளும் உளமுங் கொண்டு**

**திருமலியப் பாண்டவர்தாம் அரசு செய்யும்**

**வண்ணமுயர் மணிநகரின் மருங்கு செல்வான்**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**வழியிடையே நாட்டினுறு வளங்கள் நோக்கி**

**எண்ணமுறல் ஆகித்தன் இதயத் துள்ளே**

**இனையபல மொழிகூறி யிரங்கு வானால் .**

**பொருள்:**

- தன் தமையனாகிய திருதராட்டிரனிடம் விதுரன் விடை பெற்றான் ; காடு, மலை, ஆறு ஆகியவற்றையெல்லாம் கடந்து , வலிமை மிக்க தோளும் மனஉறுதியும் கொண்ட பாண்டவர்கள் ஆட்சிபுரியும் வளமிக்க அழகிய நகரை நோக்கிச் சென்றான்.
- செல்லும் வழியெல்லாம் நாட்டின் மிகுந்த வளங்களைக் கண்டு , தன் எண்ணத்தில் இருத்தி , உள்ளம் நெகிழ்ந்து , அந்நாட்டின் எதிர்காலம் கருதி இரக்கப்பட்டான்.

**சொற்பொருள்**

அடவி - காடு

தடந்தோள் - வலியதோள்

மணிநகர் - அழகிய நகரம்

மருங்கு - பக்கம்

**நீல முடி தரித்தபல மலைசேர் நாடு**

**நீரமுத மெனப்பாய்ந்து நிரம்பு நாடு**

**கோலமுறு பயன்மரங்கள் செறிந்து வாழுங்**

**குளிர்காவுஞ் சோலைகளுங் குலவு நாடு**

**ஞாலமெலாம் பசியின்றிக் காத்தல் வல்ல**

**நன்செய்யும் புன்செய்யும் நலமிக் கோங்கப்**

**பாலடையும் நறுசெய்யும் தேனும் உண்டு**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**பண்ணவர்போல் மக்களெலாம் பயிலு நாடு**

**பொருள்:**

- நீல மேகங்கள் தவழ்கின்ற பல மலைகளைக் கொண்ட நாடு ; மலைகளிலிருந்து வருகின்ற நீரானது அமுதமாகப் பாய்ந்து வளஞ் செய்கின்ற நாடு.
- அழகு மிக்க பயன்தரு மரங்கள் நிறைந்த குளிர்ந்த காடுகளும், பூக்கள் நிறைந்த சோலைகளும் கலந்திருக்கின்ற நாடு.
- உலகில் வாழ்கின்ற மக்களை பசியின்றி காப்பதற்கு ஏற்ற நன்செய் , புன்செய்ப் பயிர்கள் செழித்து வளம் சேர்க்கின்ற நாடு . பாலாடை, நறுமண நெய் , தேன் ஆகியவற்றை உண்டு தேவர்கள் போல் மக்கள் மகிழ்ந்திருக்கின்ற நாடு.

**சொற்பொருள்:**

கோலமுறு - அழகுமிக்க

செறிந்து - அடர்ந்து

கா - காடு

குலவு - விளங்கும்

ஞாலம் - உலகம்

பண்ணவர் - தேவர்

**பேரறமும் பெருந்தொழிலும் பிறங்கு நாடு**

**பெண்களெல்லாம் அரம்பையர்போல் ஒளிறு நாடு**

**வீரமொடு மெய்ஞ்ஞானந் தவங்கள் கல்வி**

**வேள்வியெனு மிவையெல்லாம் விளங்கு நாடு**

**சோரமுதற் புன்மையெதுந் தோன்றா நாடு**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**தொல்லுலகின் முடிமணி போல் தோன்று நாடு**

**பாரதர்தந் நாட்டிலே நாசா மெய்தப்**

**பாவியேன் துணைபுரியும் பான்மை யென்னே!**

**பொருள்:**

- சிறப்பு மிக்க அறச்செயல்களாலும் பெருமைமிகு தொ ழில் வளத்தாலும் சிறப்புற்ற நாடு
- பெண்கள், தேவமகளிர் போல் ஒளிர்கின்ற நாடு
- வீரம், மெய்யறிவு, தவம், கல்வி, வேள்வி ஆகிய இவையனைத்தும் நிறைந்த நாடு
- நெறி பிறழ்ந்த செயல்கள் இந்நாட் டில் இல்லாத காரணத்தால் பழமையான இவ்வுலக மக்களுக்கு மணிமுடி போல் தோன்றுகின்ற நாடு
- இத்தகைய பாண்டவர் நாடு அழியும் பாவச்செயலுக்குத் தானும் துணை புரிய நேர்ந்ததனை எண்ணி விதுரன் வருந்தினான்.

**சொற்பொருள்**

அரம்பையர் - தேவமகளிர்

ஞானம் - அறிவு

புன்மை - நெறி பிறழ்ந்த செயல்கள்

**விதுரன் வருஞ் செய்தி தாஞ்செவி யுற்றே**

**வீறுடை ஐவர் உளமகிழ் பூத்துச்**

**சதுரங்கச் சேனை யுடன்பல பரிசும்**

**தாளமும் மேளமும் தாம்கொண்டு சென்றே**

**எதிர்கொண் டழைத்து மணிமுடி தாழ்த்தி**

**ஏந்தல் விதுரன் பதமலர் போற்றி**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**மதுர மொழியிற் குசலங்கள் பேசி**

**மன்ன னொடுந்திரு மாளிகை சேர்ந்தார்.**

**பொருள்:**

- விதுரன் வருகின்ற செய்தியைக் கேட்ட வலிமை மிக்க பாண்டவர் ஐவரும் பெரு மகிழ்ச்சி அடைந்தனர்.
- நால்வகைப் படைகளுடன் பல பரிசுகளுடன் கொண்டு மேளதாளத்துடன் விதுரனை எதிர்கொண்டு அழைத்து மணிமுடி தாழ்த்திச் சிறப்புக்குரிய அவர்தம் திருவடி மலர்களை வணங்கினர்.
- இனிய மொழியில் நலம் கேட்டனர் . மன்னர் குலத் தோன்றலான விதுரனை அழைத்துக்கொண்டு தம் அரண்மனைக்குச் சென்றனர்.

**சொற்பொருள்:**

| | | |
|---|---|---|
| வீறு | - | வலிமை |
| சதுரங்கச் சேனை | - | நால்வகைப் படை |
| மதுர மொழி | - | இனிய மொழி |
| குசலங்கள் பேசி | - | நலன் கேட்டு |

**நூல் குறிப்பு:**

- வியாசரின் மகாபாரதத்தைத் தழுவி பாரதியாரால் எழுதப்பட்ட காப்பியம் பாஞ்சாலி சபதம்.
- பாஞ்சாலி சபதம்: 5 சருக்கங்கள்- 412 பாடல்
    - ❖ சூழ்ச்சிச் சருக்கம்,
    - ❖ சூதாட்டச் சருக்கம்,
    - ❖ அடிமைச் சருக்கம்,
    - ❖ துகிலுரிதல் சருக்கம்,
    - ❖ சபதக் சருக்கம்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- "தமிழ்மொழிக்கு அழியாத உயிரும் ஒளியும் இயலுமாறு இனிப் பிறந்து காவியங்கள் செய்யப்போகிற வர கவிகளுக்கும் அவர்களுக்குத் தககவாறு 'கைங்கரியங்கள்' செய்யப்போகிற பிரபுக்களுக்கும் இந்நூலைப் பாதகாணிக்கையாகச் செலுத்துகின்றேன்" என்று பாஞ்சாலி சபதத்தின் முகவுரையில் பாரதியார் குறிப்பிடுகிறார்.
- பாரதியாரின் முப்பெரும் படைப்புகள்: குயில் பாட்டு, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம்

**பாரதியார் குறிப்பு:**

- இயற்பெயர்: சுப்ரமணிய பாரதியார்.
- பிறந்த இடம் : எட்டயபுரம் ( தூத்துக்குடி)
- காலம்: 11.12.1882 - 11.09.1921
- பெற்றோர்:சின்னசாமி- இலக்குமி அம்மையார்
- துணைவி - செல்லம்மாள்

**நூல்கள்**:

- குயில் பாட்டு,
- கண்ணன் பாட்டு,
- பாப்பா பாட்டு
- பாஞ்சாலி சபதம்

**உரைநடை இலக்கியங்கள்:**

- ஞானரதம்,
- சந்திரிகையின் கதை,
- தராசு

- நாடு, மொழி, இறை, பெண்மை முதலிய பாடுபொருள்களில் எண்ணற்ற பாடல்கள் இயற்றினார்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

# தனிப்பாடல் - இரட்டுறமொழிதல்

## இரட்டுற மொழிதல் (சிலேடை)

- இரண்டு +உற +மொழிதல் = இரட்டுற மொழிதல் இரண்டு பொருள்படப்பாடுவது
- ஒரு சொல்லோ அல்லது சொற்றொடரோ இருவகைப் பொருளைத்தருமாறு அமைத்துப் பாடுவது சிலேடை அல்லது இரட்டுற மொழிதல் எனப்படும்.

## சொற்பொருள்:

- சுழி - உடல்மீது உள்ள சுழி, நீர்ச்சுழி
- துன்னலர் - பகைவர், அழகிய மலர்
- சாடும் - தாக்கும், இழுக்கும்

## ஆசிரியர் குறிப்பு:

- பெயர்: காளமேகப்புலவர்
- பிறந்த ஊர்: கும்பகோணத்திற்கு அருகில் உள்ள "நந்திக்கிராமம்" எனவும், விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள "எண்ணாயிரம்" எனவும் கூறுவர்.
- இயற்பெயர்: வரதன்
- பணி: திருவரங்க மடைப்பள்ளியில் பணிபுரிந்தார். வைணவ சமயத்தில் இருந்து சைவசமயத்திற்கு மாறினார்.
- சிலேடைக் கவி பாடுவதில் வல்லவர்
- வசைபாடக் காளமேகம் என்று புகழப்பட்டவர்.
- 'வாசவயல் நந்தி வரதா திசையனைத்தும் வீசுகவி காளமேகமே' என்று காளமேகத்தைப் பற்றி அதிமதுரகவி என்பவர் பாடுகையில் குறிப்பிடுவதைக் கொண்டு காளமேகத்தின் இயற்பெயர் வரதன் என்பர்.
- இயற்றிய பிற நூல்கள:; திருவானைக்கா உலா, சரஸ்வதி மாலை, பரப்பிரம்ம விளக்கம், சித்திர மடல்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

காளமேகப் புலவர் பாடிய சிலேடை

1. வைக்கோலுக்கும், யானைக்கும்,
2. பாம்புக்கும் வாழைப்பழத்திற்கும்,
3. பாம்புக்கும் எள்ளுக்கும்,
4. தேங்காய்க்கும் நாய்க்கும்,
5. மீனுக்கும் பேனுக்கும்,
6. பனைமரத்திற்கும் வேசிக்கும்

எனப் பல்வேறு சிலேடை பாடியுள்ளார்.

- பாம்பிற்கும் வாழைப்பழத்திற்கும் சிலேடையாக அமைக்கப்பட்டிருக்கும் காளமேகப் புலவரின் பாடல்

நஞ்சிருக்கும் தோலுரிக்கும் நாதன் முடிமேலிருக்கும்
வெஞ்சினத்துப் பற்பட்டால் மீளாது விஞ்சுமலர்த்
தேம்பாயுஞ் சோலைத் திருமலைராயன் வரையில்
பாம்பாகும் வாழைப்பழம்

**பெயர் காரணம்:**

- “கார்மேகம் போல்” கவிதை பொழியும் ஆற்றல் பெற்றதால், இவர் “காளமேகப்புலவர்” என அழைக்கப் பெற்றார். இவர், இருபொருள் அமைய நகைச்சுவையுடன் பாடுவதில் வல்லவர்.

**நூல் குறிப்பு:**

- புலவர் பலர், பல்வேறு சூழ்நிலைக்கு ஏற்ப அவ்வப்போது பாடிய பாடல்களின் தொகுப்பே “தனிப்பாடல் திரட்டு”.
- இதனை, இராமநாதபுரம் மன்னர் பொன்னுசாமி வேண்டுதலுக்கிணங்க, சந்திரசேகர கவிராசப் பண்டிதர் தமிழகம் முழுவதம் சென்று தேடித் தொகுத்தார்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

## மரமும் பழைய குடையும்

### சொற்பொருள்:

- கோட்டு மரம் - கிளைகளை உடைய மரம்
- பீற்றல் குடை -பிய்ந்த குடை

### ஆசிரியர் குறிப்பு:

- அழகிய சொக்கநாதப் புலவர் திருநெல்வேலி மாவட்டத்தில் தச்சநல்லூரில் பிறந்தவர்.
- இவரின் காலம் கி.பி.19 ஆம் நூற்றாண்டு.

## குயில் பாட்டு

### ஆசிரியர் குறிப்பு:

- பாரதியார் தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் சின்னசாமி ஐயருக்கும், இலக்குமி அம்மையாருக்கும் மகனாகத் தோன்றினார்.
- தேசியக்கவி, மகாகவி எனப் போற்றப்படுபவர்.
- இந்தியா, விஜயா என்னும் இதழ்களை வெளியிட்டார்.
- சுதேசமித்திரன் என்ற இதழின் உதவி ஆசிரியராகவும் பணியாற்றினார்.
- குயில்பாட்டு ஒரு தத்துவ படைப்பாகும்
- பாரதியார் புதுவையில் இருக்கும்போது குயில்பாட்டை இயற்றினார்.
- 'காதல் காதல் காதல் காதல் போயின் சாதல் சாதல் சாதல் என்ற வரி குயில் பாட்டில் இடம்பெற்றுள்ளது.
- 'பாரதி' பட்டம் - 11 வயதில் கவிப்புலமையின் காரணமாக '**எட்டயபுரம் சமஸ்தானம்**' கொடுத்தது.

www.Padasalai.Net



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**மொழிப்புலமை** -

- ❖ தமிழ்
- ❖ ஆங்கிலம்
- ❖ இந்தி
- ❖ சமஸ்கிருதம்
- ❖ வங்காளமொழி
- ❖ வடமொழி பயின்ற கல்லூரி - காசி இந்து கல்லூரி அலகாபாத் பல்கலைக்கழகம்

- புகுமுகத் தேர்வில் முதன்மை அரசவைக் கவிஞர் பணி
- 1902 - எட்டயபுரம் சமஸ்தானம் தமிழாசிரியர் பணி
- 1904 - சேதுபதி உயர்நிலைப்பள்ளி (மதுரை) வால்ட் விட்மன் - பாரதியின் புதுக்கவிதைக்கு முன்னோடியாக இருந்தவர்.

## சிறப்புப் பெயர்

- ➢ தேசியக்கவி
- ➢ மகாகவி - வ.ரா. (ராமசாமி ஐயங்கார்)
- ➢ விடுதலைக்கவி
- ➢ தற்கால இலக்கியத்தின் விடிவெள்ளி
- ➢ பாட்டுக்கொரு புலவன் பாரதி - கவிமணி
- ➢ நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா -பாரதிதாசன்

## புனைப்பெயர்கள்

- ➢ காளிதாசன்
- ➢ சக்திதாசன்
- ➢ சாவித்திரி
- ➢ ஓர் உத்தம தேசாபிமானி
- ➢ நித்திய தீரர்.

## பாரதி - புகழுரைகள்

"**தமிழால் பாரதி தகுதி பெற்றதும்**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**தமிழ் பாரதியால் தகுதி பெற்றதும்**" பற்றி என்னென்று சொல்வது - பாரதிதாசன்

"**பாரதியை நினைத்திட்டாலும் சுதந்திரத்தின்**

**ஆவேசம் சுருக்கென்று ஏறும்; இந்தியன் நான் என்றிடும் நல் இறுமாப்பு உண்டாம்**" - நாமக்கல் கவிஞர்.

"**பாரதியார் ஒரு அவதார புருஷர் இவர் நூலைத் தமிழர் வேதமாகக் கொள்வார்களாக".**

## இயற்றிய நூல்கள்

### முப்பெரும் கவிதை பாடல்கள்

1. கண்ணன் பாட்டு
2. குயில் பாட்டு
3. பாஞ்சாலி சபதம்

### உரைநடை இலக்கியம்

1. ஞானரதம்
2. சந்திரிகையின் கதை
3. தராசு
4. நவதந்திர கதைகள்

### சிறுகதைகள்

1. சின்ன சங்கரன் கதை
2. ஆறில் ஒரு பங்கு
3. ஸ்வர்ணகுமாரி கதை

### பாடல்கள்

1. சுதந்திரப்பாடல்கள்
2. தேசியப்பாடல்கள்
3. தலைவர் வாழ்த்துக்கள்
4. பக்தி பாடல்கள்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

5. சமூகப்பாடல்கள்
6. புதிய ஆத்திசூடி
7. பாப்பா பாட்டு

## பத்திரிக்கைப்பணி

- "**விவேக பானு** " - பாரதியின் 'தனிமை இரக்கம் ' பாடல் முதன் முதலாக இந்நாலேட்டில் வெளிவந்தது.
- **சுதேசமித்திரன்** - 1904 - துணையாசிரியராகப் பொறுப்பு - தினசரி இதழ்

## ஆசிரியர்பணி

1. **சக்ரவர்த்தினி** - 1905 இதழைத்தொடங்கினார் (மாத இதழ்)
2. **இந்தியா** -1907-வாரப்பத்திரிக்கை
3. **பாலபாரதம்** - 1908 - ஆங்கில இதழ்
4. **விஜயா கர்மயோகி** - 1909
5. **சூரியோதயம்** - 1910

## மேற்க்கோள் பாடல்கள்

- "**தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் சகத்தினை அழித்திடுவோம்**"

- "**காக்கை குருவி எங்கள் சாதி - நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம்**"

- "**யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவ தெங்கும் காணோம்**"

- "**செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே**"

- "**பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்.**"



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்."

- "சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே - அதைத் தொழுது படித்திடடி பாப்பா"

- "மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்"

- "ஏழை என்றும் அடிமை என்றும் எவரும் இல்லை சாதியில்"

- "நமக்குத் தொழில் கவிதை நாட்டிற்கு உழைத்தல்"

- "எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம் எல்லாரும் இந்நாட்டு மன்னர்."

- "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு - நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வு"

- "காதல் காதல் காதல்
  காதல் போயின் காதல் போயின்
  சாதல் சாதல் சாதல்"\

- "செப்புமொழி பதினெட்டு உடையாள் - எனினும் சிந்தனை ஒன்றுடையாள்"

- "தருமத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும் தருமம் மறுபடியும் வெல்லும்"

- "செந்தமிழ் நாடென்னும் போதினிலே"

- "சிந்து நதியின் மிசை……"



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- **“வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு”**

## சொற்பொருள்:

- வாரி - கடல்
- கோற்றொடியார் - பெண்கள்(உலக்கையைத் தொடியணிந்த கையில் கொண்ட பெண்கள்)
- குக்குவென - நெல்லடிக்கும் பொது பெண்கள் ஏற்படுத்தும் ஒலிக்குறிப்பு
- பண்ணை - வயல்வெளி
- வேய் - மூங்கில்

## இலக்கணக்குறிப்பு:

- கானப்பறவை - ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
- நீரோசை - ஆறாம் வேற்றுமைத் தொகை
- பெருங்கடல் - பண்புத்தொகை
- பழகு பாட்டு - வினைத்தொகை

www.Padasalai.Net



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com